

கல்கி
KALKI 30-7-72 45 காசு


for that millionaire look
Century
for 100% cotton
textiles
CENTURIZED
PRESHRUNK FABRIC
THE
CENTURY
SPG. & MFG. CO. LTD.,
BOMBAY 25 DD
Century's
Cosy-Cot
cotton SHIRTINGS
with Rich Woollen Feel
For Fashion Fabrics choose
Century Shirtings!
NPS-CM 16

கல்கி

பொருளடக்கம்




''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பரிதாபி ஆடி. 15 ★ ஜூலை 30, 1972

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை(இலங்கைநாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

உங்கள் சிறுதர தொழில் வளர்ந்து பெருகுவதற்கு அதிக மூலதனம் தேவைப்படுகிறது.



அது உங்களுக்குக் கிடைக்கக்கூடிய இடம் எது?
யூகோபாங்க்

நீங்கள் சிறுதர தொழிலதிபராயிருந்தால் யூகோபாங்க் உங்களுக்குப் பண உதவி செய்வதில் விசேஷ முதலிடம் அளிக்கின்றது. நாங்கள் அளிக்கும் அந்த உதவி, உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கும் வாழ்க்கை வளத்துக்கும் காரணமாகும் வகையானதாக இருக்கும்.

உங்கள் தேவைகளை நாங்கள் அறிவோம். தொழிலில் அதிக லாபம் அடையவேண்டிய முதலீடு செய்ய உங்களுக்கு அதிக மூலதனம் தேவைப்படுகிறது. இயந்திரங்களை அல்லது கச்சாப்பொருள்களை வாங்குவதற்கு உதவி அளிக்கின்றோம். புதுத் தொழிலை ஆரம்பிக்கவும் அல்லது இருக்கும் தொழிலை விரிவாக்குவதற்கும், தொழிலை நன்கு நடத்துவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கும் நாங்கள் பண உதவி அளிக்கின்றோம். இந்த உதவிகள் எல்லாம் நியாயமான வட்டி விகிதத்திலேயே அளிக்கப்படுகின்றன.

யூகோபாங்க், நீங்களே உங்கள் வளத்துக்கு உதவி செய்து கொள்ள உதவுகிறது.

மற்ற விவரங்களுக்கும் அனுபவமிகுந்த ஆலோசனைக்கும் உங்களருகிலிருக்கும் யூகோபாங்க்கின் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

UCO-7/71

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது

கல்கி

மலர் 31
இதழ் 53

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

"இதோ ஒரு துரும்பை எடுத்துவிட்டோம்!"

கிளர்ச்சியும் துப்பாக்கிச் சூடும் உயிர்ச் சேதமும் இல்லாமலே ஏற்பட்டிருக்க வேண்டிய சமரசப் பேச்சு வார்த்தைகள், இவை எல்லாம் நிகழ்ந்த பிறகாவது நடந்ததே என்று ஓரளவு ஆறுதல் அடையலாம். பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழக அரசும், விவசாயிகள் பிரதிநிதிகளும் சமரச மனப்பான்மையுடனேயே நடவடிக்கைகளை மேற்கொண்டதையும், அதன் விளைவாக அமைதி உண்டாகியிருப்பதையும் எல்லோருமே வரவேற்கின்றனர்.

ஆனால் பிரச்னைகள் முழுவதும் தீர்ந்துவிடவில்லை. விவசாயிகளின் பன்னிரண்டு அம்சக் கோரிக்கைகளில் எல்லாமே பேசி முடிக்கப்படவும் இல்லை. பல அம்சங்கள் நீண்ட பரிசீலனைக்குப் பிறகே தீர்க்கப்பட வேண்டியவை. பின் இப்போது ஏற்பட்டது என்ன? மின் கட்டண உயர்வை முக்கிய காரணமாக வைத்துக் கிளர்ச்சி நடத்தப்பட்டதால், அதில் சிறிது சலுகை காட்டப்பட்டிருக்கிறது. அதாவது, மாதம் 1000 யூனிட்டுகள் செலவாகும் கிணற்றுப் பாசன விஷயத்தில் பழைய கட்டணங்களும், புதிய கட்டணங்களும் ஏறக்குறைய ஒன்றுதான் என்று சொல்லும்படி கண் துடைப்புக்காக இரண்டரை சதம் முதல் மூன்று சதம் வரையில் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் செலவிடும் விவசாயிகள் விஷயத்தில் புதிய விகிதங்கள் சிறிது அதிகம் என்று கூடச் சொல்ல வேண்டும். சிறிய விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சலுகை ஒட்டகத்தின் முதுகின் மேலேயுள்ள ஒரு துரும்பைக் கீழே போட்டுவிட்டுப் பளுவைக் குறைத்திருக்கிறோம் என்று சொல்லுவதுபோல் தான். ஒட்டகம் ஏமாந்து போகலாம்; விவசாயிகள் ஏமாற மாட்டார்கள்.

விவசாயிகளுடைய பிரச்னைகள் அடிப்படையானவை. விவசாயத்தில் உற்பத்திச் செலவு அதிகம். கோவை மாவட்டத்தில் இருநூறு அடிக்குக் கீழேதான் தண்ணீர் கிடைக்கிறது. கிணறு வெட்ட 25,000, 30,000 ரூபாய் செலவாகிறது. பம்பு செட் வாங்க நிறையப் பணம் வேண்டியிருக்கிறது. இரண்டு கட்டத்தில் மோட்டார்கள் வைத்தே தண்ணீரை உயரக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. சாகுபடிச் செலவுகள் மாவட்டத்துக்கு மாவட்டம் மாறுபடுகிறது.

மேலும், வருமான வரி விஷயத்தில் தரப் பாகுபாடும், 'பயிர்வாரி' முறைப்படி ஸ்டாண்டர்டு ஏக்கர் விகிதம் கணக்கிடுவதில் உண்டாகும் சிக்கல்களும், நடைமுறையில் விவசாயத்தை லாபம் இல்லாத தொழிலாகச் செய்துவிட்டிருக்கின்றன. வருமான வரியிலிருந்து விலக்குக்கு ஏழரை ஏக்கரா என்ற வரம்பு உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும், வாங்கியுள்ள கடன்களைத் திருப்பித் தருவதற்கு ஒத்திவைப்புக் கோரிக்கையும், விவசாயம் எந்த அளவுக்குக் கட்டுப்படியாகாத தொழிலாக ஆகிவிட்டது என்பதையே காட்டுகின்றன.

விவசாயிகளின் நிலை பற்றியும், விவசாயத்திலுள்ள லாபநஷ்டங்கள் குறித்தும், விவசாய மக்களின் பொருளாதார நிலைமையும் அவர்கள் இப்போது செலுத்திக் கொண்டு வரும் வரிகள், கட்டணங்கள் எல்லாம் அவர்களுக்கு எந்த அளவுக்குச் சுமையாக இருக்கின்றன என்ற விவரங்களையும் ஆராய்ந்தறிய அரசியல் சார்பற்ற தனிக் கமிட்டி ஒன்றைத் தமிழ்நாட்டு அரசாங்கம் நியமிப்பது நல்லது. அரசாங்கத்தின் உறுப்பினர்களைத் தவிர விவசாயம் நடத்துபவர்களிலிருந்தும், பொதுமக்களில் விஷயம் அறிந்தவர்களிலிருந்தும், பிரதிநிதிகளை இக்குழுவில் இடம் பெற வைத்து, உண்மை நிலையை ஆராய்ந்தறிவது அவசியம். அதன் சிபாரிசுகளின் பேரில்தான் விவசாயிகள் மீது போடப்படும் வரியும் இருத்தல் வேண்டும். நியாயமும், நேர்மையும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால், சமரசத்தினால் ஏற்பட்டுள்ள அமைதியை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டுமானால் கட்சி நோக்கத்தையும், அரசியல் கண்ணோட்டத்தையும் விட்டு விவசாய மக்களின் நலனையும் தமிழக மக்களின் பொதுவான சுபிட்சத்தையும் மட்டுமே கருத்தில் கொண்டு கிளர்ச்சிக்கான அடிப்படை விஷயங்கள் அனைத்தையும் அலசிக் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்

டும் போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்த வீர விவசாயிகளுக்கு அரசு செலுத்த வேண்டிய காணிக்கை இது.

சமரசம்தான் பேசியாகி விட்டதே, துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றிய நீதிவிசாரணை எதற்கு, விட்டுவிடலாமா என்று அரசாங்கம் நினைக்கக்கூடும். ஆனால் ஜனநாயகப் பண்பினைக் காப்பாற்ற வேண்டுமானால் விசாரணையைக் கைவிடுவது கூடாது. எந்தத் துப்பாக்கிப் பிரயோகமாயினும், உயிர்ச் சேதம் ஏற்பட்டால், விசாரணை இருந்தே ஆக வேண்டும். அது கட்சி விஷயமல்ல. பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய விஷயம் என்பதை உணர்ந்து அரசு ஒதுங்கியிருந்து விசாரணை நடத்தட்டும்!

கொள்ளையர் மனமும் அதிகார மனமும்


சம்பல் பள்ளத்தாக்கில் கொலையும் கொள்ளையும் நடத்தும் பெருங்கூட்டத்தினரில் பலருடைய இதயத்தில் ஓர் அற்புத மாறுதலை உண்டாக்கி வரும் சர்வோதயத் தலைவர்கள் வினோபாஜியையும் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் அவர்களையும் நாளிலம் முழுதும் போற்றுகிறது. பெயரெடுத்த கொள்ளையர் பலர் இவர்களிடம் தாமாகச் சரண் புகுந்ததைக் கண்டு அன்பின் சக்தி இன்னும் அற்றுப் போய்விடவில்லை, இயேசுநாதரும் காந்திஜியும் கடைப்பிடித்த கொள்கை இன்றும் காரியசாத்தியமானதே என்று பலர் புத்துணர்ச்சி பெற்றுள்ளனர். இந்த நல்ல தருணத்தில் மத்தியப் பிரதேச சர்க்காரின் போக்கு மிகவும் விசித்திரமாக உள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு பெற்ற சர்க்கார் தனது போலீஸ் பட்டாளத்தைக் கொண்டும் சமாளிக்க முடியாத கொள்ளையர் பிரச்னையை வினோபாவும் ஜயப்பிரகாஷும் அநாயாசமாக அன்பு வழியிலேயே சாதிப்பது கண்டு மத்தியப் பிரதேச முதல்வர் ஸ்ரீ ஸேதிக்கு அசூயை ஏற்பட்டிருப்பதாகவே தெரிகிறது. இதனை ஓர் 'அந்தஸ்துப் பிரச்னை'யாக எண்ணி மத்தியப் பிரதேச சர்க்கார், சர்வோதய நற்பணிக்குக் குந்தகம் செய்து வந்தால், மீண்டும் கொள்ளையர் கொடுமையைக் கிளப்பிவிடுவதில்தான் முடியும் என்று வினோபா மனம் நொந்து கூறியிருக்கிறார்.

மத்தியப் பிரதேச சர்க்கார் 'அந்தஸ்துப் பிரச்னை' ஒன்றை அர்த்தமில்லாமல் சிருஷ்டி செய்து கொண்டு தங்களது அந்தஸ்தை மேன்மேலும் குறைத்துக் கொள்வது பரிதாபமே!

இரு பெரியவர்களுக்கும் அஞ்சலி


இவ்விதழ் வெளியாகும்போது நமது ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர்கள் தமது அறுபத்தியாறாவது வியாஸ பூஜையைச் செய்து, சாதுர்மாஸ்ய விரதம் அநுஷ்டித்துக்கொண்டிருப்பார்கள். சந்நியாச தர்மத்தின் திரு உருவாகவும், சநாதன தர்மத்தின் திவ்விய ஸ்வரூபமாகவும் அவர்கள் அறுபத்தியாறாண்டுகள் அருள்பாலித்து வருவது நமது மகத்தான பாக்கியம். அவரது பொன்னார் திருவடிகளைப் பணிகிறோம்.


இவ்வருட வியாஸ பூஜையில் அடியார்களுக்கு விசேஷமான மகிழ்ச்சியும் குதூகலமும் கூடியிருந்தது. இதற்குக் காரணம் நமது பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய இளைய சுவாமிகளாகிய ஸ்ரீமத் ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீபாதர்கள் கர்நாடகம், கேரளம், தமிழகத்தின் தென் கோடி ஆகிய பகுதிகளில் அமோக திக்விஜயம் செய்து, காஞ்சிபுரத்துக்குத் திரும்பி, குருநாதனோடு சேர்ந்து வியாஸ பூஜை செய்ததேயாகும். ''சென்றவிட மெல்லாம் சிறப்பு'' என்ற சொற்றொடர் முற்றிலும் பொருந்துமாறு, புதுப் பெரியவர்கள் தாம் யாத்திரை செய்த அத்தனை பகுதிகளிலும் எண்ணற்ற மக்களின் போற்றுதலைப் பெற்றுத் திரும்பியிருக்கிறார்கள். துறவி சிரேஷ்டராகிய அவர்களுக்கு இதில் சொந்த வெற்றி என்பதாக ஏதுமில்லை. அவர்கள் சென்றவிடமெல்லாம் சமயப் பயிருக்கு அமுத வருஷம் பொழிந்து, மக்களை நன்னெறியில் திருப்பி, வைதிக தருமத்துக்கு வெற்றி பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். ஈசுவராவதாரமாக மதிக்கப்பெறும் ஸ்ரீ பெரியவர்களிடமிருந்து ஆசிரமம் பெற்ற மகா பாக்கியத்துக்குப் புதுப் பெரியவர்கள் முற்றிலும் தகுதி பெற்ற சத்பாத்திரமே ஆவர் என்று ஆஸ்திகருலகு கொண்டாடுகிறது. ஸ்ரீ புதுப் பெரியவர்களது ஆசாரச் சிறப்பு, யதிதர்ம அநுஷ்டானம், வழிபாட்டு விசேஷம், அறிவுப் பிரகாசம், செயல் துடிப்பு — எல்லாவற்றுக்கும் மேலாக அவர் மக்களோடு மனம் விட்டுப் பழகும் சௌலப்பியம் இவற்றால் ஸ்ரீ காஞ்சி ஸ்ரீமடத்தின் தொன்று தொட்ட புகழ் இன்றும் உறுதியாகி யிருக்கிறது. வியாஸ பூஜையை ஒட்டியே ஆடி அவிட்டத்தில் (ஜூலை 28) ஸ்ரீ ஜயேந்திரர்களது 37வது ஜயந்தி நன்னாளும் அமைந்து அடியாருக்கு மேலும் மகிழ்வூட்டுகிறது. ஆஸ்திகத்தில் நாடு மேலும் புதுப் பொலிவு பெறுமாறு ஸ்ரீ புதுப் பெரியவர்கள் நூறாண்டுகள் ஞான ஆட்சி புரிய திரிபுர சுந்தரித் தாயைப் பிரார்த்திக்கிறோம்.



அரசிடம் சம்பளம் பெற்று வேலையில் நுழைந்த நல்லவராக இருக்கும் நான் இந்த அரசாங்கத்தைக் காப்பாற்றப் புறப்படக் கூடாது என்றால், அரசாங்கத்தின் பணத்தைப் பென்ஷனாக வாங்கிக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படுகிறவர்களை என்னவென்பது?
— ம. பொ. சி. பேச்சு




அன்று!
இன்று!


ஐயோ! நாற்காலியைக் கவுக்கப் பார்க்கிறாங்களோ!
தி.மு.க ஆட்சி
ஆட்சிக் குறைபாடுகள்
ஊழல்கள்

தமிழ் நாட்டிலே

— தீரன் —

தமிழர் படையும் சட்டமும் ஒழுங்கும்

சமீப காலமாக மதுரை, ராமநாதபுரம் பகுதிகளிலும், சென்னையிலும் ஆளும் கட்சியினர் அடங்கிய 'தமிழர் படை' தங்களுக்கு வேண்டாதவர்களை அடக்கி ஒடுக்கும் வன்முறைகளை மேற்கொள்வதாகச் சொல்லப்படுகிறது. புரசைவாக்கம், திருவொற்றியூர்ப் பகுதிகளில், வேற்றுமொழி மாநிலத்திலிருந்து வந்தவர்களின் கடைகள், பத்திரிகைகள் விற்கும் பெட்டிக் கடைகள் இவற்றின் மேல் இப்படையினரின் தாக்குதல்களும், சூறையாடல்களும் அண்மையில்கூட நடந்துள்ளன. சமீபத்தில் விவசாயிகள் போராட்ட அர்த்தாலின் போது மதுரை போன்ற நகரங்களில் இந்தப் படையைச் சேர்ந்தவர்கள் 'பேட்ஜ்' அணிந்து கொண்டு தெருவில் வந்து தங்கள் பாணியில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பேரில் ஏதேதோ செய்தார்களாம்.

காவிரி நீர்ப் பிரச்னை பெரிதாகப் பேசியிருந்த போது ''தமிழக அரசின் ஆட்சேபனையை மீறிக் காவிரியின் மீது மேலுமொரு அணை கட்டப்படுமானால் அதைத் தடுக்கவும், தகர்த்தெறியவும் தமிழர் படை புறப்படும்'' என்று முன்பொரு சமயம் இந்தப் படையின் தளபதி ஒருவர் முழங்கியிருக்கிறார்!

இப்போது தமிழர் படை பற்றிப் புகார் செய்து பிரதமருக்குத் தந்திகள் குவிந்துள்ளன. விவசாயிகள் போராட்ட நிலைகளை நேரில் காண வந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் பாதிக்கப்பட்ட பெருவாரியான மக்கள் 'தமிழர் படை' பற்றி வருத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையில்கூட அந்தப் படையின் தளபதியும் சரி, ஆளும் கட்சியிலுள்ள தலைவர்களும் சரி, அந்தப் படையை ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காமல் ''ஊர்வலங்களை ஒழுங்குபடுத்தவும், கூட்டங்களைப் பாதுகாக்கவுமே தமிழர் படை அமைக்கப்பட்டுள்ளது'' என்று சமாதானம் சொல்லுகிறார்கள்.

'அப்படியானால் இந்த இரண்டு காரியங்களையும் இனிமேல் போலீஸ் செய்ய வேண்டாமா?' என்று கேட்கத் தோன்றுகிறது. ஊர்வலங்களை ஒழுங்குபடுத்துவதும், கூட்டங்களுக்குப் பாதுகாப்பளிப்பதும் போலீஸின் வேலை, அதை எந்தப் படையும் கட்சி அடிப்படையில் செய்ய முன்வருவது விபரீதமான எதிர்விளைவுகளை உண்டாக்கும். தமிழர் படையின் பாஷையில் 'ஊர்வலங்களை ஒழுங்கு செய்வது' என்பதற்குப் பிறர் ஊர்வலங்களில் புகுந்து கலாட்டா செய்வது என்றுதான் அர்த்தம் இருப்பதாக இதுவரை நடந்த சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

சான்றிதழ்கள் எதற்கு?

தமிழகத்தில் இப்போது அரசாங்கக் கல்வி நிலையங்களிலும், கல்லூரிகளிலும் படித்து முடித்துவிட்டு வெளியேறுகிறவர்களுக்குக் கொடுக்கும் சான்றிதழ்களைத் தமிழில் மட்டுமே தருகிறார்களாம். தமிழக அரசு சொல்லிக் கொண்டிருந்த — சொல்லிக் கொண்டிருக்கும் இரு மொழிக் கொள்கை என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. வேறு மாநிலங்களில் மேற்படிப்புக்கோ, வெளிநாட்டில் கற்கவோ செல்லும் மாணவர்கள் இப்படித் தமிழில் மட்டுமே தரப்படும் மாற்றுச் சான்றிதழ், நற்சான்றிதழ்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? படித்து முடிக்கிற எல்லாருக்கும் இந்த மாநிலத்துக்குள்ளேயே வேலை கிடைத்துவிடுவதில்லை. பிற மாநிலங்களில் போய் வேலைகளுக்கு அலைய வேண்டிய நிலையிலும் பல இளைஞர்கள் உள்ளனர். அவர்களும் இந்தத் தமிழில் மட்டுமே தரப்பட்ட சான்றிதழ்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? இதிலுள்ள நடைமுறைத் தொல்லை அரசுக்கு ஏன் புரியவில்லை? தன்னுடைய இருமொழிக் கொள்கைப்படி, தமிழ் — ஆங்கிலம் இரண்டிலுமாகிய சான்றிதழ்களை வழங்கலாமே? தில்லியிலிருந்து முழுக்க முழுக்க இந்தி



லேயே ஒரு கடிதம் தனக்கு வருமானாலும் தமிழக அரசு நடைமுறையில் எவ்வளவு சிரமப்படுமோ, அவ்வளவு சிரமத்தை மாண வர்களுக்குத் தரும் இந்த ஏற்பாட்டைக் கைவிடுமாறு வேண்டுகிறோம். டி.சி.யும் நற்சான்றிதழும் மாணவர்கள் பயனடையவே தவிர அவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தவித்துத் திண்டாடுவதற் காக அல்ல.

அவசரமாக ஒரு பாராட்டு


தமிழ் நாட்டு அமைச்சர்களையோ, அவர் களின் பணிகளையோ பாராட்டும் வாய்ப்பு நமக்கு அடிக்கடி ஏற்படுவதில்லை. ஆகவே, இப்போது கிடைத்திருக்கும் ஒரு செய்திக் காகச் சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பாராட்டி விட அவசரப்படுகிறோம்; ஆசைப் படுகிறோம். தஞ்சை மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டை என்ற ஊரில் அமைச்சர் திரு அன்பழகன் ஒரு தி. மு. க. பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது அவ்வூர் அரசாங்க மருத்துவ மனையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் அமைச்சருக்கு மாலை சூட்ட மேடையில் ஏறியிருக்கிறார். அப்போது அமைச்சர் திரு அன்பழகன் அவர்கள் அந்த டாக்டரை உடனே தடுத்து நிறுத்ியதும் அல்லாமல், ''அரசாங்கப் பணியில் இருக்கும் நீங்கள் இப்படிக் கட்சி மேடையைத் தேடி வந்து எனக்கு மாலையிடுவது முறையில்லை. இனி இப்படிச் செய்யாதீர்கள்'' என்று கண்டித்ததாகத் தெரிகிறது. இந்த ஆட்சி யில், இந்த நாளில் இப்படிப் பேசும் ஓர் அமைச்சர் இருக்கிறார் என்பது எவ்வளவு பெரிய ஆச்சரியம்? திரு அன்பழகன் அவர்களை இதற்காக எவ்வளவு பாராட்டினா லும் தகும். தமிழ் மக்களின் சார்பில், ஜனநாயகவாதிகளின் சார்பில் அமைச்சரை இதற்காகத் தாராளமாகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

நூல் நிலையங்களும் கட்சிச் சார்பும்

மாவட்ட நூல் நிலையங்களுக்கும், அர சாங்க நூல் நிலையங்களுக்கும் பொதுமக்க ளிடம் வசூலிக்கப்படுகிற 'லைப்ரரி செஸ்' என்பது வரி கொடுக்கிற எல்லாரிடமும் வாங் கப்படுவது. ஆனால் சமீப காலமாகக் கட்சிச் செல்வாக்கில் மேற்படி நூலகங்களின் தலைவர் களாக வந்துவிடுகிறவர்கள் சில பத்திரிகை களை நூலகங்களுக்கு வாங்காமல் நிறுத்துவது என்பதும், அரசுக்கு வேண்டியவற்றைப் பல பல பிரதிகள் அதிகமாக வாங்குவது என்ப தும் புது வழக்கமாகி வருவதாகப் பேசப்படு கிறது. 'லைப்ரரி செஸ்' கொடுப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டு மில்லை. வரி கொடுப்பவர்கள் எல்லாப் பத் திரிகைகளையும் படிக்க விரும்பும் எல்லாத் தரப்பையும் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்பதை ஞாபகம் வைத்துக் கொண்டு நூல கங்கள் செயல்பட வேண்டும். பொது நூல் நிலையங்களை 'அரசாங்கத்தை ஆதரித்துத் துதி பாடும் இதழ்களின் காட்சிச் சாலையாக' மாற்றிவிடக் கூடாது. அப்படி மாற்றிவிட் டால் அப்புறம் பொதுமக்களுக்கு அங்கே என்ன வேலை இருக்க முடியும்? 'நகரசபையை எதிர்க்கும் அல்லது நகரசபையை ஆளும் கட்சியை எதிர்க்கும் பொதுமக்களின் வீட்டுக் குழாய்களில் மட்டும் தண்ணீர் விடப்படமாட் டாது' என்று தீர்மானம் போடுவது எவ் வளவு பைத்தியக்காரத்தனமானதோ அவ் வளவு பைத்தியக்காரத்தனமானது இந்தக் குறுகிய நோக்கம் என்பதைப் புரிந்துகொண்டு இதை உடனே கைவிட வேண்டும். நூல் நிலையங்கள் பொதுமக்களுக்குத்தான். அவர்கள் படிக்க வேண்டிய எல்லா வகை இதழ்களும் அரசின் விருப்பு வெறுப்புக் குறுக்கிடாமல் அங்கே இடம் பெற்றேயாக வேண்டும். பொதுமக்களென்ன கழுதைகளா அழுக்கு மூட்டைகளைச் சுமக்க?

வானொலிமேல் பாய்ச்சல்

சமீபத்தில் நடைபெற்ற 'விவசாயிகள் போராட்டத்தின் போது வானொலி நிலையத் தார் பாரபட்சமில்லாமல் செய்திகள் கூறி னார்கள். ஜூலை 9 தேதி சென்னையில் நடைபெற்ற மௌன ஊர்வலம் பற்றியும், அதற்குத் தலைமை வகித்த திரு காமராஜ் பற்றியும் மறுநாள் செய்தியில் சில வாக்கி யங்கள் சொல்லப்பட்டன. கோவையில் நடைபெற்ற மௌன ஊர்வலம் பற்றியும் சொல்லப்பட்டது. பி. டி. ஐ.யிலிருந்து தங்களுக்குக் கிடைத்த எண்ணிக்கை விவரங் களின்படி கோவை ஊர்வலத்தைப் பற்றி வானொலியில் கூறியுள்ளார்கள். முதலமைச்ச ரும், அவருக்கு வேண்டிய பத்திரிகைகளும் உடனே வானொலி மேல் பாயத் தொடங்கி யிருக்கிறார்கள். 'வானொலியின் வஞ்சகம்' 'வானொலியின் மாமியார் வேலை' என்றெல் லாம் சாடுவதோடு அங்கே பணி புரிபவர் களின் செயலுக்கு உள்நோக்கம் கற்பித்து அச்சுறுத்தவும் சிலர் முற்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. 'வானொலி' என்பது அகில இந்திய ரீதியான சாதனம். அது தி.மு.க. வின் கட்சிப் பத்திரிகை போல் தாம் சொல் வதை எல்லாம் அது சரியாயினும், தவறாயி னும் அப்படியே கிளிப்பிள்ளைத்தனமாகத் திருப்பிச் சொல்ல வேண்டும் என்று முதல்வர் எதிர்பார்ப்பது நியாயமில்லை.



தேவை ஓர் அஹிம்சைப் படை



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசார்ய ஸ்வாமிகள்

'நவீன ஸயன்ஸின் அபிவிருத்தியால் எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொண்டு ஆனந்தமாக வாழலாம்; மதமும், அநுஷ்டானமும் என்னத்துக்கு வேண்டும்?' என்று சிலர் கேட்கிறார்கள். ஸயன்ஸினால் பல சௌகரிய சாதனங்களை உண்டாக்க முடிவது உண்மையே. ஆனால் இதனால் ஆனந்தம் வந்து விட்டதா என்பதுதான் கேள்வி. ஆனந்தம் என்பது மனத் திருப்தியை, உள்ள நிறைவைக் குறித்த விஷயம். சௌகரிய வாழ்வுக்கு இதெல்லாம் தேவை, இன்னமும் தேவைகள் இருக்கின்றன என்ற அடிப்படையில் ஓயாமல் திரவியங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதில், மக்கள் திருப்தியை இழந்துவிட்டதையே பார்க்கிறோம். அதோடு இதில் போட்டா போட்டி, வர்க்க பேதம், துவேஷம் எல்லாமும் வளர்ந்துவிட்டன. மநுஷ்யனின் ஆசையைப் பூர்த்தி செய்வது முடியாத காரியம். ஆசைகளைக் குறைத்துக் கொண்டாலே உண்மையான ஆனந்தம் காண முடியும். இதற்கு வழிகாட்டுவது மதம்தான். ஆனபடியால், ஸயன்ஸ் வேகமாக அபிவிருத்தி ஆகியிருப்பதாலேயே மதத்தின் தேவையும் அதிகமாயிருக்கிறது எனலாம்.

லௌகிக, விஞ்ஞான அபிவிருத்தியால் ஆத்ம சாந்தி காண முடியவில்லை என்று அமெரிக்கா, ருஷ்யா ஆகிய இரு தேசங்களும் நிதர்சனமாகக் காட்டுகின்றன. முதலில் ஸ்புட்னிக் செய்து உலகைச் சுற்றவிட்ட நாடு ருஷ்யா. அது கம்யூனிஸ நாடு. அங்கு மத போதனை கிடையாது. இருந்தாலும் டெக்னலஜி அபிவிருத்தி மட்டும் அந்த நாட்டுக்கு உள்ள நிறைவை அளிக்கவில்லை. அதனால்தான் நமது மகாபாரதத்தை ருஷ்ய மொழியில் பெயர்த்துத் தங்கள் பள்ளிகளில் போதிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அமெரிக்க மக்களுக்கு ஆத்ம சந்துஷ்டி இல்லாததாலேயே அவர்கள் யோகம், வேதாந்தம், சங்கீர்த்தனம் இவற்றில் திரும்பியிருக்கிறார்கள். ஸயன்ஸில் மிக முன்னேறிய தேசங்கள் நம் பாரத தேசத்தின் பக்கம் திரும்பிப் பயனடைய முயலும்போது, நாமே நமது புராதன தர்மத்தை மறந்து வெற்றுச் சுக வாழ்வில் இறங்கினால் அது பரிதாபமாகும்.

நம் தேசத்தில் லௌகிக ஆசையும், நாஸ்திகமும், தெய்வ நிந்தனையும் தலை தூக்கினாலும்கூட, நம்முடைய ஸநாதன தர்மத்துக்கு எந்நாளும் அழிவு வராது என்று நம்பலாம். அப்படி அழிவு வராமல் காப்பது நம்முடைய பொறுப்பு.

'காப்பது' என்றால் என்ன செய்ய வேண்டும்? நாஸ்திகர்களோடு சண்டை போடுவதா? இல்லை. ஹிந்து மதம் சண்டையின் மூலம் தன்னை வளர்த்துக் கொண்டதாகச் சரித்திரமே கிடையாது. அல்லது சமூகப் பணிகளைக் காட்டி நம் சமயத்துக்கு மற்றவரை இழுத்துக் கொண்டதாகவும் சரித்திரம் இல்லை. ஆக, ஹிந்துமதம் சண்டையும் போடவில்லை, மதமாற்ற நோக்கத்தோடு சமூக ரீதியில் சேவையும் செய்யவில்லை. ஆனாலும் இத்தனை யுகாந்தரமாக, எத்தனை எத்தனையோ எதிர்ப்பு வந்தும் அது அழியாமல் இருப்பதை மட்டும் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். இது எதனால்? நம் மதத்திலுள்ள தத்துவங்களின் சத்தியத்தினால் என்று சொல்லலாமா? நம் மதத் தத்துவங்கள் பரம உத்தமமானவை என்பது உண்மைதான். ஆனாலும்கூட, பாமர மக்கள் உட்பட ஏராளமானவர்கள் நம் மதத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு இந்தத் தத்துவ மகிமை காரணம் என்று நான் சொல்லமாட்டேன்.


பின் என்னதான் காரணம்? ஒருவிதமான பிரசாரமும், பலம் வாய்ந்த குருபீடங்களும் இல்லாமலே இத்தனை கோடி மக்கள் இத்தனை ஆயிரம் வருஷங்களாக நம் மதத்தில் நிலைத்து இருப்பதற்குக் காரணம் என்ன? முதலில் பிற மதத்தினர் ஆட்சியில் பலவிதக் கொடுமைகளுக்கு ஆளாகியும், எத்தனையோ பிரசாரங்கள் செய்தும்கூடக் கோடிக் கணக்கான மக்கள் நம் சநாதன தர்மத்திலேயே இருப்பதற்குக் காரணம் என்ன? எனக்குத் தெரிகிற காரணம் இதுதான்: மதத்தைப் பற்றிப் **பேசுவதைவிட**, தத்வார்த்தங்களை **வாயால் விளக்குவதைவிட**, நம் மதம் விதிக்கிறபடியே **பூரணமாக வாழ்ந்து காட்டிய** உத்தம புருஷர்கள் ஆதியிலிருந்து தோன்றிக் கொண்டேயிருந்திருக்கிறார்கள். கர்மாநுஷ்டானங்களைச் செய்து கொண்டு, நல்ல தெய்வ பக்தியுடனும், எல்லோரிடமும் பிரேமையுடனும், தெளிந்த ஞானத்துடனும், நேர்மையான வாழ்க்கை நடத்தும் பெரியார்கள் நம் மதத்தில் தோன்றிக்கொண்டேயிருக்கிறார்கள். இவர்கள் பெரிதாகத் தத்துவ விவாதத்தில் இறங்க வேண்டும் என்பதில்லை.


ஆனால் இப்படிப்பட்டவர்களைப் பார்த்தமாத்திரத்திலேயே இவர்களிடம் பொதுஜனங்களுக்கு மதிப்பு ஏற்படுகிறது: இவர்கள் அநுஷ்டிக்கிற மதத்திடமும் பற்றுதல் ஏற்படுகிறது. அந்த மதத்தை விட்டு நீங்காமல், அதிலேயே ச்ரத்தையுடன் ஈடுபடுகிறார்கள்.

நாஸ்திகமும் ஸயன்ஸும் லௌகிகமும் தலைதூக்கியுள்ள இப்போதும் இப்படிப்பட்டவர்கள் நம்மிடை தோன்றினாலும் போதும், நம் மதத்துக்கு எந்த ஹானியும் உண்டாகாது. மதத்துக்கு விரோதமான சக்திகளுடன் பௌதிகமாகவோ வாத விவாதத்தாலோ யுத்தம் செய்கிற கைங்கர்யம் ஏதும் நமக்குத் தேவை இல்லை. எவரிடமும் யுத்தம் செய்யாமல், எது நடந்தாலும் நடக்கட்டும் என்ற துணிவோடு, தம்பாட்டில் கர்மாநுஷ்டானங்களைச் செய்து கொண்டு, சீலர்களாக வாழ்கிற அஹிம்ஸா ஸோல்ஜர்களே இன்று நமக்குத் தேவை. தங்களது வாழ்க்கையின் தூய்மையால் தெய்விகம் பெற்று, பிறர் அனைவரிடமும் காட்டும் அன்பினால் அவர்களின் மதிப்பைப் பெற்று விளங்கும் சிஷ்டர்கள் நம் மதத்தில் தோன்றிக் கொண்டிருக்கும்வரையில் இருள் தானாக விலகி ஒளி வீசிக் கொண்டேயிருக்கும். சுய ஆசைகள் இல்லாமல், சாஸ்திரம் விதித்த பிரகாரம் கர்மாநுஷ்டானம் செய்யத் தொடங்கினால் தன்னால் கட்டுப்பாடு, சித்தசுத்தி முதலிய குணங்கள் உண்டாகி, ஒவ்வொருவரும் உத்கிருஷ்டமான நிலையை அடையலாம். அனைவரும் அடைய முடியாவிட்டாலும் தோஷமில்லை. அனைவருமே இப்படி ஒரு முயற்சி செய்தால் தான் ஆயிரத்தில் ஒருவராவது உண்மை மகானாக உருவாக முடியும். அப்படி ஒரு சிலர் வந்து விட்டாலும் போதும். அவர்களைப் பார்த்தே ஜனங்கள் நமது வேத தர்மத்தில் பிடிப்புக் கொண்டு விடுவார்கள்.

பூரணத்துவம் அடைந்த புருஷர்களின் வாழ்க்கை உதாரணத்தாலேயே வளர்ந்து வந்த நமது மதம் இனியும் அப்படியே வளர வேண்டும். நாம் மனப்பூர்வமாக இந்த முயற்சி எடுத்தால், பரமேசுவரன் நிச்சயம் கைகொடுப்பார். 'நாஸ்திகம் வந்துவிட்டதே' என்று பயப்பட வேண்டாம். நம்மை நாமே சோதித்துக் கொண்டு திருந்துவதற்கே ஈசுவரன் இந்த எதிர்ப்புக்களை உண்டாக்குகிறான் என்று கருதுவோம். இன்றிருப்பதைவிட மகா பெரிய எதிர்ப்புக்களெல்லாம் ஈடு கொடுத்தது நம் சநாதன தர்மம். எதிர்ப்புக் காரணமாகவே, ஆஸ்திகர்களிடத்தில் உண்மையான எழுச்சி உண்டாகி, சமயப் பற்றும் அதிகமாயிருக்கிறது. புராண காலங்களில் ராக்ஷஸர் எதிர்த்த கதைகள் ஒருபுறமிருக்கட்டும். சரித்திர காலத்தில் கூட அவைதிக மதங்கள் வலுப்பெற்றபோது எங்கிருந்தோ ஒரு சங்கர பகவத்பாதர் வந்தார். திருஞான சம்பந்தர் வந்தார். ஔரங்கஜேப் தோன்றி நசித்து மதத்தை ஒடுக்கப் பார்த்தால், உடனே ஒரு சிவாஜியும் அஹல்யா பாயும் வந்து நம் சமய உணர்வை முன்னைவிட வலுவாக்குகிறார்கள்! எனவே மதம் என்னாகும் என்ற பயம் வேண்டாம். விஷ்ணுஸஹஸ்ர நாமத்தில் பகவானுக்கு ''பயக்ருத்' (பயத்தைத் தருபவர்) 'பயநாசன:' (பயத்தைப் போக்குபவர்) என்று அடுத்தடுத்து நாமங்கள் உள்ளன. நம்மைத் திருத்துவதற்கே 'பயக்ருத்' ஆகிறார். நாம் திருந்த முயன்றோமானால் உடனே 'பயநாசனன்' ஆவார்.

இந்த முயற்சியில் இறங்குவோம். மதத்தைப்பற்றிக் கவலைப்படாமல், பயப்படாமல், மதவிரோதிகளைப் பற்றிக் கோபப்படாமல், சண்டையோ வாதமோ செய்யாமல், அவரவரும் நம் மத விதிகளை அநுசரித்து நடக்கச் சங்கல்பம் செய்து கொள்வோம். ''எங்கள் மதத்தில் இன்னின்ன கர்மங்களையும் தர்மங்களையும் **சொல்லியிருக்கிறது**'' என்று வாதப் பிரதிவாதம் செய்வதோடு திருப்தி அடையாமல், ''எங்கள் மதத்தில் சொன்ன கர்மங்களையும் தர்மங்களையும் பூரணமாகச் **செய்து காட்டுகிற** சீலர்களை இதோ பாருங்கள்'' என்று காட்டக்கூடியவாறு உத்தமப்பிறவிகள் தோன்ற முயற்சி செய்வோம். இவ்வாறு ஒவ்வொருவரும் வேத மதத்தின் அஹிம்ஸா ஸோல்ஜராக முயலுவோம். நாம் அந்தரங்க சுத்தமாக முயற்சி எடுத்தால் ஈசுவரன் நமக்கும் நம் சநாதன தர்மத்துக்கும் குறைவு வராமல் ரக்ஷிப்பார்.





அவள் எழுதின அரைகுறைக்கதை 2

பிரின்ஸிபாலின் உண்ணாவிரதம்

> பூனாவில் ஒரு கல்லூரி முதல்வர் காலவரையறையின்றி உண்ணாவிரதம் தொடங்கி தன் விளைவாக ஒரு சர்வகலாசாலை துணை வேந்தர் ராஜிநாமா! — செய்தி

"நாளைக்கு அதிகாலையிலே தொடங்கலாம் என்றிருக்கிறேன்" என்றார் பிரின்ஸிபால் நரஹரி.

"இன்னும் இரண்டு நாட்கள் பொறுங்களேன்! துணைவேந்தர் சிவஞ்சோனின் மனம் மாறலாமில்லையா?" என்றாள் தர்மு.

"அதுவரையில் காத்துக் கொண்டிருந்தால் வெள்ளம் தலைக்கு மேல் போய்விடும். முப்பது வருஷங்களாக நான் பேணி வளர்த்த கல்லூரி குட்டிச்சுவராகிவிடும்.... நீ ஒரு ஜமுக்காளம் மட்டும் எடுத்து வை...."

"மண் பானையிலே கொஞ்சம் ஜலம் ஊற்றித் தரட்டுமா? வெய்யில் கொளுத்தறதே."

"ஜலம் குடிச்சா பின்னே என்ன உண்ணாவிரதம்? துணைவேந்தரைத் தலைவராகக் கொண்ட 'ஸிண்டிகேட்' 'சுதேசிக் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம்' என்று உத்தரவு போடுவது வரையில் பச்சைத் தண்ணீர்கூட அருந்த மாட்டேன்."

"அப்பாவுக்குக் கொஞ்சம் பழரசம் தயார் பண்ணி வை அம்மா... 'ஆரஞ்சு ஜூஸ்'! உண்ணாவிரதத்தைக் கைவிடும்போது யாரும் சாம்பார் சாதம் சாப்பிட மாட்டார்கள்" என்றாள் பெண் நளினி.

"நீ சும்மா இருடி அசத்து. அவர் உண்ணாவிரதமிருக்கப் போகிறேன் என்று சொன்னதிலிருந்து எனக்கு வயிற்றைக் கலக்குகிறது. எனக்குத் தெரியாதா அவருக்குப் பசி கொஞ்சம் அதிகமென்று? ஒருவேளை சாப்பிடாவிட்டால் அவர் தவித்துப் போய்விடுவாரே."

"அப்பாவின் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறாது அம்மா. இந்தக் காலத்தில் பெண்கள் ஆண்களோடு சேர்ந்து படிக்கக் கூடாது என்றால் சிரிக்கமாட்டார்களா? உலகத்தை ஒட்டி நடந்துக்கணும் அம்மா."

"இருந்தாலும் நளினி, உனக்கு வாய்த் துடுக்கு அதிகம். நீ எப்படித்தான் புருஷன் வீட்டுக்குப் போய்க் குப்பை கொட்டப் போகிறாயோ?"

"குப்பை கொட்ட விருப்பமில்லாததினால் தான் மேலே படிக்கிறேன் என்கிறேன். அப்பா கல்லூரியிலேயே படித்துப் பட்டம் பெறணும்னு ஆசை: ஆனால் அப்பா தான் கல்லூரிப் பக்கம் 'பெண் வாடை'யே வீசக் கூடாது என்கிறாரே. இன்னும் இரண்டு நாட்களில் இவர் தம் பிடிவாதத்தைக் கைவிடாவிட்டால், பெண்கள் சார்பில் நான் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன். துணைவேந்தரும், ஸிண்டிகேட் அங்கத்தினர்களும் எங்கள் கட்சி யாச்சே!"

"தன்னாயிருக்குடி கூத்து! குடும்பத்திலே இருக்கிற அத்தனை பேருமே உண்ணாவிரதம் இருந்துவிடுவோம். உணவுப் பஞ்சமாவது ஒழியும்."

பிரின்ஸிபால் நரஹரி உண்ணாவிரதம் தொடங்கி எட்டு மணி நேரத்துக்குமேல் ஆகிவிட்டது. பத்திரிகை நிருபர்கள் காமிராவும் கையுமாக அவரைச் சூழ்ந்து கொண்டு கேள்விமேல் கேள்வி கேட்டார்கள். நரஹரியும் சலிக்காது அவற்றுக்கெல்லாம் பதில் சொன்னார்.


"சுதேசிக் கல்லூரி தொடங்கின நாளிலிருந்து நான் அதன் முதல்வராக இருந்துவருகிறேன். ஒழுங்குக்கும், நல்லொழுக்கத்துக்கும் பெயர் போன கல்லூரி எங்களுடையது. இங்கு படித்த மாணவமணிகளில் ஒருவனாவது காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டது இடையாது. பரீட்சையில் மருந்துக்குக்கூட யாரும் காப்பி அடித்தது இடையாது. 99.5 சதவீதம் மாணவர்கள் ஸிகரெட் குடிக்கமாட்டார்கள். ஓரிரு மாணவர்கள் கண்காணாத

தேசத்தில் அரை சிகெரெட் ஊதினதாக வந்த செய்தி ஆதாரமற்றது என்று பின்னால் தெரிந்தது. குளியல் அறையில் பாட்டு, வகுப்பறையில் சிரித்தல் முதலியன எதுவும் இந்தக் கல்லூரியின் சரித்திரத்திலேயே கிடையாது. இன்னும் நான் எவ்வளவோ சொல்ல முடியும். எங்கள் கல்லூரியில் 'டிஸிப்ளின்' பிரமாதமாக இருப்பதற்குக் காரணம் 'கோ—எஜுகேஷன்' இல்லாததுதான்.... என்னை நீங்கள் பழைய காலத்து 'மடிசஞ்சி' என்று பழிக்கலாம். அதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. துணைவேந்தர் ரிஷிகேசன் மேல்நாட்டில் படித்தவர். 'கோ — எஜுகேஷனி'னால் கெடுதல் எதுவும் கிடையாது என்று நிரூபிக்க அவர் அமெரிக்காவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் புள்ளி விவரங்களும் மேற்கோள்களும் காட்டலாம். காட்டட்டும். நான் ஏமாந்து விடப் போவதில்லை. சுதேசிக் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளச் சொல்லி வந்திருக்கும் 'ஆர்டரை' வாபஸ் வாங்குவது வரையில் நான் உண்ணாவிரதத்தைக் கைவிட மாட்டேன்; உயிர் போனாலும் சரிதான்.''

பிரின்ஸிபால் நரஹரியின் அறிக்கையைத் தொடர்ந்து துணைவேந்தர் ரிஷிகேசன் 'ஸெனடிகேட்'டின் சார்பாகவும், தம் சார்பாகவும் இன்னோர் அறிக்கையை வெளியிட்டார். ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பதினால் ஏற்படும் நன்மைகளை விரிவாக எடுத்துக்கூறியது அது. காலப் போக்குக்குத் தகுந்தபடி சமூக நெறிகள் மாறாவிட்டால் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளை அவர் விரல்விட்டு எண்ணியிருந்தார். ''பிரின்ஸிபால் நரஹரி புனராலோசனை செய்து தம் உண்ணாவிரதத்தைக் கைவிடுவார் என்று எதிர்பார்க்கிறேன். அது மட்டுமில்லை, எதிர்காலத்தில் சுதேசி சர்வகலாசாலையைச் சேர்ந்த மாணவன் ஒருவனும் மாணவி ஒருத்தியும் வானவெளி ஆராய்ச்சியில் வெற்றிகண்டு செவ்வாய்க் கிரகத்தில் சேர்ந்து காலெடுத்து வைத்துச் சரித்திரப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளாவார்களென்று நம்புகிறேன்'' என்று வேறு குறிப்பிட்டிருந்தார்.

உண்ணாவிரதத்தினால் பிரின்ஸிபால் நரஹரியின் எடை எவ்வளவு மில்லிகிராம் குறைந்திருக்கிறது என்று கண்ணில் விளக்கெண்ணெயை விட்டுப் பார்த்துக் கொண்டிருந்த பத்திரிகை நிருபர்களுக்கு இன்னோர் ஆச்சரியம் காத்திருந்தது. 'பத்தாம்பசலி பிரின்ஸிபாலின் கொள்கைகள் ஒழிக!', 'மாதர் கை ஓங்குக!', 'பெண்களுக்கு மட்டும் ஏன் பூட்டு?' 'கல்லூரிக் கதவுகள் திறக்கட்டும்!', 'சாகும் வரையில் உண்ணாவிரதம்' போன்ற போஸ்டர்களுக்குப் பின்னால் வீற்றபடி உண்ணாவிரதம் தொடங்கியிருந்தாள் நளினி. நரஹரியின் உண்ணாவிரதத்தைவிட நளினியின் உண்ணாவிரதம் பத்திரிகையில் பிரமாதமாக அடிபட்டது. அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களும் இப்பொழுது அங்கு வந்து கூடினார்கள்.

வழக்கம்போல் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி நரஹரிக்கும் நளினிக்கும் தந்திகள் வந்துகொண்டேயிருந்தன. தபால் இலாகா இதற்காக ஒரு தனிச் சேவகரை நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.



'சுதேசி சர்வகலாசாலை பழைய மாணவர்கள் சங்கம்' 'பழைமைப் பிரியர்கள் குழு', 'ரிப் வான்விங்கிள் கழகம்' போன்றவை நளினிக்குத் தந்தி அடித்திருந்தன. வீண் பிடிவாதத்தை விட்டு, தந்தை சொல்லை மந்திரமாக ஏற்று உண்ணாவிரதத்தை உடனே கை விடுமாறு பணித்திருந்தன. அதே போல் 'நவயுவதிகள் சங்கம்' 'டீன் ஏஜ் லீக்' முதலிய கழகங்கள் பிரின்ஸிபாலிடம், தம் பத்தாம்பசலிக் கொள்கைகளுக்குச் சமாதி கட்டும்படி வேண்டியிருந்தன.

> இந்த இடத்தில் ஸ்ரீமதி விஜயா பாலகிருஷ்ணன் கதையை மேலே தொடராமல் நிறுத்திவிட்டார். மாலை அதைப் படித்துப் பார்த்த திரு பாலகிருஷ்ணன் இரவு முழுதும் யோசித்துப் பின் வருமாறு அந்த அரைகுறைக் கதையை முடித்து வைத்தார்.

உண்ணாவிரதம் தொடங்கி இரண்டு நாட்களுக்கு மேலாகிவிட்டது. பிரின்ஸிபால் நரஹரியைச் சுற்றி ஒரு பெரிய கும்பல் கூடியிருந்தது. எல்லாரும் சுதேசிக் கல்லூரி மாணவர்கள்தான். நளினியின் பக்கத்திலும் நாரீமணிகளுக்குப் பஞ்சமில்லை. ஒருவர் மாறி ஒருவர் அவளுக்கு விசிறிக் கொண்டிருந்தார்கள்.

பத்திரிகை நிருபர்களுக்குள்ளேயே சுறுசுறுப்புடன் விளங்கினவர் ஸ்ரீமான் பாச்சா தான். மற்றவர்கள் எல்லாம் தூங்கி வழிந்தபடி கடலையைக் கொரிக்கையில், பாச்சா மட்டும் நளினியிடம் கேள்விகளாகக் கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தார். ஒரொரு சமயம் நளினியும் அவரும் சேர்ந்து நகைத்தது, அனைவரது கவனத்தையும் கவரத்தான் செய்தது. நளினியைப் பல்வேறு கோணங்களில் படம் பிடிப்பதற்காக அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு தடவை மரக்கிளையில் குரங்கைப்போல் தொங்கியபடி அவளைச் 'சுட்டுத் தள்ளினார்' அவர்.

அன்று மத்தியானம் திடீரென்று நளினியைக் காணவில்லை! பாச்சாவும் மாயமாய் மறைந்திருந்தார். இருவரும் எங்கே போயிருப்பார்கள் என்று அனைவரும் வியந்து கொண்டிருக்கையில், 'ரிஜிஸ்தரார்' ஆபீஸில் அவர்கள் இருப்பதாகத் தகவல் வந்தது. அதிகம் வளர்ப்பானேன்! பாச்சாவும் நளினியும் பெற்றோர்களின் சம்மதம் போன்ற தொல்லைகளுக்காகக் காத்திராமல் தம்பதிகளாக மாறியிருந்தார்கள்!

''எதற்கும் அப்பாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன்'' என்று கூறி டெலிபோன் இருக்கும் பக்கம் சென்றான் பாச்சா.

டெலிபோன் மறுமுனையிலிருந்த துணைவேந்தர் ரிஷிகேசனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. ''என்னது? பிரின்ஸிபால் நரஹரியின் பெண்ணா? என்கிட்டே ஒரு வார்த்தைகூடச் சொல்லலியேடா.....! என்னமோ செய்யுங்கோ. நடந்தது நடந்தாச்சு... என்னது, மேலே படிக்கணுமா? சுதேசி சர்வகலாசாலையிலா? வேண்டாண்டா. கல்யாணமானபின் ஒரு பெண் ஆண்களோடே படிக்கிறது அவ்வளவு உசிதமில்லே. பெண்கள் கல்லூரியிலேயேவேணு படிக்கட்டும். ஆட்சேபணையில்லே...... என்னது, சுதேசிக் கல்லூரியிலே ஆண்களோடேதான் படிப்பாளா? கிரகசாரமே! இரு! இரு நான் இதற்கு ஒண்ணு பண்ணறேன்!''



அவர் என்ன பண்ணினார் என்பது மறுநாள் பத்திரிகையைப் பிரித்த போது தெரிந்தது. 'பிரின்ஸிபால் நரஹரியின் அபிப்பிராயத்துக்கு மதிப்புத் தந்து, அவருடைய கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சர்வகலாசாலை பிறப்பித்திருந்த உத்தரவை வாபஸ் வாங்குகிறோம். அவர் உண்ணாவிரதத்தை உடனே கைவிடுவார் என்று எதிர்பார்க்கிறோம்!'

அலை ஓசை

அமரர் கல்கி



17. "லலிதா பயமாயிருக்கிறது...!"

ஜூன் மாத ஆரம்பத்தில் புதுடில்லியில் வெப்ப நிலை 110 டிக்கிரிக்கு வந்திருந்தது. பகலில் வெளியில் கிளம்பியவர்கள் கண்ணறும்புக் காளவாயில் தங்களைப் போட்டுவிட்டது போல் தவித்தார்கள். இரவில் வீட்டில் இருந்தவர்கள் செங்கல் சூளையில் போட்டவர்களைப் போல் வெந்தார்கள். பகலிலும் சரி, இரவிலும் சரி, காற்று அடித்தால் நெருப்பாக அடித்தது. எந்தப் பொருளைத் தொட்டாலும் தணலைப்போல் சுட்டது. விளாமிச்ச வேர் தட்டிகளில் விடப்பட்ட ஜலம் கீழே சொட்டும்போது வெந்நீராக மாறிச் சொட்டியது!

புது டில்லியில் வீற்றிருந்து இந்தியா தேசத்தின் மீது செங்கோல் செலுத்தி வந்த வைஸ்ராய் பிரபுவும், அதிகார வர்க்க கணங்களில் பெரும்பாலோரும் மூளைக் கொதிப்புக்கு அஞ்சி சிம்லா மலை உச்சிக்குப் போய்விட்டார்கள்.

சௌந்தரராகவனும் சீதாவுங்கூட சிம்லாவுக்குப் போவதாக இருந்தது. காமாட்சியம்மாள் தனக்கு மலைவாசம் ஒத்து வராது என்று சொல்லிக் கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில் ஊரிலிருந்து அவளுடைய தமையன் குமாரிக்குக் கல்யாணம் என்று கடிதம் வந்தது. ஊருக்குப் போய் ஒரு மாதத்துக்குள் வருவதாகச் சொல்லி விட்டுக் காமாட்சி அம்மாள் போய் விட்டாள்.


ஆனால் எதிர்பாராத ஏதோ முக்கியமான வேலை வந்துவிட்டபடியால் ராகவன் அந்த வருஷம் சிம்லாவுக்குப் போக முடியவில்லை. "நீ மட்டும் குழந்தையை அழைத்துக் கொண்டு போய் வருகிறாயா? எத்தனையோ ஸ்திரீகள் தனியாகப் போகிறார்கள். பயம் ஒன்றுமில்லை" என்று ராகவன் சொன்னான். "அதெல்லாம் முடியாது! நீங்கள் வராமல் எனக்கு மட்டும் தனியாக மலைவாசம் என்ன வந்தது? போக மாட்டேன்!" என்று சீதா கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

ராகவனும் சீதாவும் மலைவாசம் வேண்டாமென்று டில்லியில் இருந்துவிடத் தயாராயிருந்தாலும், அவர்கள் வீட்டு வேலைக்காரன் அப்படியிருக்கச் சம்மதிக்கவில்லை. அவன் நேபாள தேசத்திலிருந்து வந்தவன். "இந்த உஷ்ணத்தை என்னால் சகிக்க முடியாது!" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தவன், ஒரு நாள் திடீரென்று சொல்லிக் கொள்ளாமல் கடையைக் கட்டிவிட்டான்.

வீட்டு வேலைக்காரிக்குக்கூட அன்றைக்கு என்னவோ பைத்தியம் பிடித்துவிட்டது. "மூன்று நாள் லீவு வேண்டும்" என்று எஜமானியைக் கேட்டாள். "முடியாது" என்று சீதா சொன்னாள். "அப்படியானால் உங்கள் வேலை வேண்டாம்!" என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

ஆகவேதான் சீதா குழந்தையுடன் அன்று மாலை வீட்டிலே தனியாக இருந்தாள். எட்டு மணி வரையில் வஸந்தி "அப்பா எப்ப வருவா?" என்று கேட்டுக் கொண்டிருந்துவிட்டுத் தூங்கிப் போய்விட்டாள். குழந்தை தூங்கிய பிறகு சீதா தனிமையை அதிகமாக உணரத் தொடங்கினாள்.

அன்றைக்கு ராகவன் ஆபீசுக்குக் கிளம்பியபோது, ''இன்றைக்கு எப்படியாவது சூரியா இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து அவனை அழைத்துக் கொண்டு வந்து சேருகிறேன்!'' என்று சொல்லிவிட்டுப் போனான். அதனாலேதான் இன்னும் வரவில்லையோ என்னமோ? சூரியாவைத் தேடிக் கொண்டிருக்கிறாரோ, என்னமோ ? சூரியா மட்டும் இன்றைக்கு வரட்டும்; அவனுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன்! லலிதாவுக்கு என்னவெல்லாம் எழுதியிருக்கிறான்? ரஜனிப்பூர் ஏரி சம்பவத்தைப் பற்றி இவன் எதற்காக எழுத வேண்டும்? அப்படியே இவன் எழுதினாலும் அவள் வேறே தன் அகத்துக்காரரிடம் சொல்லியிருக்கிறாள்! அவர்கள் எல்லாரும் இவரைப் பற்றி என்ன நினைத்துக் கொள்ளுவார்கள்?....



என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். அந்தப் பட்டிக்காட்டு ஜன்மங்கள் என்ன நினைத்துக், கொண்டால் இங்கே யாருக்கு என்ன?

இருந்தாலும் லலிதாவுக்கு ஒரு கடிதம் எழுதி வைக்கலாம். பார்க்கப் போனால் அவளைத் தவிர நமக்குத்தான் யார் இருக்கிறார்கள்? தாரிணியின் சிநேகிதத்தைப் பற்றிப் பிரமாதமாக நினைத்தோமே? டில்லிக்கு வந்த பிறகு அவள் ஒரு தடவையாவது வந்து எட்டிக்கூடப் பார்க்கவில்லை. லலிதாவாயிருந்தால் இப்படியிருப்பாளா? எப்படியும் பழைய சிநேகிதத்துக்கு இணையாகாது. புது சிநேகிதமெல்லாம் ரயில் சிநேகிதம் மாதிரிதான்.


இந்த முடிவுக்கு வந்த சீதா லலிதாவுக்குப் பதில் எழுதத் தொடங்கினாள் :

''என் உயிருக்குயிரான தோழி லலிதா! உன்னுடைய விவரமான கடிதம் கிடைத்தது. ரொம்பவும் சந்தோஷம் அடைந்தேன். தேவப்பட்டணத்தில் நடந்த குப்பைத் தொட்டி எலெக்ஷனைப் பற்றி எழுதியிருந்தது ரொம்ப வேடிக்கையாயிருந்தது. அதனால் உன்னுடைய சிநேகிதியை நீ இழந்து விட்டதையும் கவனித்தேன். உனக்கு நன்றாக வேணும், லலிதா! நான் ஒருத்தி உன் பிராண சிநேகிதி இருக்கும்போது வேறொரு சிநேகிதம் நீ எவ்வாறு செய்து கொள்ளலாம்? ஆகையினால்தான் கடவுள் உன்னை இந்தவிதமாகத் தண்டித்திருக்கிறார்.

ஆனால் நானும் இங்கே சில புதிய சிநேகிதங்கள் செய்து கொண்டிருக்கிறேன் என்பதை உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ரஜனிபுரத்துத் திவான் குமாரிகளைப் பற்றி முன் கடிதத்தில் எழுதியிருக்கிறேன் அல்லவா? அவர்கள் மூன்று வாரங்களுக்கு முன்னால் இங்கே வந்திருந்தார்கள். எங்கள் வீட்டுக்கும் வந்தார்கள். எல்லாருமாக வைஸ்ராய் அரண்மனையில் நடந்த 'கார்டன் பார்ட்டி'க்குப் போயிருந்தோம். அம்மம்மா! அதைப் பற்றி நான் என்னவென்று சொல்வது?

அரபிக் கதைகளில் நாம் படித்திருக்கும் அற்புதக் காட்சிகளையும் சினிமாக்களில் பார்த்திருக்கும் அதிசயக் காட்சிகளையும் மிஞ்சி விட்டது. வைஸ்ராய்த்தோட்டத்தின் அழகைச்

சொல்வேனு? அங்கேயிருந்த புஷ்பச் செடிகளேயும் அலங்கார விருட்சங்களேயும் வர்ணிப்பேனு? மரங்களுக்குள்ளேயும் செடிகளுக்குள்ளேயும் மறைத்துக் கண் கூசாதபடி விளக்குப் போட்டிருந்த அதிசயத்தைச் சொல்வேனு? அங்கே வந்திருந்த சீமான்களே யும் சீமாட்டிகளேயும் அவர்களுடைய அலங்கார உடைகளேயும் ஆபரணங்களேயும் வர்ணிப்பேனு? லலிதா! வெள்ளேக்கார ஸ்திரீகள் பளபளவென்று ஜொலித்த கறுப்பு உடைகளே அணிந்து வந்திருந்தார்கள். நம்முடைய நாட்டு ஸ்திரீகள் பலர் நம்முடைய நாட்டு வழக்கப்படி பல வர்ணச் சேலைகளே உடுத்திக் கொண்டு வந்திருந்தார்கள். ஒவ்வொரு புடவையும்



ஒரு மோஸ்தர். அவர்கள் அணிந்து கொண்டிருந்த ஆபரணங்களும் அப்படியே. எல்லாம் ஒரே ஜொலிப்புத் தான். எனக்குத் திக்பிரமையாயிருந்தது. ஆனால் இவாளுடைய பெண்கள் பாமாவும் தாமாவும் இந்த மாதிரி 'பார்ட்டி'களுக்குப் பல தடவை போய்ப் பழக்கப்பட்டவர்களாதலால் அவர்களுக்குச் சகஜமாயிருந்தது. அங்கே வந்திருந்தவர்களில் அநேகம் பேர்களை அவர்களுக்குத் தெரிந்திருந்தது. என்னைப் பலருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள். வெள்ளைக்காரர்களுக்கு நம்மைப் புதிதாக அறிமுகப்படுத்தியதும் அவர்கள் உடனே, 'ஹவ் டு யூ டு!' என்று கேட்கும் அழகு ஒன்றே போதும்! லலிதா! வெள்ளைக்காரர்களைப் பற்றி அவர்கள் அப்படி, இப்படி என்று ஓயாமல் தூஷித்துக் கொண்டிருப்பதனால் என்ன பிரயோசனம்? அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. முக்கியமாக, ஒருவருக்கொருவர் மரியாதையாக எப்படி நடந்து கொள்வது என்பதை வெள்ளைக்காரர்களிடமிருந்து தான் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

தேவப்பட்டணம் தேர்தலைப் பற்றி நீ எழுதியிருந்தாயே? இங்கிலீஷ்காரர்களின் தேசத்திலுந்தான் தேர்தல் நடக்கிறது. தேர்தல் முடிந்துவிட்டால், ஜயித்தவர்களைத் தோற்றவர்கள்தான் முதன் முதலில் பாராட்டுவார்களாம். நம்முடைய ஊரில் தேர்தல் எதிர்க்கட்சியில் இருந்துவிட்டால் அப்புறம் ஜன்ம சத்துருக்களைப் போல் நடந்து கொள்கிறார்கள். என்ன மூடத்தனம்!

நவநாகரிகங்களின் அலங்காரங்களைப் பற்றிக் குறை சொல்லி உனக்கு முன்னே எழுதியிருந்தேன் அல்லவா? அந்த விஷயத்திலேகூட என்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டிருக்கிறேன். வைஸ்ராய் மாளிகையில் நடந்த பார்ட்டியில் பார்த்தபோது தான், 'லிப்-ஸ்டிக்' போட்டுக்கொள்வதிலும் ஓர் அழகு இருக்கிறது என்று எனக்குத் தெரிந்தது. இவர்கூட அடிக்கடி, 'ரோமாபுரியில் இருக்கும் போது ரோமர்கள் செய்வது போலச் செய்ய வேண்டும்' என்ற இங்கிலீஷ் பழமொழியை எடுத்துச் சொல்வார். நானும் புதுடில்லியில் இருக்கும்போது புதுடில்லிக்காரர்களைப் போல் தான் நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துவிட்டேன். நம்முடைய பட்டிக்காட்டு வழக்கந்தான் சரியான வழக்கம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் யார் கேட்பார்கள்? நீதான் சொல்லேன்! நம்முடைய பாட்டிகள் முகத்தில் ஒரு வீசை மஞ்சளை அரைத்துப் பூசிக் கொண்டிருந்தார்கள். அப்படிச் செய்து கொள்ள நமக்கு இப்போதெல்லாம் பிடிக்கிறதா?....

சூரியா உனக்கு என்னவெல்லாமோ எழுதியிருக்கிறான் என்று தோன்றுகிறது. அதையெல்லாம் நீ நம்ப வேண்டாம். சூரியா இங்கே வந்தால் அவனைச் சண்டை பிடிக்கலாம் என்றிருக்கிறேன். அவன் பார்க்காத விஷயத்தைப் பற்றி யாரோ சொன்னதை வைத்துக் கொண்டு எதற்காக எழுதுகிறான்? அவனுக்கு யார் சொல்லியிருக்கக் கூடும் என்றும் தெரியவில்லை. ஒருவேளை, தாரிணி என்கிறவளைப் பற்றி எழுதியிருந்தானே. அவள்தான் ஏதாவது சொன்னாளோ, என்னமோ? அப்புறம் யோசித்துப் பார்க்கப் பார்க்க, அவள் பேரில் எனக்குச் சந்தேகம் உதிக்கிறது. அவள் விஷயம் எல்லாமே மர்மமாயிருக்கிறது. டில்லிக்கு வந்த பிறகு ஒரு தடவைகூட அவள் என்னை வந்து பார்க்கவில்லை. அதற்குப் பதிலாகச் சூரியாவைப் பார்த்துப் பொய்யும் புளுகும் சொல்லி வைத்திருக்கிறாள்.

நான் ஏரித் தண்ணீரில் விழுந்து முழுகும் போது என் அகத்துக்காரர் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பாரா? அது சுத்தப் பொய். அந்த ஏரியில் எங்கேயும் கழுத்துக்கு மேலே ஆழம் இல்லை என்று படகுக்காரன் சொன்னான். அதனாலேதான் இவர் கவலையின்றிப் படகிலிருந்தபடியே என்னை எடுத்து விடலாம் என்று இருந்தார். அதற்குள்ளே அந்தத் தாரிணி என்கிறவள் தனக்கு நீந்தத் தெரிகிற பெருமையைக் காட்டுவதற்காகத் தண்ணீரில் குதித்து விட்டாள். என்ன இருந்தாலும் புருஷர்கள் செய்ய வேண்டிய காரியத்தை ஸ்திரீகள் செய்தால் அவ்வளவு நன்றாயில்லைதான்! இந்த மாதிரி மூத்திரிக் கொட்டை ஜன்மங்களும் உலகத்தில் இருக்கின்றன. என்ன செய்யலாம்?

நான் ஜலத்தில் மூழ்கி மூர்ச்சை போய் விட்டேன் என்பது உண்மை தான். ஆனால் அதற்குக் காரணம் அலை பாதி, பயம் பாதி; அலை மோதித் தலைக்கு மேலே போன போது முழுகிப் போய்விட்டதாகவே எண்ணிக்கொண்டு விட்டேன். லலிதா! இப்போதெல்லாம் எனக்கு அடிக்கடி பயமாயிருக்கிறதடி! காரணமில்லாமலே திடீர் திடீர் என்று பயம் உண்டாகிறது. ஏதாவது வியாதிதானோ என்னமோ தெரியவில்லை. ராஜம்பேட்டைப் பட்டிக்காட்டிலே யென்றால், 'சங்கா தோஷம்' என்றும், 'பேய் பிசாசு' என்றும் ஏதாவது

கட்டிவிடுவார்கள். பாட்டிமார்கள், 'பில்லி சூனியம்' என்றும், 'ஏவல்வினை' என்றும் கதை கட்டிவிடுவார்கள். அதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஆகையினால்தான் ஏதாவது வியாதியாயிருக்குமோ என்று பயப்படுகிறேன்........

இப்போதுகூடப் பார்! திடீரென்று என் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்கிறது! கை நடுங்குகிறது.... ஜன்னலுக்கு வெளியே செடிகளின் சலசலப்புச் சத்தம் கேட்டால் எதற்காக நான் பயப்பட வேண்டும்?.... வீட்டில் ஒருவரும் இல்லாவிட்டால்தான் என்ன? அடுத்த பங்களாவில் ஜனங்கள் இருக்கிறார்கள். ஒரு கூப்பாடு போட்டால் உடனே வந்துவிடுவார்கள்... அப்படியிருக்க, என்னுடைய பயத்துக்குக் கொஞ்சங்கூடக் காரணமேயில்லை.....!''

இந்த இடத்தில் சீதா கடிதத்தை நிறுத்தினாள். பயத்துக்குக் காரணமே இல்லை என்பது உண்மைதானா? லவலேசமும் காற்று அடிக்கவில்லையே? காற்றே இல்லாத போது செடிகள் எப்படிச் சலசலக்கும்?

ஜன்னல் வழியாகப் பார்க்கக் கூடாது என்ற மனத்தின் உறுதியை மீறி அவளுடைய கண்கள் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தன. பார்த்த நேரம் ஒரு விநாடிதான். உடனே கண்கள் இந்தப் பக்கம் திரும்பின. வெளியே பார்த்த அந்த ஒரு விநாடி நேரத்தில் செடிகளின் மறைவில் ஒரு முக்காடு அணிந்த உருவம் போவது போலக் காணப்பட்டது. அது வெறும் பிரமையா? அல்லது உண்மையா?

பிரமையோ, உண்மையோ, சீதாவின் நாக்கு பயத்தினால் தொண்டைக்குள்ளே போய்விட்டது போலத் தோன்றியது. கூச்சல் போட விரும்பினாள். ஆனால் சத்தம் வெளியில் வரவில்லை. கால்களும் கைகளும் நடுங்கின. பற்கள் ஒரு நிமிஷம் கிட்டிப் போயிருந்தன. அடுத்த நிமிஷம் கடகடவென்று அடித்துக் கொண்டன.

பயப்பிராந்தி நீங்கிப் பழைய நிலையை அடைவதற்கு ஐந்து நிமிஷம் ஆயிற்று. சீ! இதென்ன பைத்தியக்காரத்தனம்! இது என்ன வீண் பயம்? — இவ்விதம் எண்ணி லலிதாவுக்கு எழுதிய கடிதத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மறுபடியும் எழுத முயன்றாள். ஆனால் என்ன எழுதுவதென்று தோன்றவில்லை. விஷயம் ஒன்றும் மனத்துக்கு வரவில்லை. அதற்குப் பதிலாக, ''வாசல் கதவையும் கொல்லைக்கதவையும் தாளிட்டோமா?'' என்ற எண்ணம் தோன்றியது. வேலைக்காரி கோபித்துக் கொண்டு போனவள் ஒருவேளை பங்களாவில் கொல்லைக் கதவைக்கூடத் தாழ் போட்டிருக்க மாட்டாள். ஆனால் ஒரு நாளுமில்லாத பயம் இன்றைக்குமட்டும் என்ன வந்தது? பயம் ஒன்றுமில்லாவிட்டாலும் வாசல் கதவையும் கொல்லைக் கதவையும் தாளிட்டு வைப்பதே நல்லது. அதனால் கெடுதல் ஒன்றும் இல்லையல்லவா?...''

இவ்வாறு முடிவு செய்து சீதா தைரியமாக எழுந்து சென்று வாசற்பக்கம் வந்தாள். சந்தடியே இல்லாதிருந்த சாலையின் இருபுறமும் உற்றுப் பார்த்தாள். கார் ஒன்றும் வரக் காணோம். கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள். கொல்லைக் கதவையும் பார்த்து, ஒருவேளை திறந்திருந்தால் தாளிட்டு விட வேண்டியதுதான். இப்படி நினைத்துக் கொல்லைப் பக்கம் அடியெடுத்து வைத்தபோது...ஆ! அது என்ன சத்தம்? துப்பாக்கிச் சத்தம் இல்லை; இடி இடிக்கும் சத்தம் இல்லை; புலி உறுமும் சத்தமும் இல்லை; பாம்பு சீறும் சத்தமும் இல்லை. குழாயிலிருந்து ஜலம் விழும் சர்வ சாதாரண சத்தம்தான்! அந்தச் சத்தம் ஸ்நான அறையிலிருந்து வந்து கொண்டிருந்தது! மறுபடியும் சீதாவின் நாக்கு அவளுடைய தொண்டைக்குள்ளே மடங்கிச் சென்று அடைத்துக் கொண்டது. அவளுடைய கால்கள் மேலே ஓர் அடியும் எடுத்து வைக்க முடியாமல் நின்ற இடத்திலேயே வேரூன்றி நின்றன. தனக்குத் தெரியாமல் வீட்டுக்குள் யாரோ புகுந்து கொல்லைப்புறத்து ஸ்நான அறைக்குள் சென்றிருக்கவேண்டும்; தண்ணீர்க் குழாயைத் திறந்துவிட்டிருக்க வேண்டும். அது யாராயிருக்கும்?

18. ''யார் அங்கே?''

சீதாவுக்குத் திடீரென்று தைரியம் பிறந்தது. சீ! குழாயிலிருந்து தண்ணீர் விழுந்தால் அதற்காகப் பயப்படுவதா? ஒருவேளை தானே குழாயைத் திறந்துவிட்டு மறதியாக மூடாமல் வந்திருக்கலாம். ஆபீஸ் அறையில் கடிதம் எழுதிக் கொண்டிருந்த போது அதைக் கவனியாமல் இருந்திருக்கலாம். இப்போது ஆபீஸ் அறையை விட்டு வெளியே வந்ததும் சத்தம் கேட்கிறது. இந்தச் சின்ன விஷயத்துக்கு இவ்வளவு பயமா? சீதா தன்னுடைய அசட்டுத்தனத்தை நினைத்துத் தானே புன்னகை புரிந்து கொண்டாள். குழாயை நிறுத்திவிட்டுக் கொல்லைப்புறக் கதவையும் பார்த்துவிட்டு வரலாம் என்று எண்ணிக் கொண்டு நடந்தாள்.

நாலடி வைப்பதற்குள்ளே குழாய்த் தண்ணீரின் ஓசை நின்றது. அப்போது திடீரென்று ஏற்பட்ட நிச்சப்தம் சீதாவை முன்னைக் காட்டிலும் பன் மடங்கு பயங்கரத்தில் ஆழ்த்திற்று.

குழாயிலிருந்து தண்ணீர் விழும் ஓசை நின்றது என்றால், அதன் பொருள் என்ன? திறந்திருந்த குழாயை யாரோ திருகி மூடியிருக்க வேண்டும்! மூடியது யார் ?

ஜன்னல் வழியாகப் பார்த்தபோது செடிகளுக்குள்ளே புகுந்து சென்ற முக்காடிட்ட உருவம் சீதாவுக்கு நினைவு வந்தது. யாரோ கொல்லைப்புறமாக வந்து வீட்டுக்குள் நுழைந்து ஸ்நான அறைக்குள்ளே புகுந்திருக்க வேண்டும். அது யாராயிருக்கும் ?

'யாராயிருந்தால்தான் என்ன? எதற் காக இப்படிப் பயப்படுகிறோம்?' என்று எண்ணிச் சீதா மறுபடியும் தன்னைத் தானே தைரியப்படுத்திக் கொண்டாள். ஒரு வேளை வீட்டு வேலைக்காரிக்குப் புத்தி வந்து திரும்பி வந்தாலும் வந் திருக்கலாம். வாசல் வழியாக வர வெட்கப்பட்டுக் கொண்டு கொல்லைப் புறமாக வந்திருக்கலாம். ஆம்; அப் படித்தான் இருக்க வேண்டும்! இதற் காகவா இவ்வளவு பயப்பட்டோம்!

நின்றிருந்த குழாய் மறுபடியும் தண் ணீரைக் கொட்ட ஆரம்பித்தது. சந் தேகத்தையும் கலக்கத்தையும் அதற்கு மேல் சீதாவினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. யாராயிருந்தாலும் சரி, போய்ப் பார்த்தே தீருவது என்று உறுதி கொண்டாள். தடுமாறிய கால்களைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு ஸ்நான அறைக்குப் பக்கமாக வந்து சேர்ந்தாள்; கதவு சாத்தியிருந்தது. ஆனால் உட்புறம் தாளிடவில்லை என்று தெரிந்தது. நடுங்கிய கையினால் கதவை இலேசாகத் தட்டினாள். உள்ளே குழாய்ச் சத்தம் மறுபடியும் நின்றது. அந்த நிசப்தத்தில் சீதா, "யார் அங்கே?" என்று கேட்டாள். கேட்டவள் சீதாதான்; ஆனால் அவளுக்கே அந்தக் குரல் தன்னுடையதாகத் தெரியவில்லை.

ஸ்நான அறைக்கு உள்ளே காலடிச் சத்தம் கேட்டது. ஒவ்வொரு தடவை கேட்ட காலடிச் சத்தத்துக்கும் ஒன்பது தடவை சீதாவின் நெஞ்சு அடித்துக் கொண்டது. ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து; கதவு உட்பக்கமிருந்து திறந்து கொண்டது.

திறந்த வாசற்படியருகில் ஓர் உருவம் நின்றது! அது தன் கையில் ஒரு கத்தி வைத்துக் கொண்டிருந்தது.

இது என்ன பேயா, பிசாசா ? அல் லது மனித ஜன்மந்தானா? இதன் முகத் தில் உள்ளவை கண்களா? அல்லது ஜொலிக்கும் கொள்ளிகளா? அல்லது சிவப்பு வர்ண எலெக்ட்ரிக் பல்புகளா?

இந்த உருவத்தை எங்கேயோ பார்த் திருக்கிறோமே ? எங்கே ? எங்கே ? எப்போது ?

ஐயோ! இது என்ன? தலையை ஏன் இப்படிச் சுற்றுகிறது? ஒன்றும் புரிய வில்லையே! மூளை குழம்புகிறது என்பது இதுதானோ?

இங்கே வந்து நாம் நின்று எத்தனை நேரம் ஆயிற்று ? இந்த உருவத்தைப் பார்க்கத் தொடங்கி எத்தனை நேரம் ஆயிற்று? ஒரு வருஷம் இருக்குமோ ? ஆயிரம் வருஷங்கள் இருக்குமோ? இந்த உருவம் ஏன் இப்படியே நின்று கொண் டிருக்கிறது ? ஏன் தன்னுடைய கொள் ளிக் கண்களால் நம்மை உற்றுப் பார்த் துக் கொண்டிருக்கிறது? ஐயோ! மயக்க மாய் வருகிறதே !

இல்லை; மயக்கம் வரவில்லை. அறிவு தெளிவாய்த்தான் இருக்கிறது. கண் ணும் நன்றாய்த் தெரிகிறது. அதோ அந்த உருவம் புன்னகை புரிகிறதே ! பேய் பிசாசு புன்னகை புரியுமோ ? அதோ வாயைத் திறந்து பேசுகிறதே !

"சீதா! நான் யார் என்று தெரி கிறதா? ஞாபகம் வருகிறதா ?"

இந்த வார்த்தைகள் காதில் விழுந்த தும் சீதாவுக்கு எல்லாம் ஞாபகம் வந்து விட்டது. சீ! இவள் பேயுமில்லை ; பிசாசுமில்லை. பம்பாயில் தன் தாயார் படுத்த படுக்கையாயிருந்த சமயம் மர்ம மாக வந்து ரத்தின மாலையும் இரண் டாயிரம் ரூபாயும் கொடுத்துவிட்டுப் போன ஸ்திரீதான் இவள்! மனப் பிராந்தியினால் எப்படியெல்லாமோ தோன்றிவிட்டது.

இவளை மறுபடியும் எங்கோ பார்த் தோமே? அது எங்கே?... இதோ ஞாப கம் வருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னால் இந்தச் சாலை திரும்பும் முடுக் கில் மரத்தின் பின்னால் கையில் கத்தி யுடன் இவள் நின்றதைப் பார்த்தோம்.'

யாரிடமோ இவளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோமே? ஆம்; தாரிணி யிடம் பேசிக் கொண்டிருந்தோம். தாரிணி இவளுடைய வளர்ப்பு மகள். இவள் பெயர் ரஸியா பேகம்.

"சீதா! ஏன் இப்படி விழித்துக் கொண்டு நிற்கிறாய்? என்னைத் தெரி கிறதா, இல்லையா ?"

சீதா மிக முயன்று வாயைத் திறந்து இரகசியம் பேசும் குரலில், "தெரி கிறது !" என்றாள்.

"தெரிகிறதா? நான் யார்?"

சீதா சிறிது யோசித்துத் தன்னுடைய கழுத்தில் அணிந்திருந்த இரத்தினமாலை

யைத் தொட்டு, ''இதைக் கொடுத்தவன்!'' என்றாள்.

''நீ நல்ல பெண்; ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாய். வீட்டில் நீ மட்டும் தனியாய் இருக்கிறாயா? வேறு யாரும் இல்லையா?'' என்று அந்த ஸ்திரீ கேட்டாள்.

இந்தக் கேள்வி சீதாவின் காதில் விழவில்லை. ஏனெனில், அவளுடைய கண்ணும் கவனமும் அதற்குள் வேறொரு பொருளிடத்தில் சென்று விட்டன. அந்த ஸ்திரீயின் இடுப்பிலிருந்து தொங்கிய கைக்குட்டைதான் அந்தப் பொருள். அந்த வெள்ளைக் கைக்குட்டையில் ஒரு பாதி செக்கச் செவேலென்று இருந்தது.

அதைச் சீதா பார்த்து மிரள விழித்துக் கொண்டே, ''ஐயோ! இரத்தம், இரத்தம்!'' என்று அலறினாள்.

திடீரென்று அவளுக்கு எப்படியோ விம்மலும் அழுகையும் கலந்து வந்தன.

ரஸியா பேகம் இரண்டு அடி எடுத்து முன்னால் வைத்துச் சீதாவை நெருங்கி வந்தாள். அவளுடைய ஒரு தோளைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினாள். பிறகு அவளை உற்றுப் பார்த்து, ''இதோ பார், சீதா! நீ சமர்த்தாயிருப்பாய் என்று நினைத்தேன். எல்லாப் பெண்களையும் போல் மூடத்தனமாய்த்தானிருக்கிறாய். நீ அழுது கூச்சல் போட்டு, — இப்படி ஏதாவது பண்ணினாயோ, என்ன செய்வேன் தெரியுமா? சற்று முன்னால் சாலையில் ஒரு பைத்தியம் பிடித்த நாயை இந்தக் கத்தியினால் குத்திக் கொன்றேன். அது மாதிரி உன்னையும் கொன்று விடுவேன்!'' என்றாள்.


சீதாவின் விம்மல் உடனே நின்றது. இன்னமும் அந்தக் கைக்குட்டையைப் பார்த்துக் கொண்டு, ''அது நாயின் இரத்தமா?'' என்றாள்.

''ஆமாம்; உன்னை இது ரொம்பப் பயப்படுத்துகிறது போலிருக்கிறது! கொஞ்சம் இரு! குழாயில் அலம்பிக் கொண்டு வருகிறேன்.''

இவ்விதம் சொல்லிவிட்டு அந்த ஸ்திரீ குழாயடிக்குப் போய்த் தண்ணீரைத் திறந்துவிட்டுக் கைக்குட்டையை நனைத்துக் கசக்கினாள். ஆனால் கறை போகிற வழியாயில்லை.

''இதை நெருப்பிலே போட்டுக் கொளுத்த வேண்டியதுதான்!'' என்று சொல்லிக் கீழே எறிந்து விட்டுத் திரும்பி வந்தாள்.

சீதாவின் மனம் இதற்குள் வேலை செய்து கொண்டேயிருந்தது. இவள் நாயைக் கொன்றதாகச் சொன்னது உண்மைதானா? நாயைக் கொன்றிருந்தால் எதற்காகக் கொல்லைப்புறமாக வந்



''போக்கிரிகள் மோசமாக நடந்துகொள்வதைத் தடுக்க நான் வெளியே செல்லும்போது எப்பொழுதும் என்னுடைய கைப்பையில் ஒரு பொட்டலம் மிளகாய்ப் பொடி எடுத்துச் செல்கிறேன். இதை உபயோகிக்கச் சந்தர்ப்பம் வரவில்லை என்றாலும் எங்கேயும் தைரியமாகச் செல்கிறேன்'' என்று ஒரு பெண் 'டைம்ஸ் வீக்லி' கடிதப் பகுதியில் எழுதியிருக்கிறார்.

'பாலி'

தாள்? நாம் இங்கே இருப்பது தெரிந்து வந்தாளா? தற்செயலாக வந்தாளா? திடீரென்று அவர் இப்போது வந்துவிட்டால் என்ன செய்வது.....? அதற்குள் இவளை எப்படியாவது நல்ல வார்த்தை சொல்லிப் போகச் சொல்லிவிட வேண்டும்! இல்லாவிட்டால் என்ன ஆகுமோ? கடவுளே! எதற்காக இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்? வேறு எங்கேயாவது போயிருக்கக் கூடாதா?

அதற்குள் அந்த ஸ்திரீ சீதாவை நெருங்கி வந்து, ''வீட்டில் நீ மட்டும் தனியாக இருக்கிறாயா? வேறு யாரும் இல்லையா?'' என்று மறுபடியும் கேட்டாள்.

''இப்போது தனியாகத்தான் இருக்கிறேன். ஆனால் அவர் சீக்கிரத்தில் வந்துவிடுவார். சாயங்காலமே வந்திருக்க வேண்டும். ஏதனாலோ இன்று இன்னும் வரவில்லை.''

''ஊரிலே எந்தப் பெண் பிள்ளையைச் சுற்றிக் கொண்டு அலைகிறானோ? யார் கண்டது? அயோக்கியன்!''

இந்த வார்த்தைகள் சீதாவின் இருதயத்தை ஊசியால் குத்துவது போலத் தைத்தன. பயங்கரமான பல சந்தேகங்கள் உதித்தன.

''என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'' என்று நடுங்கிய குரலில் கேட்டாள்.

''அசடே! எனக்கு உன் புருஷனைப் பற்றி என்னமாய்த் தெரியும்? புருஷர்கள் எல்லோருமே அயோக்கியர்கள் என்று என் எண்ணம். அதனால் பொதுப்படையாகச் சொன்னேனே தவிர உன்னுடைய புருஷனைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லவில்லை. உன் அபிப்பிராயம் என்ன? உன் புருஷன் எப்படி?''

''எப்படி என்றால் நான் என்னத்தைச் சொல்வது? மொத்தத்தில் நல்லவர்தான். ஆனால் கொஞ்சம் முன்

கோபக்காரர். இந்த நிலேயில் உங்களேப் பார்த்தால் ஏதாவது தொந்தரவாய் முடியலாம். அவர் வருவதற்குள்ளே நீங்கள்....'' என்று சீதா தயங்கினுள்.

''நீ சொல்வது எனக்குத் தெரிகிறது. உன் புருஷன் வருவதற்குள் நான் போய் விட்டால் நல்லது என்கிருய். அப்படித்தானே? நல்ல புண்ணியவதி நீ! ஒரு வேளை எனக்குச் சாப்பாடு போடக்கூட உனக்கு மனமில்லே!''

''ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள். என் கல்யாணத்துக்கு நீங்கள் செய்த உதவியைப் பற்றி எத்தனையோ தடவை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒரு வேளை சாப்பாடுதானு பெரிது? அவர் வந்துவிட்டால் யார், இன்னர் என்று தெரிவிக்கும்படி நேருமே என்று யோசித்தேன். பேஷாகச் சாப்பிட்டுவிட்டுப் போங்கள்.''

''சீதா! எனக்குச் சாப்பாடு வேண்டாம். எத்தனையோ வருஷத்துக்குப், பிறகு இன்றைக்குத்தான் எனது மனம் குளிர்ந்து வயிறும் குளிர்ந்திருக்கிறது. ஆனுல் இன்று ராத்திரி நான் எங்கேயும் போக முடியாது. உடம்பு களேப்பாயிருக்கிறது. நன்ருகத் தூங்கிப் பல நாட்களாயிற்று. இன்று ராத்திரி இங்கே படுத்துத் தூங்கிவிட்டுத்தான் போக வேண்டும். யார், இன்னர் என்று உன் புருஷனுக்குச் சொல்ல வேண்டியதில்லே. நான் இருப்பதே தெரிய வேண்டியதில்லே. இந்த வீட்டு மாடியில் அறை இருக்கிறதா?''

''அதுதானே இல்லே? இந்தப் புது டில்லியில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டிக் கொடுத்திருக்கும் வீடுகளெல்லாம் மாடி இல்லாத வீடுகள்!''

அந்த ஸ்திரீ சுற்றுமுற்றும் பார்த்தாள். ஸ்நான அறைக்கு எதிர்ப்புறமிருந்த அறையைச் சுட்டிக்காட்டி, ''அந்த அறையில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''விறகு, கரி, தட்டுமுட்டுச் சாமான்கள்'' என்ருள் சீதா.

அறையை அந்த ஸ்திரீ திறந்து பார்த்துவிட்டு, ''சரி! இதில் நான் படுத்துக் கொள்கிறேன். ஒருவருக்கும் தெரிய வேண்டாம். வெளிக் கதவை நீ பூட்டிக் கொண்டுவிடு!'' என்ருள்.

''இதில் எப்படிப் படுத்துக் கொள்வீர்கள்? காற்றே வராதே? சாமான்களேக் கன்னுபின்னுவென்று போட்டிருக்கிறதே!''

''பாதகமில்லே, சீதா! இதைக் காட்டிலும் எவ்வளவோ கேவலமான இடங்களில் நான் இருந்திருக்கிறேன்.''

இதைக் கேட்ட சீதாவின் மனம் இளகிற்று. அந்த ஸ்திரீயின் வரலாறு எப்படியிருக்கும் என்று தான் கற்பனே செய்து கொண்டதெல்லாம் நினேவு வந்தது. வாழ்க்கையில் ரொம்பவும் கஷ்டங்களே அநுபவித்தவள் என்பதில் சந்தேகமில்லே. அந்தக் கஷ்டங்கள் அவளுக்கு ரஜனிப்பூர் ராஜாவினுல் நேர்ந்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். ஆனுல் அவை என்னமாதிரி கஷ்டங்கள்? அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசை உண்டாயிற்று. அதற்கு இப்போது அவகாசம் இல்லே. எந்த நிமிஷத்திலும் தன் கணவர் திரும்பி வந்து விடலாம். வந்தால், பைத்தியக்காரியைப் போல் தோன்றும் இவளேக் கட்டாயம் விரட்டி அடித்துவிடுவார்.

''ஏதோ ஒரு ஜமக்காளமும் தலேயணேயுமாவது கொண்டு வந்து கொடுக்கிறேன்'' என்று சொல்லி விட்டுச் சீதா விடுவிடு என்று உள்ளே போனுள். ஜமக்காளமும் தலேயணேயும் எடுத்துக் கொண்டு வந்தாள். இத்தனே நேரமும் அவளுடைய உள் மனம், ''எதையோ மறந்து விட்டோம்.... முக்கியமான விஷயம். அதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டேயிருந்தது. அது இப்போது நினேவு வந்தது. மறந்து போய் நினேவு வந்த விஷயம் தாரிணியின் கோரிக்கை தான்.

ஜமக்காளத்தையும் தலேயணேயையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ''நிச்சயமாகச் சாப்பாடு வேண்டாமா? பூரியும் சப்பாத்தியும் இங்கேயே கொண்டு வந்து கொடுக்கிறேனே; நீங்கள் சாவகாசமாகப் பசித்தபோது சாப்பிட்டுக் கொள்ளலாம்'' என்ருள் சீதா.

''வேண்டாம், வேண்டாம். இன்று என்ன கிழமை? செவ்வாய்க் கிழமை தானே?''

''ஆமாம்.''

''செவ்வாய் இரவு நான் சாப்பிடும் வழக்கம் இல்லே. அப்படி விரதம். இன்றைக்கு நிச்சயமாய்ச் சாப்பிட மாட்டேன். இனி மேல் நீ போய் உன் காரியத்தைப் பார். உன் புருஷன் தினம் காலேயில் எத்தனே மணிக்கு எழுந்திருப்பான்?''

''சாதாரணமாய் ஏழு மணிக்குத்தான். நான் ஆறு மணிக்கே விழித்துக் கொண்டுவிடுவேன்.''

''அப்படியானுல் நீ எழுந்ததும் வந்து கதவைத் திறந்து விட்டுவிடு.''

''நான் வருவதற்காக நீங்கள் காத்திருக்கவேண்டியதில்லே. இந்த அறைக்கு இன்னெரு கதவு இருக்கிறது. அது

கொல்லைப்புறம் திறக்கும். இராத்திரி தாள் போட்டுக் கொள்ளுங்கள். காலையில் இஷ்டமான போது எழுந்து போகலாம்.''

''ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. உனக்கு எத்தனை குழந்தை ?''

''ஒரே ஒரு குழந்தைதான்! வயது மூன்று ஆகப் போகிறது. வசந்தி என்று பெயர். இப்போதுதான் கால் மணிக்கு முன்னுல் தூங்கினுள்.''

''வசந்தி சௌக்கியமா யிருக்கட்டும். புருஷர்களின் கொடுமைக்கு உள்ளாகாமல் இருக்கட்டும்.''

''நீங்கள் ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பீர்கள் போலிருக்கிறது.''

''அதைப் பற்றிச் சொல்ல இப்போது நேரமில்லை. நீ போய் உன் காரியத்தைப் பார் !''

''உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும்.''

''சீக்கிரம் கேள். ரொம்ப அலுப்பாயிருக்கிறது.''

''உங்கள் பெயர் என்ன?''

'' என் பெயர் எதுவாயிருந்தால் என்ன இப்போது?''

''நீங்கள் சொல்லா விட்டால் எனக்குத் தெரியாதா?''

''தெரிந்தால் சொல்லேன்.''

''ரஸியா பேகம்!''

வியப்புடனும் கோபத்துடனும் அந்த ஸ்திரீ சீதாவைப் பார்த்து, ''உனக்கு யார் சொன்னது?'' என்று கேட்டாள்.

'' அதை அப்புறம் சொல்கிறேன். உங்கள் பெயர் ரஸியா பேகமா இல்லையா?'' என்றுள் சீதா.

''உண்டு, இல்லை, இரண்டும். என்னுடைய பெயர் ரமாமணி. ஒரு காரியத்துக்குச் சில காலம் ரஸியா பேகம் என்று மறு பெயர் வைத்துக் கொண்டேன். அதை யாரோ உனக்குச் சொல்லியிருக்கிறுர்கள். சொல்லியது யாராக இருக்கும்? ஒரு வேளை அந்த அசட்டுப் பிராமணர்தானு?''

எந்த அசட்டுப் பிராமணரைக் குறிப்பிடுகிறுள் என்று சீதாவுக்குத் தெரியவில்லை. சட்டென்று ''வேறு யாரும் இல்லை. உங்கள் குமாரி தாரிணிதான் சொன்னுள்'' என்றுள்.

சீதா எதிர்பார்த்தது போலவே அந்த ஸ்திரீயைத் தூக்கி வாரிப் போட்டது.

சற்று நேரம் சீதாவை உற்றுப் பார்த்து விட்டு, '' நி ஜ மா க வா? தாரிணியா சொன்னுள்?'' என்று கேட்டாள்.

''ஆமாம். தாரிணிதான்.''

''அவளை எங்கே பார்த்தாய்? எப்போது?''



இன்னும் கொஞ்ச நாட்களில் இப்படியும் செய்தி வரலாம்:

''கால் பந்தாட்டப் போட்டியின் காரணமாக இன்று பெய்ய வேண்டிய மழை ஒத்திப் போடப்பட்டது.''

பவானிக் ஜூனல் - 'பாலி'

''கொஞ்ச நாளைக்கு முன்பு ஆக்ராவுக்குப் போயிருந்தோம். அப்போது சந்தித்தோம்.''

''அப்புறம்?''

'' ஆக்ராவிலிருந்து ரஜனிப்பூருக்குச் சென்றேம்...''

அந்த ஸ்திரீயின் உள்ளத்தில் ஏதேனும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தால் அதை அவள் முகம் சற்றும் காட்டவில்லை. மரத்திஞல் செய்த முகம் போல் ஆகிவிட்டது.

சீதா மேலும் சொன்னுள்: ''ரஜனிப்பூரில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தோம். தாரிணியை அவளுடைய தாய் தகப்பன் யார் என்று கேட்டேன். அப்போது தன்னை வளர்த்தவள் என்பதாக உங்களைப் பற்றிச் சொன்னுள். அவள் சொன்னதிலிருந்தும் எனக்குத் தெரிந்ததைக் கொண்டும் நீங்களாய்த்தான் இருக்கும் என்று ஊகித்துக் கொண்டேன்.''

''நீயும் தாரிணியும் ரொம்பச் சிநேகமாகி விட்டீர்களா?'' என்று ரமாமணி என்ற ரஸியா பேகம் கேட்டாள்.

''சிநேகமாகாமல் எப்படி இருக்க முடியும்? படகிலிருந்து நான் ஏரியில் விழுந்து விட்டேன். தாரிணிதான் உடனே தண்ணீரில் குதித்து நீந்தி வந்து என்னைக் காப்பாற்றினுள்.''

ரஸியா பேகத்தின் முகத்தில் சிறிது மலர்ச்சி காணப்பட்டது.

''என் மகளே மகள்!'' என்று குதூகலமாகக் கூறினுள்.

''மகளிடம் இவ்வளவு பிரியம் வைத்திருக்கிறீர்களே? ஆனுல் சந்தித்து வருஷக் கணக்கு ஆயிற்றுமே? உங்களைக் கண்டால் உடனே தனக்குத் தெரிவிக்கும்படி சொல்லி யிருக்கிறுள்.''

''தாரிணி இப்போது எங்கே இருக்கிறுள் தெரியுமா?''

''இந்த ஊரிலேதான் இருப்பதாகச் சொன்னுள். விலாசம் கூடத் தந்திருக்கிறுள். நாளைக் காலையில் சொல்லி

அனுப்பட்டுமா? நீங்கள் இங்கேயே நாளைக்கும் இருந்து தாரிணியைப் பார்த்துவிட்டுப் போகலாமே? என் அகத்துக்காரரிடம் எல்லா விவரங்களையும் சொல்லி விட்டால் போகிறது?''

ரஸியா பேகம் ஜமக்காளத்தையும் தலையணையையும் கீழே போட்டுவிட்டு, ''சீதா! எங்கே; என் கைமேலே உன் கையை வை!'' என்று அதட்டும் குரலில் கூறினாள்.

சீதா அவ்விதமே செய்தாள்.

''நான் இன்று இரவு இங்கு வந்ததைப் பற்றித் தாரிணியிடமாவது உன் புருஷனிடமாவது நீ சொல்லவே கூடாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் என்னைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவே கூடாது. அப்படி என் கையில் அடித்துச் சத்தியம் செய்து கொடு. இல்லாவிட்டால் பைத்தியம் பிடித்த நாயைக் கொன்றது போல் உன்னை இந்த நிமிஷமே கொன்று போட்டு விடுவேன்'' என்று கூறி ரஸியா பேகம் இடுப்பில் செருகியிருந்த கத்தியை இடது கையினால் எடுத்துத் தூக்கிக் காட்டினாள். சற்று முன்னால் சிறிது அமைதியடைந்திருந்த அவளுடைய முகத்தில் மறுபடியும் கொலை வெறி கூத்தாடியது.

சீதா மிரண்டு போய் அப்படியே சத்தியம் செய்து கொடுத்தாள். 'இந்த வெறி பிடித்த ஸ்திரீயிடம் எதற்காக இவ்வளவு பேச்சுக் கொடுத்தோம்' என்று தோன்றியது.

அந்தச் சமயத்தில் வாசலில் 'பாம்' 'பாம்' என்று மோட்டாரின் சத்தம் கேட்டது. அது அந்த வீட்டு மோட்டார் குழலின் சத்தம்தான்.

''அவர் வந்து விட்டார். நீங்கள் சீக்கிரம் அறைக்கு உள்ளே போங்கள்'' என்றாள் சீதா.

''ஜாக்கிரதை! ஞாபக மறதியாகக் கூட என்னைப் பற்றிப் பேச்சு எடுக்காதே!'' என்று சொல்லிக் கொண்டே ரஸியா பேகம் சாமான் அறைக்குள்ளே பிரவேசித்தாள்.

சீதா அறைக் கதவை இழுத்துப் பூட்டிவிட்டுப் பெருமூச்சு விட்டாள். பிறகு வாசற் கதவைத் திறக்க விரைந்து சென்றாள். (தொடரும்)

படித்துப் பாருங்கள்

திருவருள் பயக்கும் தெய்வத் திருமணங்கள்

கதை கேட்க எல்லாக் குழந்தைகளுக்கும் ஆசை. தெய்வக் குழந்தையும் இதற்கு விதிவிலக்கல்ல. குழந்தை கிருஷ்ணனைத் தொட்டிலில் போட்டு ஆட்டினாள் அன்னை யசோதை. குழந்தை தூங்கவில்லை. கதை சொல்ல ஆரம்பித்தாள். ''ராமன் என்பதாகத் தசரதனுக்கு ஒரு பிள்ளை இருந்தான். அவன் சீதையைக் கல்யாணம் செய்து கொண்டான். ராமனும் சீதையும் ராமனுடைய தம்பிலக்ஷ்மணனும் தண்டகாரண்யத்துக்குப் போனார்கள். அங்கே ராவணன் என்ற ராட்சதன் சீதையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்!'' என்றாள். உடனே பகவானுக்குத் தம் பூர்வ அவதார ஞாபகம் வந்துவிட்டது. ''ஏ, லட்சுமணா! என் தநுஸைக் கொண்டுவா!'' என்று குழந்தை கிருஷ்ணன் கத்தினாராம்.

இந்நூலில் தெய்வத் திருமணக் கதைகள் நிறைய உள்ளன. படித்துவிட்டுக் குழந்தைகளுக்குச் சொல்லலாம்.

''தெய்வத் திருமணங்கள் என்னும் நூலில் ஸ்ரீ மீனாக்ஷி, ருக்மிணி, சீதை, ஆண்டாள், பார்வதி என்னும் தேவிகளின் விவாஹங்கள் தெளிவான தமிழ் வசன ரூபமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. பொருத்தமானவையும், அர்த்த விளக்கத்துடன் கூடியவையுமான சம்ஸ்கிருத சுலோகங்கள், தமிழ்ப் பாடல்கள் அங்கங்கு மேற்கோள்களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தர்மம், பக்தி இவைகளின் விசேஷங்கள் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக ஸீதா கல்யாணத்தில் கம்பராமாயணமும் ருக்மிணி கல்யாணத்தில் கிருஷ்ண கர்ணாமிர்தமும் கதையமைப்புக்குச் சோபை அளிக்கின்றன'' என்று காஞ்சிப் பெரியவர்களின் அமுத வாக்கால் இந்நூலுக்குப் பாராட்டுக் கிடைத்திருப்பதே பெருமை.

கிடைக்குமிடம்: கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர், 29, தீனில் தெரு, சென்னை-15. விலை ரூ. 3.50.

ஆறறிவின் திகைப்பு
மனச் சந்நிதி

இரண்டுமே ஸ்ரீமதி கோமகளின் கதைத் தொகுதிகள். ஆறறிவின் திகைப்பில் பதினைந்து கதைகளும், மனச் சந்நிதியில் பதின்மூன்று கதைகளும் இடம் பெற்றுள்ளன. வாழ்க்கையைப் பல கோணங்களிலும் பார்த்து உள்ளத்தைத் தொடும் வண்ணம் எழுதப்பட்ட பல கதைகள் இவற்றில் அடங்கியுள்ளன.

மனித உடலையே விண்டு பிரித்துப் பார்த்துப் பழகியதால் ஆத்மா என்று ஒன்று உண்டு என்பதையே மறுக்கும் அளவுக்கு டாக்டர் அம்பிகா துணிய, அவள் உள்ளத்தைக் கவர்ந்த நந்தகுமார் அவள் மனத்தை மாற்றும் அருமையான கதை ஆறறிவின் திகைப்பு.

மனச் சந்நிதி என்னும் கதையில், மாறி வரும் உலகில் பண்டைய சம்பிரதாயங்களைத் தகர்த்தெறியும் முறையில் ஊர் இளவட்டங்கள் பேசுவதனால், வரதாச்சாரி என்னும் அர்ச்சகர் ஊரைவிட்டே போய்விட முனைகிறார். ஆனால் ரங்கநாதன் என்னும் பெரிய தனக்காரர் அவர் மகளைத் தம் மருமகளாக ஏற்று அந்த இளவட்டங்களுக்கே படியளக்கும் எசமானியாகச் செய்யும் கட்டம், மனச் சந்நிதியின் ஆசார வாசல் திறந்த அழகைப் பண்போடு உரைக்கிறது.

'இதய மலர்' என்னும் கதையில், என்னதான் கதை மாறி இருந்தாலும் 'ஆறறிவின் திகைப்பு' சாயல் இருக்கிறது.

சில, பழைய கதைக் கருக்கள்தாம். ஆயினும் எழுதிக் கொண்டு போகும் முறை - நடு நடுவே சில உணர்வுகளைச் சித்திரித்துக் காட்டும் இயல்பு - இவை உள்ளத்தைப் பற்றுவதாக உள்ளன.

பிரசுரம்: பாரி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி, சென்னை-5. ஆறறிவின் திகைப்பு ரூ. 4. மனச் சந்நிதி ரூ. 3.50.



ஒளிமயமான வாழ்க்கை - அப்படி ஒளிவீச உதவுபவை பஜாஜ் சாதனங்கள்.

அனைவரும் பாடுபட்டு உழைக்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு, அன்றாட வசதிக்காக, ஒரு சில சாதனங்களே இருந்தன. ஆனால் இன்று, உங்கள் வாழ்வில் ஒளிவீச பல நவீன சாதனங்களை உருவாக்கியுள்ளது பஜாஜ். உங்களுக்கெனவே பஜாஜ் அளிக்கும் பல்வேறு சாதனங்களைக் கவனியுங்கள். இன்று இந்திய இல்லத்தரசிகளுக்குக் கிடைக்காத வீட்டுச் சாதனங்களே இல்லை எனக் கூறலாம். இதற்காக பஜாஜ் பல்லாண்டுகள் பாடுபட்டு, இந்திய நிலைகளுக்கு ஏற்ற வகையில் பல சாதனங்களை டிசைன் செய்துள்ளது. ஆகையால்தான் இன்று நீங்கள் விரும்பும் சாதனங்களைப் பெற முடிகிறது.

பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

45-47, வீர் நரிமான் ரோடு, பம்பாய்-1. இந்தியாவெங்கும் கிளைகள்

எப்போதும் வாழ்க்கை வசதிக்கே உதவுகிறது பஜாஜ்.

heros' BE 124A TAM


அன்பே அகிலா!
16
....விம்மி அழுதாள்.
அகிலா! அகிலா! என்ன இது...
விளையாட்டா?!
இதோ பார்!
இதையும் பார்!
பணம்!





விக்கோ டெர்மரிக் வானிஷிங் கிரீமைத்
தடவியவுடன் நூறு சதவிகிதமும்
இயற்கையாக எண்ணெய்ப்பசை
மாறுகிறது. இதில் மஞ்சள் சத்து சுத்த
மான சந்தன எண்ணெயுடன் கலக்கப்
பட்டிருக்கிறது. பண்டைக் காலமுத
லாகவே கிருமிநாசினியும், துவர்ந்
அழிப்பு சாதனமுமான மஞ்சள் எழிலை ஒளிரச்
செய்ய உபயோகிக்கப்பட்டுவருகிறது. அது
தேவையற்ற பொடி ரோமம் வளர்வதைத் தடை
செய்கிறது. மஞ்சளின் இத்தன்மைகள் பண்
டையகாலம் முதல் அறியப்பட்டவையே!
கிருமி நாசினியான இந்தக்கிரீம் முக அழகைத்
திருப் பின் ஏற்படும் புண், வெட்டுக்காயங்
களைக் குணப்படுத்துகிறது. முகச் சருமத்தில்
சோப்பினால் ஏற்படும் கெட்ட விளைவுகளை
அகற்ற உதவுகிறது.
எழிலுக்கு இயற்கையானவழி...
விக்கோ டெர்மரிக்
வானிஷிங் கிரீம்
VICCO
TURMERIC
VANISHING CREAM
IN SANDAL PERFUME
VICCO LABORATORIES, BOMBAY 14
VICCO
SNOW
WITCH HAZEL
மேனி எழிலை அதிகப்படுத்திப்
பாதுகாக்க மென்மையும் குளுமையும்
கொண்ட விக்கோ ஸ்னோவும் இருக்
கிறது. இதில் "விட்ச்ஹேஸல்"
(Witch Hazel) என்ற புகழ் பெற்ற
சருமத்தைலம் அடங்கியுள்ளது.
விக்கோ லாபரெட்டரீஸ்
தாதர், பம்பாய் 14
TML

சத்திய வெள்ளம்



நான்காம் அத்தியாயம்

துணைவேந்தரின் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. அங்கே வந்து உட்கார்ந்திருந்த கோட்டச் செயலாளரைத்தான் அவர்கள் அந்நியராகக் குறிப்பிடுகிறார்கள் என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. அந்த ஆளிடம் தம் வாயால் அதை எப்படிச் சொல்வது என்று பயந்தார் அவர். தம்முடைய பயத்தை மறைக்க முயன்றுகொண்டே அவர்கள் யாரை அங்கிருந்து வெளியேற்ற விரும்புகிறார்கள் என்பது புரிந்தும், புரியாததுபோல்,

''அப்படி அந்நியராக இங்கே யாரும் இல்லையே?'' என்று ஒவ்வொரு வார்த்தையாக இழுத்து நிறுத்தியபடி மாணவர்களை ஏறிட்டுப் பார்த்தார் துணைவேந்தர்.

அவர் வேண்டும் என்றே ஒன்றும் தெரியாதது போல் நடிப்பது பாண்டியனுக்கு ஆத்திரமூட்டியது.

''நீங்கள் விரும்பினால் இங்கே உங்களுக்குத் தெரியாமல் இருக்கும் அந்த அந்நியர் யாரென்று நாங்கள் சுட்டிக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம் சார்!''

இந்த நிலையில் கோட்டச் செயலாளருக்கே ரோஷம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

''உங்களை நான் அப்புறமா வந்து பார்க்கிறேங்க'' என்று துண்டு தரையில் புரள நடந்து வெளியேறினார் அந்த ஆள். அவருக்கு ஆதரவாக 'வாக்-அவுட்' செய்வது போல் அன்பரசன் முதலியவர்களும் தொடர்ந்து வெளியேறிவிட்டார்கள். துணைவேந்தர், பாண்டியன், மோகன்தாஸ் முதலிய மற்ற மாணவர்களிடம் பேசத் தொடங்கினார்.

''பல்கலைக் கழக எல்லையில் இப்போது நிலவும் நெருக்கடி நிலையை உத்தேசித்துத் தேர்தல்களை யெல்லாம் தள்ளிப் போடலாம் என்று நினைக்கிறேன். நாளையே 'ஓரியண்டேஷன் டே' செலபரேட் செய்துவிட்டுப் படிப்பிலும், வகுப்புக்களிலும், பாடங்களிலும் கவனம் செலுத்தலாம் என்று தோன்றுகிறது. வழக்கமாக ஜூலை கடைசியிலேயே 'ஓரியண்டேஷன் டே'யை முடித்து விடுவோம். இந்த வருஷம்தான் எல்லாமே தாமதமாகி விட்டது. இனிமேலாவது தாமதமில்லாமல் காரியங்களைச் செய்வதற்கு நீங்கள் எல்லோரும் என்னோடு ஒத்துழைக்க வேண்டும். அன்பரசன் தரப்பினரும் அவர்களைச் சேர்ந்த மற்ற மாணவர்களும் ஏற்கெனவே ஒப்புக் கொண்டு தங்கள் ஒத்துழைப்பைத் தர இணங்கியுள்ளனர்.''

'அவர்கள் இவருக்கு ஒத்துழைப்புத் தர இணங்கியிருக்கிறார்களென்பது பொய். இவர் அவர்களோடு ஒத்துழைக்க இணங்கியிருக்கிறார் என்பதுதான் மெய்' என்று பாண்டியன் மோகன்தாஸின் காதருகே மெல்லச் சொன்னான். 'நீ பேசாமல் இரு. இவர் நம்மையெல்லாம் முட்டாளாக்கப்



நா. பார்த்தசாரதி

பார்க்கிறார். இவருக்குச் சரியான பாடம் கற்பிக்கலாம்' என்றான் மோகன்தாஸ். ஏறக்குறைய மோகன் தாஸைப் போன்ற அதே மனநிலையில் தான் மற்ற மாணவர்களும் இருந் தனர். துண்டுப் பிரசுரங்கள் வழங்கிச் சுவரொட்டிகள் ஒட்டி எல்லா ஏற்பாடு களும் செய்து வெற்றிக்காகக் கடுமை யாக உழைத்துவிட்ட பின் மாண வர் பேரவைத் தேர்தலே கிடையாது என்பதை அவர்களால் ஒப்புக் கொள்ள முடியாமலிருந்தது. மேலும் தங்கள் முன்னிலையிலேயே அன்பரசன் முதலிய வர்களிடமும் இதைப் பற்றிப் பேசா மல், 'ஏற்கெனவே இதுபற்றி அவர் களிடம் நான் தனியே பேசி இணங்கச் செய்து விட்டேன்' என்று துணைவேந் தர் கூறியது அவர் மேல் சந்தேகம் கொள்ள வைப்பதாயிருந்தது.

''இனி நீங்கள் நினைப்பதைச் சொல்ல லாம்'' என்று அவர்களை நோக்கி வேண் டினார் துணைவேந்தர். மோகன்தாஸ் மாணவர்கள் சார்பில் மறுமொழி கூறினான்:

''பேரவைத் தேர்தலும் நடந்து முடிந்த பின்புதான் ஓரியண்டேஷன் நான் கொண்டாடப்படுவது வழக்கம் சார்! பழைய வி. சி. காலத்திலிருந்து அப்படித்தான் நடக்கிறது.''

''வீணாகப் பழைய காலத்தை ஏன் இழுக்கிறீர்கள்? இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தான் இங்கே பேசிக் கொண்டிருக் கிறோம்.''

''மன்னிக்க வேண்டும் சார்! இப் போது நாம் எதைச் செய்ய வேண் டாமோ அதைப் பற்றித்தான் நீங்கள் எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக் கிறீர்கள். நம்முடைய பல்கலைக் கழக விதிகளில் — பக்கம் அறுபது — மாணவர் உரிமைகள்—முப்பத்தாறாவது பிரிவின் படி ஒவ்வொரு பாட ஆண்டின் தொடக் கத்திலும் மாணவர் பேரவையின் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கான உரிமைகளை நாங்கள் பெற் றிருக்கிறோம்.''

''அதே அறுபதாவது பக்கத்தில் நாற்பத்தேழாவது விதியின்படி அசா தாரணமான நிலைகள் நிலவுகையில் துணைவேந்தரோ, பதிவாளரோ மாண வர் பேரவைத் தேர்தலை நிறுத்தவோ, பேரவையைக் கலைக்கவோ உரிமை பெற் றிருக்கிறார்கள் என்றும் இருக்கிறது அல்லவா?''

''எந்த அசாதாரணமான நிலைமை யும் இங்கு இப்போது இல்லை. எல்லாம் சாதாரணமாகவும் அமைதியாகவும் தான் இருக்கிறது. தேர்தல்களை நடத்




திப் பேரவைத் தலைவர், செயலாளர்களைத் தேர்ந்தெடுத்த பின் மறுநாளே நீங்கள் ஓரியண்டேஷனை வைத்துக்கொள்வதில் எங்களுக்கு மறுப்பில்லை. தேர்தலுக்காக நாங்கள் எல்லா ஏற்பாடுகளையும் சிரமப் பட்டுச் செய்திருக்கிறோம். இந்த நிலைமையில் நீங்கள் எங்களை ஏமாறச் செய்யக் கூடாது.''

இதைக் கேட்டுத் துணைவேந்தர் தாயுமானவனார் பிரதம தேர்தல் அதிகாரியாக நியமிக்கப் பட்டிருந்த பொருளாதாரப் பேராசிரியர் பூதலிங்கத்தைப் பார்த்தார்.

''மிஸ்டர் பூதலிங்கம்! இது சம்பந்தமாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''மன்னிக்க வேண்டும் சார்! தேர்தல்களை நிறுத்துவதற்கான எந்த அவசியமும் நேர்ந்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இன்று மாலையிலும், முன்னிரவிலும் நம் சர்வகலாசாலை எல்லையில் தெரிந்த பதற்ற நிலைமை செயற்கையாக உண்டாக்கப்பட்டதாகும். அதை ஒரு நெருக்கடி நிலைமையாகக் கருதித் தேர்தல்களைத் தள்ளிப் போட வேண்டியதில்லை'' என்று பேராசிரியர் பூதலிங்கம் துணைவேந்தருக்கு மறுமொழி கூறிய





போது மாணவர்கள் அவரை நன்றியோடு பார்த்தார்கள். பதிவாளரும், துணைப் பதிவாளரும் வாயையே திறக்கவில்லை.

துணைவேந்தர் உடனே எந்த மறுமொழியும் கூறவில்லை. சிந்தனையில் ஆழ்ந்தவர் போல் காணப்பட்டார். மாணவர்களும் பேராசிரியர்களும் கூறியதை உடனே ஏற்கவோ இசையவோ அவர் தயங்குவதாகத் தெரிந்தது. இது தொடர்பாக அவர் தமக்குத் தாமே செய்து கொண்ட ஒரு முடிவிலிருந்து மாற விரும்பாதது போல் தோன்றினார். 'ஹிஸ் மைண்ட் இஸ் மேட் அப் ஹி வோண்ட் சேஞ்ஜ் ஹிஸ் டிஸிஷன்' என்று மோகன்தாஸ் பாண்டியனின் காதருகே மெல்லச் சொன்னான். துணைவேந்தர், பதிவாளர், துணைப் பதிவாளர் மூன்று பேரும் உட்புறம் இருந்த அறைக்குச் சென்று கலந்து பேசினார்கள். பேராசிரியர் பூதலிங்கத்தை அவர்கள் கூப்பிடவும் இல்லை. அவராக அவர்களோடு உள்ளே போகவும் இல்லை. துணை வேந்தர் முதலிய மூவரும் தனியே கலந்து பேச உட்புறம் சென்றிருந்த பத்துப் பதினைந்து நிமிஷங்களில் இங்கே மாணவர்கள் தங்கள் பொருளாதாரப் பேராசிரியரோடு மனம் விட்டுப் பேச முடிந்தது. பாண்டியன் பேராசிரியரைக் கேட்டான்:

"பல்கலைக் கழக எல்லையில் பேரவைத் தேர்தல் நடத்தப் போதுமான டிஸிப்ளின் இருக்கும்போதே இவர் ஏன் சார் அதைத் தடை செய்துவிடத் துடிக்கிறார்?"

"'முதியவர்கள் எவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் செய்ய முடியவில்லையோ அவையெல்லாம் இளைஞர்களுக்குத் தடைசெய்யப்படுகின்றன. அல்லது ஒழுக்கக் குறைவானவையாகப் பிரகடனம் செய்யப்படுகின்றன' — என்பதாக ஆண்டன் செகாவ் கூறியிருக்கிறான். இதைத் தவிர வேறு எந்தப் பொருத்தமான பதிலை இப்போது உங்களுக்கு நான் சொல்ல முடியும்?" என்று கூறிப் புன்னகை பூத்தார் பேராசிரியர்.

"இந்தக் கூட்டத்தில் நீங்கள் ஒருவராவது எங்கள் மனநிலையைப் புரிந்து கொண்டவராக இருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது சார்!"

இதற்குள் துணைவேந்தரும் மற்ற இருவரும் உட்புறம் ஆலோசனை முடிந்து திரும்பி விட்டார்கள்.

"எங்கள் முடிவு நாளைக் காலையில் பத்து மணிக்கு ரிஜிஸ்திரார் ஆபீஸ் நோட்டீஸ் போர்டில் அறிவிக்கப்படும். இப்போது நீங்கள் போகலாம். இந்த அகாலத்தில் என் வேண்டுகோளை ஏற்று வந்ததற்கு நன்றி" என்று துணை வேந்தர் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார். கலந்து பேசி விவாதித்து முடிவு செய்வதற்குக் கூப்பிட்டுவிட்டுத் தாமே செய்து கொண்ட ஒரு முடிவை மறுநாள் காலையில் அறிவிப்பதாகத் துணைவேந்தர் சொல்லியது அவர்களுக்கு அதிருப்தி அளித்ததோடு எரிச்சலூட்டியது. உட்புறம் சென்ற துணைவேந்தர் யாருடனாவது டெலிபோனில் பேசிவிட்டு வந்திருக்கக் கூடும் என்று மாணவர்களால் மிக எளிதாகவே அநுமானித்துக் கொள்ள முடிந்தது.

துணை வேந்தர் மாளிகையிலிருந்து அவர்கள் புறப்பட்டபோது இரவு மணி பன்னிரண்டாகி விட்டது. மலைக் குளிரும் மிகக் கடுமையாகி இருந்தது. மூச்சு விட்டால் வாயிலிருந்தும் நாசியிலிருந்தும் புகை வருவது போல் தோன்றியது. துணைவேந்தர் மாளிகையிலிருந்து சிறிது தொலைவில்தான் பொருளாதாரப் பேராசிரியரின் வீடு இருந்ததென்றாலும் அவரும் மாணவர்களோடு சேர்ந்தே அங்கிருந்து வெளியேறினார். துணைவேந்தர் மாளிகையிலிருந்து மாணவர் விடுதிகளுக்கும், பேராசிரியர்களின் வீடுகள் இருந்த ஸ்டாஃப் குவார்ட்டர்ஸுக்கும் ஒரே சாலையாகப் போய்ச் சிறிது தொலைவு சென்றதும் வழிகள் பிரியும். அந்தச் சாலையில் அவர்கள் பேசியபடி போய்க் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் தொடர்பாக இரண்டு மூன்று மின் விளக்குக் கம்பங்களில் பல்புகள் இல்லாததாலோ என்னவோ விளக்குகள் எரியவில்லை. இரு சிறகிலும் மரங்கள் அடர்ந்த அப்பகுதி மிகவும் இருண்டிருந்தது. தாங்கள் துணைவேந்தர் மாளிகைக்குப் புறப்பட்டு வரும்போது அப்பகுதி அவ்வாறு இருண்டிருக்கவில்லை என்பதும் இந்த ஒரு மணி நேரத்துக்குள்தான் யாரோ பல்புகளை உடைத்திருக்க வேண்டும் என்பதும் அவர்களுக்குப் புரிந்தது.

நல்ல வேளையாகப் பேராசிரியரிடம் 'டார்ச்' இருந்தது. 'டார்ச்' ஒளியில் அவர்கள் இணைந்து நடந்து சென்றபோது முதல் மின்விளக்குக் கம்பத்தைக் கடப்பதற்குள்ளேயே பக்கவாட்டிலிருந்து சரமாரியாகக் கற்கள் வந்து விழுந்தன. பாண்டியனையும் மோகன்தாஸையும் பெயர் சொல்லித் திட்டும் வசைக் குரல்களும் இருளிலிருந்து ஒலித்தன. கல்லெறி நிற்காமல் தொடரவே, இவர்களும் கூப்பாடு போட்டுக் கத்தியபடி கைக்குக் கிடைத்தவற்றை எடுத்துக் கல்லெறி வந்த திசை நோக்கிப் பதிலுக்கு வீசத் தொடங்கினார்கள். பாண்டியன், பேராசிரியர் கையிலிருந்த

டார்ச்சை வாங்கிக் கொண்டு பத்துப் பதினைந்து சக மாணவர்களோடு காலிகள் ஒளிந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக இருளில் பாய முற்பட்டான். ஆனால் அவர்கள் ஓடி விட்டார்கள். டார்ச் ஒளியில் அன் பரசனையும் கோட்டச் செயலாளரை யும் நன்றாக அடையாளம் தெரிந்த வேறு சில மாணவர்களையும் அவர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடும் நிலை யிலும் பாண்டியனால் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

''அந்த ஆளைத் துணைவேந்தர் மாளி கையிலிருந்து நீங்கள் வெளியேற்றிய போதே இப்படி ஏதாவது நடக்கும் என்று நினைத்தேன்'' என்றார் பேரா சிரியர். விடுதிகளுக்கு விரைந்து ஆயிரக் கணக்கில் மாணவர்களை எழுப்பி வந்து அந்தக் காலிகளைத் துரத்திப் பிடித்து மரங்களிலே கட்டிப் போட்டுவிட்டு அப்புறம் வி. சி.யைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து காண்பிக்க வேண்டும் என்று துடித்தார்கள் மாணவர்கள். பாண்டியனுக்கு அந்தக் கல்லெறியால் நெற்றியில் ஒரு சிறு காயம் ஏற்பட் டிருந்தது. ''அப்படி ஒரு கலகமும் மோதலும் ஏற்பட்டு அதைச் சாக்காக வைத்தாவது தேர்தல்களை நிறுத்தி விடவேண்டும் என்றுதான் அவர்கள் தவிக்கிறார்கள். தயவுசெய்து இதை ஒரு பெரிய கலகமாக்கி எதிர்த்துப் போரிடாதீர்கள். நீங்களே இதை ஒரு பெரிய கலகமாக்கி விட்டால் அவர்களுக்கு ரொம்பவும் வசதியாகி விடும். வேண்டாம். வாருங்கள். முத வில் கல்லெறியில் காயமுற்ற நண்பர் களைச் சர்வகலாசாலை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லுவோம். மெடிகல் ஆபீஸரிடமே இந்தக் கல்லெறிக்கு ஒரு சாட்சியமும் பெற்றமாதிரி ஆகும்'' என்று உடன் வந்த பொருளாதாரப் பேராசிரியர்தான் அவர்கள் உணர்வை அப்போது கட்டுப்படுத்தினார். அவர் சொல்வதில் உள்ள நியாயம் அவர்களுக் கும் புரிந்தது. பல்கலைக் கழகத்தின் வடகோடிப் பகுதியிலிருந்த மருத்துவக் கல்லூரியின் அருகில் அவர்கள் போய்ச் சேரவே இரவு ஒரு மணியாகி விட்டது. அதற்கு மேல் மெடிகல் ஆபீஸரை எழுப்பிக் கொண்டு வந்து விவரங்களைச் சொல்லிச் சிகிச்சை பெற்றுத் திரும்பும் போது இரவு இரண்டே கால் மணி ஆகியிருந்தது. பத்திரமாக ஒவ்வொரு மாணவரையும் விடுதி அறைக்குக் கொண்டு போய்ச் சேர்த்த பின்பே பேராசிரியர் பூதலிங்கம் வீடு திரும்பி னார். பாண்டியனும், மோகன்தாஸும், ''நீங்கள் தனியாகப் போகக் கூடாது ஸார்! நாங்கள் வீடுவரை உங்களுக்குத் துணையாக வந்துவிட்டுத்திரும்புகிறோம்'' என்று அவரோடு புறப்பட்டார்கள். ஆனால் அவர் அதை மறுத்து விட்டார்.

''நான் தனியாகப் போவதை விட என்னோடு துணை வந்து விட்டு நீங்கள் தனியாகத் திரும்புவதுதான் அதிக அபாயம் நிறைந்தது. எனக்கு ஒரு கெடுதலும் வராது. நான் பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்து விடுவேன்'' என்று கூறி விடை பெற்றுக்கொண்டு புறப்பட் டார் அவர். புறப்படுமுன் 'உணர்ச்சி வசப்படாமல் இருக்கும்படி' மீண்டும் அவர்களை எச்சரித்து விட்டுப் போனார்.

நேரம் அதிகமாகி விட்டதால் தன் அறைக்குப் போகாமல் மோகன்தாஸும் பாண்டியன் அறையிலேயே படுத்துவிட நினைத்தான். இருவருக்கும் அறைக் கதவைத் திறந்து விட்ட பொன்னையா நெற்றி மேட்டில் பிளாஸ்திரி ஒட்டுடன் பாண்டியனைப் பார்த்ததும் திடுக்கிட் டான். நடந்தவற்றைக் கேள்விப்பட்ட தும் தூக்கம் கலைந்து அவர்களோடு அவ னும் பேச உட்கார்ந்து விட்டான். பேச் சுக் குரல் கேட்டுப் பக்கத்து அறைகளி லிருந்தும் இரண்டொருவர் வந்துவிட்ட னர். பாண்டியன் மோகன்தாஸைக் கேட்டான்:

''பல்கலைக் கழக எல்லையில் நெருக் கடி நிலைமை இருப்பதாகத் துணைவேந் தர் சொல்லியபோது நீயும் நானும் அப் படி இல்லை என்று மறுத்தோம் அல்லவா? அதற்குப் பதிலாக நெருக்கடி நிலைமை யைப் பிரத்யட்சமாக நமக்கு நிரூபிப்ப தற்குத்தான் இந்தக் கல்லெறித் தாக்கு தலே நடத்தப்பட்டிருக்கிறது. தம் முடைய முடிவை நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு ரிஜிஸ்திரார் ஆபீஸ் நோட்டீஸ் போர்டில் அறிவிக்கப்போவ தாக வி. சி. சொல்லி விட்டார். ஒரு வேளை அவர் திட்டப்படியே 'பல்கலைக்



சத்திய வெள்ளம்

நமக்குச் சுதந்திரம் தருகிற வர்களுக்கு முன் நாம் அடங்கி யிருக்கலாம். ஆனால் நம்மை அடக்க விரும்புகிறவர்களுக்கு முன் நாம் சுதந்திரமாக இருந்தேயாக வேண்டும்.





கொழும்பு வீரகேசரி பிரதம ஆசிரியரும் நமது இலங்கைப் பிரதிநிதியுமான ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் அவர்களின் அருமை மனைவியும், கதம்பம் ஆசிரியர் ஸ்ரீ கே. வி. எஸ். மோகன், கல்கத்தா வைச் சேர்ந்த ஸ்ரீமதி சாந்தி பத்மநாபன், ஸ்ரீமதி மாலதி ராஜகோபாலன் ஆகியோர்களின் அருமைத் தாயாருமாகிய ஸ்ரீமதி **தேவா வாஸ்** என்ற **வேதவல்லி** 11-7-72 செவ்வாய்க் கிழமை அதிகாலையில் ஆச்சார்யன் திருவடிகளை அடைந்தார். அவர் 1935ம் ஆண்டில் தமது கணவருடன் இலங்கையில் குடியேறியவர். காலஞ்சென்ற, கும்பகோணம், கோதண்டராம ராஜகோபால அய்யங்காரின் புதல்வியாவார்.

கழகத்தில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலையின் காரணமாகத் தேர்தல்களைத் தள்ளிப் போடுவதாக' அறிவித்துவிட்டால் மாணவர்களாகிய நாம் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை இப்போதே முடிவு செய்து கொள்ள வேண்டுமே? நாம் என்ன செய்யலாம்?''

''பேரவைத் தேர்தல் நடைபெறுகிற வரையில் வகுப்புக்களுக்குப் போவதில்லை என்று அறிவிப்போம். நாளை மாலை 'ஓரியண்டேஷன்' என்ற பேரில் எல்லா மாணவர்களையும் பூபதி ஹாலுக்கு எதிரே மைதானத்தில் கூட்டி வைத்துக் கொண்டு, 'மை டியர் ஸ்டுடண்ட்ஸ் ஹியர் ஆஃப்டர் வீ மஸ்ட் பி ஸீரியஸ் எபௌட் அவர் ஸ்டடீஸ்' என்று லெக்சர் அடிக்கலாம் என்பதாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறார் வி.சி. அது நடக்காது. அவர் ஓரியண்டேஷன் தினத்துக்கான சொற்பொழிவைத் தொடங்கும்போது எதிரே மைதானம் காலியாக இருக்கும்... அப்படியும் அவர் வழிக்கு வரவில்லை என்றால் எல்லாப் பிரிவு மாணவர்களும் சேர்ந்து ஊர்வலமாகச் சென்று அவரிடம் நம் கோரிக்கையை வற்புறுத்துவோம்.''

''இன்னொரு விஷயம் மோகன்தாஸ்! நாளன்றைக்கு மாலையில் பல்கலைக் கழகப் படிப்பு முடிந்து வெளியேறும் பழைய மாணவர் தலைவர் மணவாளனுக்கு நாம் லேக் வியூ ஹோட்டலில் ஒரு தேநீர் விருந்து கொடுக்கிறோம். அவர் இப்போது மதுரையில் இருக்கிறார். இந்த விருந்துக்காகவே வந்து போகச் சொல்லி அண்ணாச்சியும், நண்பர்களும் மணவாளனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கான்வொகேஷனுக்கு அவர் வருவாரோ அல்லது தபாலிலேயே பட்டத்தை வரவழைத்துக் கொள்வாரோ, தெரியவில்லை. அதனால்தான் இப்போதே அவரை வரவழைத்துப் பாராட்டையும் பிரிவுபசாரத்தையும் நடத்திவிட முடிவு செய்தோம். அவரிடமும் இதைப் பற்றி யோசனை கேட்கலாம்.''

''அருமையான ஐடியா பாண்டியன்! இந்தப் பல்கலைக் கழகத்திலேயே ஒரு குறிப்பிட்ட இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மாணவர் இயக்கத்தைப் பிரமாதமாகத் தலைமை ஏற்று நடத்திய அசகாய சூரன் மணவாளன்தான். இப்போது இங்கே மணவாளன் வர நேர்வது நம் பாக்கியம். வரட்டும். அவரிடமும் யோசனை கேட்கலாம்.''

மறுநாள் காலையில் விடியும்போதே மலையின் எல்லாப் பகுதிகளிலும் பன்னீர் தெளிப்பது போல் பூஞ்சாரல் பெய்து கொண்டிருந்தது. விடிந்த பின்னும் மெல்லிய மங்கலான இருள் மூட்டம் மலையைச் சூழ்ந்திருந்தது. கவலையும் சிந்தனையும் கனத்த அந்த மனநிலையிலும், அன்று மல்லிகைப் பந்தல் இருந்த அழகை எண்ணிய போது,

''அருவிகள் வயிரத் தொங்கல்
அடர்கொடி பச்சைப் பட்டே
குருவிகள் தங்கக் கட்டி
குளிர்மலர் மணியின் குப்பை

* * *


இருந்த ஓர் கருந்தீரைக்குள்
இட்டபொற் குவியல் போலே
கருந்தமிழ்ச் சொல்லுக் குள்ளே
கருத்துக்கள் இருத்தல்போலே
இருள் மூடிற்று குன்றத்தை''

என்ற பாரதிதாசனின் அழகின் சிரிப்புப் பாட்டுப் பாண்டியனுக்கு ஞாபகம் வந்தது. தூரத்து மலை முகடுகளில் வைரக் கற்கள் உருகி ஒழுகுவதுபோல் அருவிகள் தெரிந்தன. வானிலிருந்து மாவைக் கொட்டுவதுபோல் சாரல் மேகங்களிலிருந்து இறங்கும் அழகு கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. இந்த இருள் மூட்டத்தினால் மணி ஆனதே தெரியவில்லை. பாண்டியன் எழுந்திருக்கும் போதே காலை எட்டரை மணி ஆகியிருந்தது. மோகன்தாஸ் ஏழுமணிக்கே எழுந்து தன் அறைக்குப் போய்விட்டதாகவும் பத்தேகால் மணிக்கு ரிஜிஸ்திரார் அலுவலக தோட்டமஸ் போர்டு அருகே சந்திப்பதாகப் பாண்டியனிடம்



திருத்தப்படாத 104 பள்ளி இறுதியாண்டு தேர்வுத் தாள்கள் ஜபல்பூரில் ஓர் ஓட்டல் அறையில் கிடந்தன. இதில் வேடிக்கை—அந்தப் பரீட்சைகள் முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டன. ஓட்டலில் விசாரித்ததில் தெரியவந்த விவரம்: அங்கு ஓர் உபாத்தியாயர் அறை எடுத்துக்கொண்டு பேப்பர் திருத்தினார். பில் 586 ரூபாய் ஆனவுடன் கையில் பணம் இல்லாத உபாத்தியாயர் 18 விடைத்தாள்களை ஓட்டல் முதலாளியிடம் கொடுத்து மறுநாள் பணம் கொடுத்து விட்டு அந்தத் தாள்களை மீட்டுப் போவதாகச் சொல்லிப் போனார். ஆனால் சொன்னபடி வராததால் முதலாளி ஆசிரியர் தங்கியிருந்த அறைக் கதவைத் திறந்து பார்த்தார். அங்கு இன்னும் 86 விடைத்தாள்கள் கிடந்தன!

இந்துஸ்தான் டைம்ஸ் —'பாலி'



"மனிதனுக்குத் தெரிந்து பெரிய சாதனைகளை நிகழ்த்தக்கூடிய தீரச் சக்தி என்ன?"
"பெண்மணியின் கண்ணீர்!"

தெரிவிக்கச் சொன்னதாகவும் பொன்னையா கூறினான். விடிந்ததுமே முதல் நாள் நள்ளிரவு துணைவேந்தர் வீட்டில் பேச்சு முடிந்து மாணவர்கள் திரும்பும்போது சாலையில் நடந்த கல்லெறிக் கலவரம் பற்றி எல்லா விடுதிகளிலும் செய்தி பரவிவிட்டது. ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையும் உருவாகி விட்டது. அறை நண்பன் பொன்னையா பிளாஸ்கை எடுத்துப் போய்ப் பாண்டியனுக்காக அறைக்கே காப்பி சிற்றுண்டியை வாங்கி வந்துவிட்டான். மாணவர்கள் அந்த மழையையும் பொருட்படுத்தாமல் — குடையோடும், குடையின்றி நனைந்து கொண்டும் பாண்டியனைக் காணக் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கிவிட்டார்கள். உடனே பார்க்க வருவதற்குத் துடிப்பதாகவும் வார்டன் அம்மாள் பெண்கள் விடுதியிலிருந்து யாரையும் வெளியில் அனுப்புவதற்குக் கண்டிப்பாக மறுப்பதால் வரமுடியாமல் இருக்கிறது என்றும் கண்ணுக்கினியாள் ஃபோன் செய்தாள். ஃபோனில் அவள் குரல் கவலை நிறைந்து ஒலித்தது. கண் கலங்கி அழுது கொண்டே பேசுகிறாற் போன்ற குரலில் பேசினாள் அவள்.

"கவலைப்படும்படி எனக்கு எதுவும் நேர்ந்து விடவில்லை. முடிந்தால் பத்தே கால் மணிக்கு ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் வாசலுக்கு வா. நேரில் பேசுவோம். இன்று காலை பத்து மணிக்குப் பேரவைத் தேர்தல் உண்டா இல்லையா என்பது பற்றி நோட்டீஸ் போர்டில் ஒரு முக்கியமான அறிவிப்பை ஒட்டுகிறார்கள். அதைப் பார்ப்பதற்காக நான், மோகன்தாஸ் எல்லாரும் அங்கே வருவோம்" என்று பாண்டியன் கூறியதும் எப்படியாவது முயன்று ரிஜிஸ்திரார் அலுவலக வாயிலில் அவனைச் சந்திப்பதாக அவள் மறுமொழி கூறினாள். மறுநாள் மாலையில் லேக் வியூ ஹோட்டலில் மணவாளனுக்கு நடைபெறும் பிரிவுபசார விருந்து பற்றிக் கூறி அதற்கும் அவள் முன்பாகவே வந்து கூட இருந்து முடிந்த உதவிகளைச் செய்யும்படி வேண்டினான் பாண்டியன். அதைப் பற்றி ஏற்கெனவே அண்ணாச்சி தன்னிடம் ஃபோனில் தெரிவித்திருப்பதாக அவள் சொன்னாள். அவன் ஃபோன் பேசி விட்டுத் திரும்புவதற்குள் அறையிலும் வராந்தாவிலுமாகப் பெருங்கூட்டமாய் மாணவர்கள் கூடிவிட்டார்கள். மாணவர் பேரவைத் தேர்தல்கள் நிறுத்தப் பட்டால் பல்கலைக் கழக நிர்வாகத்தைச் சும்மா விடக்கூடாது என்கிற அளவுக்கு எல்லாரும் கடுஞ் சினத்தோடு இருந்தார்கள்.

"பழைய வி. சி. உலக நாடுகளில் உள்ள பிற பல்கலைக் கழகங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு அந்தப் பல்கலைக் கழகங்களின் தரத்துக்கு இதை உயர்த்த வேண்டும் என்ற ஆசையில் ஓரியண்டேஷன் டே போன்றவற்றையெல்லாம் இங்கே ஒரு வழக்கமாக ஏற்படுத்தினார். இவர் என்னடா என்றால் அந்த நல்ல பழக்கங்களை வைத்தே மாணவர்களின் உரிமைகளை ஒடுக்கப் பார்க்கிறார்....." என்று கோபமாகச் சொன்னார் ஓரளவு வயது மூத்த ஒரு எம். ஏ. மாணவர்.

"செய்கிற காரியங்களைப் பார்த்தால் இவருக்குத் தாயுமானவனார் என்ற அன்பு மயமான பெயர் சற்றுக் கூடப் பொருத்தமாயில்லை!" என்பதாக ஆத்திரத்தோடு கத்தினான் மற்றொரு மாணவன். நேரமாக ஆக மாணவர் கூட்டம் அதிகமாகியது. ஒன்பதரை மணிக்கு அண்ணாச்சி அவனை வந்து பார்த்து ஆறுதல் கூறினார். காலை பத்து மணிக்கு மாணவர்கள் பெருங் கூட்டமாக ரிஜிஸ்திரார் அலுவலக முகப்பில் கூடிவிட்டார்கள். பாண்டியனும் மோகன்தாஸும், கண்ணுக்கினியாளும், இன்னும் இரண்டொரு மாணவிகளும் கூட்டத்தின் முன்னணியில் நோட்டீஸ் போர்டு அருகே நின்று கொண்டிருந்தார்கள். முதல் நாள் இரவு நடந்த கல்லெறிக்குப்பின் அன்பரசனையோ, வெற்றிச் செல்வனையோ எங்குமே காணவில்லை. அவர்கள் வகை மாணவர்களிலும் சிலரைக் காண வில்லை. தேர்தல்கள் தள்ளிப் போடப்படுவது பற்றி அவர்கள் தரப்பைச் சேர்ந்த மாணவர்களில் யாருமே கவலையோ, வருத்தமோ அடைந்ததாகத் தெரியவில்லை. தேர்தல்கள் நடக்காமல் நிறுத்தப்படுவதில் அவர்களுக்கு மகிழ்ச்சிகூட இருக்கும் போல் தெரிந்தது.

பத்தேகால் மணிக்கு ரிஜிஸ்திரார் ஆபீஸ் பியூன் பல்கலைக் கழக முத்திரை

யோடு கூடிய நீளமான தாளில் டைப் செய்யப்பட்டிருந்த அறிக்கை ஒன்றைக் கொண்டு வந்து பலகையில் ஒட்டினான். அறிக்கையின் கீழே ரிஜிஸ்திரார் கையெழுத்து இருந்தது.

முதல் நாள் இரவு இருவேறு தரப்பைச் சேர்ந்த மாணவர் குழுக்களிடையே நடந்த ஒரு மோதலை ஒட்டிப் பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தேர்தல்கள் காலவரையறையின்றித் தள்ளிப் போடப்படுவதாகவும் — இன்னும் பதினைந்து நாட்களுக்குப் பல்கலைக் கழக எல்லைக்குள் பதிவாளரின் முன் அநுமதியின்றிக் கூட்டங்களோ, ஊர்வலங்களோ கூடாது என்ற உத்தரவை மேலும் இரண்டு வாரம் நீடிப்பதாகவும் அந்த அறிக்கை கூறியது. கால்மணி நேரம் கழித்து ஒட்டப்பட்ட மற்றோர் அறிக்கையில் அன்று மாலையிலேயே நடைபெறும் ஓரியண்டேஷன் நாள் கூட்டத்தில் துணைவேந்தர் மாணவர்களுக்குச் சொற்பொழிவாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கைகளைப் பார்த்ததும் மாணவர்களிடையே உணர்ச்சிப் பெருக்குப் பொங்கியது.

'துணைவேந்தரே ! மாணவர் உரிமைகளை ஒடுக்காதீர்' என்று கரியால் சுவரில் பெரிதாக எழுதினான் ஒரு மாணவன். அடுத்த கணம் அதே வாக்கியம் பல்லாயிரம் குரல்களாக மைதானத்தில் எதிரொலித்தது. மாணவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு பாண்டியனுக்கும் மோகன்தாஸுக்கும் இருந்தது.

அங்கே நோட்டீஸ் போர்டு வைக்கப்பட்டிருந்த அந்த மேஜை மேல் அப்படியே தாவி ஏறினான் பாண்டியன். கைகளை உயர்த்தி மாணவத் தோழர்களிடம் அமைதியைக் கோரினான் அவன். நெற்றியில் காயத்தோடு மேலே நின்ற பாண்டியனைக் கண்டதும் மைதானத்தில் கூடியிருந்த மாணவர்களின் பெருங் கூட்டம் மெல்ல மெல்லக் கட்டுப்பட்டு அமைதியடைந்தது. அவன் பேசத் தொடங்கினான்:

மாணவ நண்பர்களே, தோழியர்களே! இப்போது இங்கே ஒட்டப்பட்டிருக்கும் துணைவேந்தரின் அறிக்கை நம்முடைய நியாயமான உரிமைகளை ஒடுக்குகிறது. நேற்றிரவு நம் துணைவேந்தர் பேரவைத் தேர்தல் பற்றிப் பேசுவதற்காக எங்களைக் கூப்பிட்டனுப்பியதும், அவரோடு பேசிவிட்டு விடுதிகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது நாங்கள் காலிகளால் கல்லெறிபட்டதும் பற்றி நம் நண்பர்கள் உங்களுக்குச் சொல்லியிருப்பார்கள். இன்று அந்தக் கல்லெறியையே காரணமாகச் சொல்லி நம் பேரவைத் தேர்தல்கள் காலவரையறை இன்றித் தள்ளி வைக்கப்பட்டிருப்பதாக ரிஜிஸ்ட்ரார் அறிவித்திருக்கிறார். அந்தக் கல்லெறியை நடத்திவிட்டு இந்த அறிக்கையை ஒட்ட வேண்டும் என்று காத்திருந்து ஒட்டினாற்போல் இப்போது இங்கே இந்த அறிக்கை ஒட்டப்பட்டிருக்கிறது. அமைதியான சூழ்நிலையை வேண்டும் என்றே திட்டமிட்டுக் கெடுத்துவிட்டுச் செயற்கையாக ஒரு நெருக்கடியை உண்டாக்கித் தேர்தல்களைத் தட்டிக் கழித்துவிடப் பார்க்கிறார்கள். இதை நாம் அனுமதிக்கக் கூடாது. ஒற்றுமையாகவும், அமைதியாகவும் இருந்து நம் உரிமைகளுக்காக நாம் போராட வேண்டும். அரசியல் செல்வாக்காலும், பதவி அதிகாரங்களாலும் யார் அடக்க முயன்றாலும் நாம் அடங்க மாட்டோம். அடங்கியிருக்க நமக்குத் தெரியும். ஆனால் பிறர் நம்மை அடக்கியிருக்க நாம் அடங்கிவிடப் போவதில்லை. நம்முடைய வேண்டுதலுக்குப் பல்கலைக் கழக நிர்வாகத்திடமிருந்து நியாயமான பதில் கிடைக்கிற வரை நாம் வகுப்புக்களைப் புறக்கணிக்கிறோம். இன்று மாலை இதே மைதானத்தில் வி.சி. நிகழ்த்த இருக்கும் பாடத் தொடக்க



ஆல் இந்தியா ரேடியோவில் மீடியம் வேவ், ஷார்ட் வேவ் தவிர 'இந்திரா வேவ்' ஒன்று இருக்கிறது!

- காரசாரன் கார்ட்டூன் - பாலி

நான் விழாச் சொற்பொழிவையும் நாம் பகிஷ்கரிக்க வேண்டும். யாருடைய திருப்பந்தத்துக்காகவோ பயந்து இந்தப் பல்கலைக் கழகத்தில் மாணவர் இயக்கத்தையே ஒடுக்கிவிடப் பார்க்கிறார்கள். இதை எதிர்த்து நாம் போராடியே ஆக வேண்டும். நமக்குச் சுதந்திரம் தருகிறவர்களுக்குமுன் நாம் அடங்கியிருக்கலாம். ஆனால் நம்மை அடக்க விரும்புகிறவர்களுக்குமுன் நாம் சுதந்திரமாக இருந்தேயாக வேண்டும்.''

பாண்டியன் பேசி முடித்ததும் மைதானத்தில் திரண்டிருந்த மாணவர்களின் கைதட்டல் ஓய ஐந்து நிமிஷம் ஆயிற்று. மைதானத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே வகுப்பு நேரத்துக்காக விடுதியிலிருந்து வந்த மாணவிகளும் அங்கே நிறையக் கூடிவிட்டார்கள். அதைக் கவனித்த பாண்டியன் உடனே, ''பெண்கள் சார்பில் யாராவது பேசினால் நல்லது. நீ பேசு!'' என்று கண்ணுக்கினியாளைக் கைலாகு கொடுத்து மேஜை மேல் ஏற்றி விட்டுத் தான் கீழே இறங்கிக் கொண்டான்.

''இது சுயநலமிகளுக்கும் மாணவர்களுக்கும் இடையே நடக்கும் போராட்டம். இதில் நாம் வெற்றி பெற்றே ஆக வேண்டும்'' என்றாள் அவள். கண்ணுக்கினியாளின் தோற்றத்துக்கும் இனிமையான குரலுக்கும் கூட்டத்தை அப்படியே வசீகரித்துவிடும் சக்தி இருப்பதைப் பாண்டியன் கண்டான். அடுத்து மோகன்தாஸ் பேச இருந்தான். அதுவரை மெல்லிய பூஞ்சாரலாக இருந்த தூறல் திடீரென்று பெருமழையாக வலுத்துவிடவே மாணவர்கள் கலைந்து போகமாட்டார்கள் என்ற நிலை இருந்தும் மோகன்தாஸே இரண்டு வாக்கியத்தில் சுருக்கமாகப் பேசி முடித்துவிட்டான். 'வகுப்புக்களுக்குப் போக வேண்டாம்' என்ற கோரிக்கையோடு அவர்களே மாணவர்களை விடுதிகளுக்குக் கலைந்து போகச் சொல்லிவிட்டார்கள். ரிஜிஸ்திரார் ஆபீஸ் வராந்தாவில் பாண்டியனும், கண்ணுக்கினியாளும், மோகன்தாஸும் மற்றும் சில மாணவர்களும் கூட்டமாகப் பேசிக் கொண்டு நின்றார்கள்.

''தியேட்டர் சயின்ஸ் சம்பந்தமாக ஒரு புதுப் புத்தகம் வந்திருக்கிறது. யுனிவர்சிடி லைப்ரரிக்குப் போக வேண்டும். நீங்களும் என்னோடு வருகிறீர்களா?'' என்று கண்ணுக்கினியாள் பாண்டியனைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். ரிஜிஸ்திரார் ஆபீஸிலிருந்து விடுதிக்குப் போக வேணுமானால் நடுவே ஒரு பர்லாங் தொலைவு மைதானத்தில் நனைய வேண்டியிருக்கும். நூல் நிலையக் கட்டடத்துக்குப் போக வேண்டுமானால் அப்படியே வராந்தாவில் சிறிது தூரம் நடந்து நனையாமலே போய்விடலாம் என்ற எண்ணத்தில் பாண்டியனும் மோகன்தாஸிடம் சொல்லிக் கொண்டு அவளோடு புறப்பட இருந்தான். அப்போது மழை நீரைக் கிழித்துக் கொண்டு மைதானத்தில் ஒரு ஜீப் வந்தது. அருகே வந்ததும் அது போலீஸ் ஜீப் என்று தெரிந்தது. ரிஜிஸ்திரார் அலுவலக வராந்தாவை ஒட்டி ஜீப் வந்து நின்றதும் அதிலிருந்து ஒரு ஸப் — இன்ஸ்பெக்டரும், இரண்டு கான்ஸ்டேபிள்களும் இறங்கினர். பல்கலைக்கழக எல்லைக்குள் போலீஸைப் பார்த்ததும் பாண்டியன் தயங்கி நின்றான். அவர்கள் ரிஜிஸ்திரார் அலுவலகத்துக்கு அவர் கூப்பிட்டனுப்பி வந்திருக்கிறார்களா அல்லது வேறு எதற்காக வந்திருக்கிறார்கள் என்று அறியும் ஆவலில் பாண்டியனும், மோகன்தாஸும் கண்ணுக்கினியாளும், சில மாணவர்களும் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

ஆனால் அந்த இன்ஸ்பெக்டரும், கான்ஸ்டேபிள்களும் சொல்லி வைத்தது போல் தங்களை நோக்கி நடந்து வரவே பாண்டியனும், மோகன்தாஸும் திகைத்தனர்.

''நேற்றிரவு வி. சி. வீட்டருகே நடந்த கல்லெறி சம்பந்தமாக உங்கள் இருவரையும் கைது செய்ய வந்திருக்கிறோம்.'' — பாண்டியன் ஆத்திரம் தாங்காமல் எரிச்சலோடு பதில் கூறினான்.

''கல்லெறிந்தவர்களை விட்டு விட்டுக் கல்லெறிபட்டவர்களைத் தேடி வரும் போலீஸ் இன்ஸ்பெக்டரை நாங்கள் இன்றுதான் முதன் முதலாகச் சந்திக்கிறோம் சார்.''

''ஆன் வாட் அதாரிட்டி ஹேவ் யூ எண்டர்டு இன் டு தி யுனிவர்சிடி காம்பஸ்?'' என்று கண்ணுக்கினியாள் சீறிய போது, ''யுவர் வி. சி. ஃபோன்டு மீ...'' என்று சிரித்துக் கொண்டே பதில் கூறினார் இன்ஸ்பெக்டர். (தொடரும்)

3—30-7



அடக்கம், ஆற்றல், இனிமை, ஈகை...



அரிச்சுவடியல்ல! தொழிலதிபர் ஏ. எம். எம். அருணாசலத்தின் குணாதிசயங்கள் தாம் இவை. வினயமிக்க இவர் அடைந்துள்ள வியத்தகு வெற்றிகளை விளக்குகிறது இக்கட்டுரை.

சென்னையில் மாம்பழங்களை வாங்கிக் கொண்டு போய்த் திருச்சி மாம்பழச் சாலையில் வியாபாரமாக விற்க முடியுமா? அதேபோல் பிரிட்டனில் ஏராளமான நிலக்கரி ஏற்றுமதியாகும் இடமான நியூகாஸிலுக்கு நிலக்கரியைக் கொண்டு போனால் விலை போகுமா? இதையொட்டி ஆங்கிலத்தில் வசனம் ஒன்று பிறந்தது: "நியூகாஸிலுக்கு நிலக்கரி கொண்டு போனானாம்!"


ஆனால் இப்படிப்பட்ட ஓர் அசாதாரணமான காரியத்தைச் செய்ததுடன் அதை வியாபாரமாகவும் நடத்திக் காட்டியவர்தான் இவ்விதழ் மேலட்டையை அலங்கரிக்கும் திரு ஏ. எம். எம். அருணாசலம். உலகிலேயே மிக அதிகமான சைக்கிள்களை உற்பத்தி செய்யும் அமெரிக்காவுக்கே சென்னை டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனம் தயாரிக்கும் சைக்கிள்கள் ஏற்றுமதியாகி, நமக்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தந்திருக்கின்றன! ஆக, மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் என்பதற்கான மத்திய அரசின் பாராட்டையும் டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனம் பெறக் கேட்பானேன்!


பாரதம் சுதந்திரம் பெற்றபோது ஆரம்பமாயிற்று, டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனத்தின் கதை. அண்ணன் தம்பிகளான ஏ. எம். எம். முருகப்பச் செட்டியாரும் ஏ.எம்.எம். அருணாசலமும் சுதந்திர பாரதத்தின் தொழில் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று தீர்மானித்தனர். போக்குவரத்துத் துறைக்குப் புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டில் நல்ல எதிர்காலம் இருக்கும் என்று உணர்ந்தனர். அதிலும் சாமானிய மனிதனின் வாகனமான சைக்கிள்களை உற்பத்தி செய்வதுதான் மக்களுக்கு மிகவும் உகந்த பணியாக இருக்கும் என்றெண்ணி, பிரிட்டனிலிருந்து விற்பனைக்கு வந்த ஒரு கம்பெனியைப் போய்ப் பார்த்தனர். பார்த்ததோடு நிறுத்திக் கொண்டனர்!


அந்த நிறுவனத்துடன் எந்த விதமான தொடர்பும் வைத்துக் கொள்ளாததே இச் சகோதரர்களின் தொழில் வர்த்தகத் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஏனெனில் தொழில் வர்த்தகத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு எதைச் செய்யலாம் என்ற நுண்ணறிவு இருப்பதுடன் எதில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்பதையும் உய்த்துணரும் ஆற்றல் இருக்க வேண்டும். வேண்டாத கூட்டுறவினால் அழிவுறும் அரசுத் துறைத் தொழில்கள் பலவற்றை நாம் கண்ணுக்கு மெய்யாகப் பார்த்துத்தானே வருகிறோம்!

ஸர் ஏ. ராமசாமி முதலியாரின் அறிவுரை, உதவி ஆகியவற்றை ஏற்று ஏ. எம். எம். சகோதரர்கள் பிரிட்டனிலுள்ள ரேலேய் கம்பெனியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். 1949ல், படிப்படியாக சைக்கிள்களை அம்பத்தூரில் உற்பத்தி செய்வது என்று ஒப்பந்தம் கையெழுத்தாகி '51 முதல் உற்பத்தி தொடங்கியது. சிறிது காலத்தில் இத் தொழிலகத்துக்கு விஜயம் செய்த மத்திய அமைச்சர் திரு டி. டி. கே. 'சைக்கிள் பகுதிகளைத் தரு










- டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை - விமானத்திலிருந்து பார்க்கையில்.
- அமரர் ஏ. எம். எம். முருகப்பா.
- அடுக்கடுக்காகத் தயாராகும் சைக்கிள் மட் கார்டுகள்.
- மின்சார வெல்டிங் விளக்குகள் தயாரிப்பு.
- எஃகுக் குழாய்கள் உருவாகின்றன.
- இடது: திரு எம். வி. அருணாசலம்.

வித்து இணைத்தால் போதுமா? சைக்கிள் உறுப்புக்கள் எல்லாவற்றையும் உற்பத்தி செய்யுங்கள்' என்றார்.

'எங்கள் நோக்கம், ஒப்பந்தம் எல்லாம் அத்திசையில்தான் இருக்கின்றன' என்று அவருக்குப் பதில் கிடைத்தது. ஒரு சைக்கிளில் எண்பது ரூபாய் அளவுக்கு இருந்தன அயல்நாட்டுப் பாகங்கள்; மூன்று வருடங்களில் பதினைந்து ரூபாய் மதிப்புள்ள உறுப்புக்களே இடம் பெற்றன. நாளடைவில் இது படிப்படியாக மேலும் குறைந்து இன்று சைக்கிள் உற்பத்திக்கான சகல பாகங்களும் அம்பத்தூரில் தயாராகின்றன. அது மட்டுமன்று. சைக்கிள் உற்பத்திக்கு அடிப்படைத் தேவையான இரும்புக் குழாய்களையும் சங்கிலிகளையும் பிற தொழில்களுக்குத் தேவையான அளவிலும் தரத்திலும் கூடத் தயாரித்துத் தருகிறார்கள்! உதாரணமாக அனல் மின்நிலையத்தில் உள்ள கொதிகலன்களுக்குத் தேவைப்படும் எஃகுக் குழாய்களை உருவாக்கிக் கொடுக்கிறார்கள். பலவிதத் தொழிலகங்களில் இயந்திரங்களுக்குத் தேவைப்படும் சங்கிலிகளை உற்பத்தி செய்கிறார்கள். வேறு பல சைக்கிள் தயாரிப்பாளர்கள் இவர்களிடமிருந்து சைக்கிள் பாகங்களை வாங்கிச் சென்று இணைத்து வேறு பெயரில் சைக்கிள்களை விற்க அனுமதிக்கிறார்கள்!

திரு ஏ. எம். எம். அருணாசலம் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, "விண்வெளிப் பயணம் நடக்கும் அமெரிக்காவுக்குச் சைக்கிள் ஏற்றுமதி செய்கிறீர்களே, இதை எப்படிச் சாதித்தீர்கள்?" என்று வியப்புடன் கேட்டேன். அமெரிக்காவில் இரண்டு நபருக்கு ஒரு கார் வீதம் இருக்கிறதென்றும், விமானப் பயணம் என்பது அங்கு சர்வ சாதாரணம் என்றும் நமக்குத் தெரிந்த விஷயங்கள்தானே.

"அமெரிக்காவில் சைக்கிள்களுக்குப் புதிய மவுசு ஏற்பட்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள்" என்று விளக்கினார் திரு அருணாசலம். "ஒன்று, மோட்டார் கார் புகையினால் சூழல் நச்சு மயமாகிறது என்று அஞ்சுகிறார்கள். இரண்டாவது உடல் உழைப்பு அற்ற சுகவாழ்வினால் இதயநோய் அதிகரித்து வருகிறது என்ற கவலை. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் இவ்விரு பிரச்னை





களுக்குச் சிறு பயண சைக்கிள் சவாரி பிரபல்யமடைந்து வருகிறது. போக்குவரத்து நெரிசல் மிக அதிகமான நியூயார்க் சாலைகளிலேயே இப்போது சைக்கிள்கள் செல்லவென்று தனிப் பாதை ஒதுக்கியிருக்கிறார்கள். மன்ஹாட்டனிலுள்ள 'மாபெரும் சென்ட்ரல் பார்க்கில் சனிக்கிழமை பாதி நாள் கார்களே நுழையக் கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள். சைக்கிளைச் செலுத்திக்கொண்டு பார்க்கைச் சுற்றி வர விரும்புவோருக்கு உதவவே இந்த ஏற்பாடு. சைக்கிள்களை வாடகைக்கு விடும் நமது ஊர்க் கடை முனுசாமி அங்கு போனால் லட்சலட்சமாகச் சம்பாதிக்கலாம்!

''மேலும் ஏழு வயது முதல் பதினைந்து வயது வரை உள்ள சிறுவர்கள் அமெரிக்காவில் சைக்கிள்களை நிறையப் பயன்படுத்துகிறார்கள். பதினைந்து வயதுக்குப் பிறகு தானே கார் ஓட்ட லைசென்ஸ் பெற முடியும்? அமெரிக்கப் பள்ளிக் கூடங்கள் மிக மிக விஸ்தாரமானவை. ஒரு கட்டடத்திலிருந்து இன்னொரு வகுப்பு நடக்கும் வேறொரு கட்டடத்துக்குப் போக மாணவர்களுக்குச் சைக்கிள்கள் உபயோகமாக இருக்கின்றன.

''யுத்தத்துக்குப் பிறகு சைக்கிள்களுக்குக் குறைந்து போயிருந்த மவுசு மேல்நாடுகளில் இப்போது மீண்டும் அதிகரித்து வருகிறது. அமெரிக்க சைக்கிள் 'ஃபேஷன்' இப்போது ஐரோப்பாவுக்கும் பரவி வருகிறது. அக்கண்டத்தில் சைக்கிள் ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்பு பெருகி வருகிறது.''

வாய்ப்பு பெருகினால் போதுமா? ஜப்பான், பிரிட்டன், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகள் தயாரிக்கும் சைக்கிள்களுடன் தரத்தில் போட்டியிட்டு வெற்றி காணும் திறன் அல்லவா வேண்டும்! அம்பத்தூரில் பணியாற்றும் நமது தொழிலாளர்கள் இந்த ஆற்றலைப் பெற்றுள்ளது பெருமிதத்துக்குரிய விஷயமல்லவா?

இந்நிலைக்கும் டி. ஐ. சைக்கிள் நிறுவனம் தொடங்கப்பட்டபோது அதற்கு வழிகாட்டவோ முன்னோடியாகக் கருதவோ ஏதுமில்லை. பிறருக்கு வழிகாட்டக்கூடிய நிலையில் தான் டி. ஐ. சைக்கிள் நிறுவனம் இருக்கிறது. அனுபவத்தின் பயனாகவே பல விஷயங்களைக் கற்றறிய வேண்டியிருந்தது. ஆயின் பிரசித்தி பெற்ற அயல்நாட்டு நிறுவனமொன்றின் ஒத்துழைப்புடன் தொழிலகத்தைத் தொடங்குவதில் சில அனுகூலங்களும் உண்டு. தாய் நிறுவனம் பல தவறுகளைச் செய்து படிப்பினை பெற்றிருக்கும். அந்தத் தவறுகளையே மீண்டும் இப்புதிய நிறுவனமும் செய்வதைத் தவிர்க்கலாம். இரண்டாவது, தாய் நிறுவனத்தின் தயாரிப்புகள் இந்நாட்டிலும் அயல்நாடுகளிலும் பெற்றிருக்கும் நற்பெயர். பாரதத்தில் தயாராகும் பொருளுக்குப் புதிய பெயர் சூட்டாமல் ஏற்கனவே பிரசித்தி பெற்றுள்ள பெயரையே வைப்பது நற்பலனே அளிக்கும்.

இந்த வகையில்தான் டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனம் பிரிட்டிஷ் நிறுவனங்களான — ஹெர்குலெஸ், மில்லர் கம்பெனிகளுடன் இணைசேர்ந்து சைக்கிள்களும் டைனமோ விளக்குகளும் தயாரிக்கிறது. அமெரிக்காவிலுள்ள டயமண்ட் கம்பெனியின் ஒத்துழைப்புடன் சங்கிலிகள் உருவாக்குகிறது.

அந்நிய நிறுவனங்களுடன் இவர்களுக்குள்ள சுமுகமான நல்லுறவு போல் வேறெங்கும் காண்பது அரிது. இதன் ரகசியத்தை திரு அருணாசலம் பின்வருமாறு விளக்குகிறார்: ''பிரச்னைகளைக் குறித்து நீண்ட கடிதங்கள் எழுதிக் குட்டை குழப்புவதில்லை. அதைவிட நீளமான ஒரு பதில் வரும் நமக்கு. வாதப் பிரதிவாதம் வளர்வதோடு சரி. வருஷத்துக்கு ஒருமுறை நான் அயல்நாடுகள் போகிறேன். ஆண்டுக்கொரு முறை அவர்களை இங்கு வரவழைக்கிறேன். ஆக ஆறுமாதங்களுக்கொரு முறை சந்திப்பு நிகழ்கிறது. நல்லெண்ணம் பெருகுகிறது. எல்லாப் பிரச்னைகளுக்கும் துரிதமான, சுமுகமான தீர்வு காண முடிகிறது.''

மேனாட்டு ஆலோசகர், இன்ஜினியர் என்று நிரந்தரமாகப் பணியாற்றும் யாரும் இன்று டி. ஐ. நிறுவனத்தில் இல்லை. ஆரம்பத்தில் வந்தவர்கள், நமது பொறியியலாளருக்கு விஷயங்களை விளக்கிவிட்டுச் சென்று விட்டார்கள். இன்று டி. ஐ. நிறுவனத்தின் இன்ஜினியர்கள் அவ்வப்போது மேனாடுகளுக்குப் போய் இத்தொழில் அடைந்து வரும் சமீப காலத்திய முன்னேற்றங்களைத் தெரிந்து கொண்டு வருகிறார்கள்.

டி. ஐ. ஸ்தாபனத்தைப் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் பேசிக் கொண்டிருந்த திரு அருணாசலம் அவர்களிடம், ''உங்கள் பொழுது போக்கு என்ன?'' என்று கேட்டு வைத்தேன். ''உங்கள் வீட்டு கேட்டில் நுழைந்ததுமே தோட்டக் கலையில் ரொம்ப ஆர்வம் உள்ளவர் என்று தெரிந்து போயிற்று. வேறு ஏதாவது.......?''

''புகைப்படக் கலையில் ஆர்வம் உண்டு. ஆனால் அதற்கெல்லாம் இப்போது எங்கே நேரம் இருக்கிறது? பொழுது விடிந்தால் என்ன புதிய சட்டம் இயற்றியிருக்கிறார்கள்; என்ன புதிய முட்டுக்கட்டைகள் ஏற்பட்டிருக்கின்றன; யாரைப் போய்ப் பார்த்தால் எந்தச் சிக்கல் விடுபடும், தொழிலகத்தில் உற்பத்தி தாமதமின்றி நடக்கும் என்று கவனித்துக்கொண்டு போகத்தான் நேரம் சரியாக இருக்கிறது. தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டு ஏற்றுமதியை அதிகரித்து நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்க வேண்டிய பலப் பல ஆற்றல் இன்று முட்டுக்கட்டைகளை நீக்குவதிலும் முடிச்சுகளை அவிழ்ப்பதிலும் அதிகாரிகளைத் திருப்திப்படுத்த முயல்வதிலும் வீணடிக்கப்படுகிறது. இதுபோன்று தொழிலதிபர்களின் பொன்னான நேரம் விரயமாக்கப்படுவதால் நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் என்று கணக்கெடுத்துப் பார்த்தால் மலைப்பாக இருக்கும்'' என்றார்.

திரு அருணாசலத்தைப் புதிதாகப் பார்ப்பவர்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை மூலதனமாகக் கொண்ட பலப் பல கம்பெனிகளின் டைரக்டர் அவர் என்பதை நம்பக்கூட முடியாது! அத்தனை எளிமையாகத் தோற்றம் அளிப்பதுடன் அடக்கமாகவும் பேசுவார். ஆனால் பேச்சிலே தெளிவும் உறுதியும் இருக்கும். வார்த்தைகளைக் குழப்பு

விதோ அல்லது தயங்கித் தயங்கி இருக்கும் பதிப்பதோ, கிடையாது.

மேலே குறிப்பிட்டுள்ள கருத்தையும் அவர் அச்சமோ தயக்கமோ சிறிதும் இன்றிப் பளிச்சென்று கூறிவிட்டுத் தொடர்ந்தார்: "தொழில் துறைக்கும் சைக்கிள்களுக்கும் தேவையான டயமண்ட் செயின்களை நாங்கள் மிக முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஃபிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். 'ஹார்ட் கரன்ஸி' என்று போற்றப்படும் ஸ்டர்லிங்குகளையும், டாலர்களையும் நம் நாட்டுக்குச் சம்பாதித்துத் தருகிறோம். அந்நாடுகளிலேயே சங்கிலி உற்பத்தி செய்கிறார்கள். அதிலும் தொழில் துறைக்குத் தேவையான சங்கிலிகளைத் தயாரிப்பது ரொம்ப நுணுக்கமான விஷயம். அவ்வாறிருந்தும் 'டயமண்ட் செயின்' என்றால் தரமான பொருள் என்ற நன்மதிப்பின் மீது நம்மிடம் வாங்குகிறார்கள். ஏற்றுமதியை மேலும் அதிகரிக்க முடியும். ஆனால் உற்பத்தியைப் பெருக்க யந்திர வசதி போதவில்லை. யந்திரங்களை வரவழைக்க லைசென்ஸ் கேட்டோம். அமெரிக்கத் துறைமுகத்தில் கப்பலேற நீண்ட காலமாகக் காத்திருக்கிறது இயந்திரம். லைசென்ஸ் இப்போதுதான் — இரண்டு வருஷங்களுக்குப் பிறகு கிடைத்திருக்கிறது! இத்தனைக்கும் ஏற்றுமதியை அதிகரிக்க உதவும் இயந்திரங்களை வரவழைக்கச் சுலபமாக லைசென்ஸ் தருவதாக அரசு கூறிக்கொள்கிறது! அதற்கே இந்தப் பாடு!

"மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, நமது தலைவர்களிடம் தீர்க்க தரிசனம் என்பது சிறிதும் இல்லை. இன்றைய பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்றுதான் பார்க்கிறார்களே ஒழிய நீண்ட கால நோக்கில் நாட்டுக்கு உகந்தது எது என்று யோசிப்பதே இல்லை. அதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை!"

ராமநாதபுரம் ஜில்லாவில் பள்ளத்தூர் கிராமத்தில் வள்ளியம்மை ஆச்சிக்கும் ஏ. எம். முருகப்பச் செட்டியாருக்கும் பிறந்த அருணாசலம் புதுக்கோட்டையிலும் பின்னர் சென்னை பி. எஸ். ஹைஸ்கூலிலும் சில காலம் கல்வி பயின்றார். ஸீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சை எழுதித் தேறினார். இவர் தகப்பனார் திவான்பகதூர் ஏ.எம். முருகப்பச் செட்டியார் அந்நாளைய நாட்டின் கட்டிப் பிரமுகர். பர்மாவில் அவர் நடத்தி வந்த வங்கித் தொழிலில் மகன் அருணாசலம் ஈடுபட்டு பொருளாதாரம் பற்றிய அனுபவ ஞானம் நிரம்பப் பெற்றார்.

அருணாசலம் அவர்களுடன் அவர் வீட்டில் பேசினால் போதாது. அவரது காரியாலயத்தில் பணியாற்றுவோரிடமும் பேசிப் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் வடக்கு பீச் ரோட்டில் உள்ள டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனத்தின் பல அடுக்கு மாடிக் கட்டடத்துக்குள் நுழைந்தேன். அங்கு அருணாசலத்துடன் நெருங்கிப் பழகும் பலரிடம் அளவளாவினேன்.

"அருணாசலத்துக்குக் கோபம் வருமா?" என்பது நான் கேட்ட முதல் கேள்வி.

சைக்கிளைப் போற்றுவோம்!

"யானை, குதிரை அல்லது மோட்டார் காரை விடச் சைக்கிள் சிறந்தது. புகையின் தொந்தரவு இல்லை. பெட்ரோலோ போதுத் தேவையில்லை. நெடு தூரம் வாகச் செல்வதால் நீண்ட தூரம் நடப்பதை விட சைக்கிளில் போவது நல்லது. இதை வைத்துக் கொள்வதில் செலவும் அதிகம் இல்லை.

"ஒரு மனிதனுக்கு சைக்கிள் பல்லக்கைப் போன்றது; ஒரு பெண்மணிக்குச் சைக்கிள் கணவனைப் போன்றது. ஆனால் கணவன் சில சமயம் கோபத்தைப் பிரதிபலிப்பவனாகவும் மனைவி சில சமயம் தோஷ தோஷப்பவளாகவும் அமைந்து விடலாம். சைக்கிளைப் பொறுத்தவரை ஒரு பெரிய சௌகரியம்: "அது பேசுவதில்லை!"

மேற்கண்டவாறு கூறியவர் யார் தெரியுமா? 61ம் பக்கம் பார்க்க.

"அவர் குரலை உயர்த்தி நாங்கள் பார்த்ததில்லை; ஆனால் அதென்னவோ அவரைப் பார்த்த மாத்திரத்தில் ஒரு மரியாதை எங்களுக்கு ஏற்படுகிறது" என்று பதில் கிடைத்தது.

"அறிவாற்றலும் செயல் திறனும் உள்ளவரிடம் இயற்கையாகவே நமக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படும்தானே" என்றேன்.

"உண்மைதான் ஸார்! எந்தப் பிரச்னையானாலும் சுற்றி வளைக்காமல் நேரடியாக அதன் ஆன்மாவையே போய்ச் 'சிக்'கென்று பிடித்து விடுகிறார். தாமதமின்றி முடிவெடுத்துச் சுருக்கமாகப் பேசி அனுப்பிவிடுகிறார்" என்று குரலில் வியப்புத் தொனிக்கக் கூறினார் ஒருவர்.

"இன்னும் ஐந்தாறு வருஷங்கள் கழித்து என்ன பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும் என்று சிந்தித்து அதற்கு இன்றே முன்னேற்பாடுகளைக் கவனிக்கிறார்" என்றார் இன்னொருவர். "அவரிடம் ஏதோ ஓர் உள்ளுணர்வு செயல்பட்டுத்தான் சரியான முடிவுகளுக்கு வரச் செய்கிறது. இத்தனை வெற்றிகளைப் பெற்றுத் தருகிறது."

திரு அருணாசலம் விளையாட்டுப் பிரியர். பேரக் குழந்தைகளுடன் விளையாடுவதற்கு அடுத்தபடியாக அவருக்கு மிகவும் பிடித்த விளையாட்டுக்கள் கிரிக்கெட், டென்னிஸ்.

ஒரு கட்டத்தில் திரு அருணாசலம் தலையிட்டு நிலைமையைச் சமாளித்திருக்காவிட்டால் இன்று சேப்பாக்கம் டி. ஸி. ஏ. கிரிக்கெட் ஸ்டேடியம் சென்னைக்குக் கிடைத்திராது. அதற்கும் பதில் அங்கு ஓர் ஆஸ்பத்திரியும் நர்ஸுகளுக்கான விடுதியும் எழும்பியிருக்கும்!

தமது ஐம்பத்து நாலாவது வயதிலும் திரு அருணாசலம் 'ட்ரிம்'ஆகத் தோற்றமளிப்பதற்குக் காரணம், சமீப காலம் வரையில் இவர் ஆடிய டென்னிஸ்ஸும் அப்பழுக்கற்ற வாழ்க்கையும்.

இதே போல் இவரது சகோதரர் பின்னவரான எம். வி. அருணாசலமும் உடல் நலம் பேணுவதில் கருத்துள்ளவர். ஆசனங்கள் பழகித் தேக ஆரோக்கியத்தைக் காப்பதுடன் திரு ஏ. எம். எம். அருணாசலத்தின் வலது கரமாக விளங்கித் தொழிலகத்தையும் கட்டிக் காக்கிறார். கூட்டு மானேஜிங் டைரக்டரான

அதிசய ஒற்றுமை!

லியோனார்டோ டாவின்சி, சார்லி சாப்ளின், பீட்டில் கலைஞர்கள் பால், ரிங்கோ, கேரி சோபர்ஸ் இவர்களிடையே ஓர் ஒற்றுமை உண்டு. அது என்ன?

(71 பக்கம் பார்க்க)

எம். வி. அருணாசலம். காலஞ்சென்ற ஏ.எம்.எம். முருகப்பாவின் குமாரரான முத்தையா, டைரக்டர்களில் ஒருவராகச் சிறப்பான பணியாற்றி வருகிறார். இறையுணர்ச்சியைத் தொழில் வளர்ச்சியுடன் இணைத்துப் பழகிய குடும்பம்.

1941 முதலே உப்புக் காகிதம் தயாரித்து வந்த சிறிய நிறுவனத்தை அமெரிக்காவிலுள்ள கார்பரண்டம் கம்பெனியுடன் கூட்டுச் சேர்ந்து விரிவுபடுத்தி கார்பரண்டம் யூனிவர்ஸல் என்ற பெயரில் தற்போது நடத்திவருகின்றனர். பலவிதமான தொழில் துறைகளுக்குத் தேவைப்படும் சாணைக் கற்களைப் பல அளவுகளிலும் பல மாதிரிகளிலும் ஏராளமாய்த் தயாரிக்கிறது இந்நிறுவனம். இதிலும் உற்பத்தியைத் தொடங்கியபின்னர் படிப்படியாக இறக்குமதிகளைக் குறைத்துக் கச்சாப் பொருள் உற்பத்தி வரை சகலமும் இங்கேயே நடக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். சென்னையை ஒட்டிய மணலியில் சமீபத்தில் தொடங்கியுள்ள நாக்பால் அம்பாடி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அருணாசலத்தின் அசாதாரண திறமைக்கு மற்றுமொரு சான்று.

அமெரிக்காவில் உள்ள விட்கோ கம்பெனியுடன் இணை சேர்ந்து உருவாகியுள்ளது இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம். அருணாசலத்தின் தீர்க்கதரிசனத்துக்கு எடுத்துக்காட்டாக இந்த ஒப்பந்தத்தில் ஓர் அம்சத்தை எடுத்துக்காட்டலாம். விட்கோ கம்பெனியார் ஆராய்ச்சி ரீதியாகவும் அனுபவரீதியாகவும் தாங்கள் பெற்றுள்ள ஆற்றலை மணலி சுத்திகரிப்பு நிலையத்துக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதோடு, ஒப்பந்தம் நீடிக்கும் கால அளவில் அக்கம்பெனி புதிதாக ஏதேனும் அபிவிருத்திகளை அமெரிக்காவில் கண்டு பிடித்து நடைமுறைக்குக் கொண்டுவந்தால் அவற்றை மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலும் அமுல்படுத்த வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்து.

இவ்வாறாக, தொழில் வர்த்தக ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் முதல் அறையைக் கலையழகோடு அலங்கரிப்பது வரையில் எதையும் நுணுகிப் பார்க்கும் இயல்பு கொண்டவர் திரு அருணாசலம்.

அவரது இந்த இயல்பை விளக்குவதுதான் தாம்ஸனில் இன்று பணியாற்றும் ஒருவர் கூறிய நிகழ்ச்சி அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

''அரசி எலிஸபெத் சென்னை வந்தாரல்லவா?'' என்று ஆரம்பித்துக் கூறினார் அவர்: ''அப்போது அம்பத்தூரில் இரண்டு வரவேற்பு வளைவுகள் அமைப்பதென டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனம் தீர்மானித்தது. அன்று மாலை திரு அருணாசலம் வீடு திரும்பும்போது ஒரு வளைவு தயாராகிவிட்டது. 'மற்றொன்று எங்கே?' என்றார் அவர். 'இரவோடு இரவாக உருவாகிவிடும். கவலைப்படாதீர்கள்' என்று கூறி அனுப்பினேன். அருணாசலம் போய்விட்டார். ஆனால் மறு நாள் காலை நாலு மணிக்கே சாலையில் குறிப்பிட்ட இடத்தில் அவர் நின்று கொண்டிருந்தார்! வரவேற்பு வளைவு குறித்த நேரத்துக்கு முன்பாகவே அழகாக, சரியான முறையில் தயாராகிவிட்டது என்பதை நேரில் பார்த்தபின்னர்தான் அவர் திருப்தி அடைந்தார்!''

ஈட்டிய செல்வத்தை அறக் கட்டளைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பது நகரத்தார் சமூகத்தில் இரத்தத்தில் ஊறிய ஒரு விஷயம். அதன்படி ஏ. எம். எம். சகோதரர்களும் தங்கள் தகப்பனார் பெயரால் அறக் கட்டளை ஏற்படுத்தியுள்ளனர். ஏதோ நல்ல காரியத்துக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டோம் என்றில்லாமல் இரு பள்ளிக்கூடங்கள், ஓர் ஆஸ்பத்திரி, ஒரு பாலிடெக்னிக் முதலியவற்றை நிறுவியுள்ளார்கள். உபகாரச் சம்பளமும் வழங்குகிறார்கள். அறக்கட்டளையின் விளைவாக எழுந்துள்ள இந்த நிறுவனங்கள் சரியாக இயங்குகின்றனவா என்பதைக் குடும்பத்தில் ஒருவர் மாறி ஒருவர் நேரடியாக மேற்பார்த்து வருகிறார்கள்.

திரு அருணாசலத்தின் வாழ்க்கையில் நிகழ்ந்துள்ள எத்தனையோ முக்கிய சம்பவங்களுள் தமிழர்கள் எல்லாருக்குமே பெருமை தரக் கூடிய விஷயம் ஒன்றுண்டு. 1962 முதல் 1965 வரை அவர் தமிழகத்துக்கு ஜப்பான் நாட்டின் கௌரவ தூதராகப் பணியாற்றினார். அதற்கு முன்னால் சென்னையில் ஜப்பானிய கான்சல் ஜெனரல் கிடையாது. அருணாசலம் தான் முதல் தூதர். அவருக்குப் பிறகு ஜப்பானிய நாட்டவரே கான்சல்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும் கான்சல் ஜெனரல் என்ற கௌரவத்தைப் பெற்றவர் திரு அருணாசலம் ஒருவரே! அவரது பணிகளைப் பாராட்டி ஜப்பானிய மன்னர் 'ஆர்டர் ஆஃப் தி ரைஸிங் ஸன்' என்ற மிகப் பெரிய விருதை வழங்கியுள்ளார்.

திரு அருணாசலம் தமது வீட்டுக்கு ''லாரல்ஸ்' என்று பெயர் சூட்டியிருக்கிறார் என்பதை அவரது வீட்டுக் கேட்டைத் தாண்டி உள்ளே நுழையும்போதே கவனித்தேன்.

லாரல் என்பது அபூர்வமான ஒரு மரத்தின் பெயர். அதன் இலைகள் வெற்றியின் சின்னம். 'Resting on one's laurels' என்பது ஆங்கில மொழியில் பேச்சுவழக்கில் உள்ள ஒரு வாசகம். வெற்றிக் களிப்பில் ஆழ்ந்துபோய் மேற்கொண்டு அரிய பெரிய முயற்சிகளில் ஈடுபடாமல் இருந்து விடுபவர்களைப் பார்த்து அப்படிச் சொல்வார்கள்.

திரு அருணாசலம் தாமும் தமிழகமும் அவ்வாறு இருந்துவிடக் கூடாது என்பதை நினைவூட்டிக் கொள்ளத்தான் தமது வீட்டுக்கு அப்பெயரைக் கொடுத்திருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது. - **குட்டிகிருஷ்ணன்**

25. பிறந்தநாள் பரிசு!

ஹோட்டலை நோக்கிப் பாதி தூரம் வந்த பிறகுதான் மீனுவுக்குத் திடீரென்று ஞாபகம் வந்து சொன்னாள்: ''அடடா! அம்மாவுக்குப் பிரெஸண்ட் ஒன்றும் வாங்கலியே, நாம்!''

''எதுக்குப் பரிசு?'' என்று நடராஜன் வினவினார்.

''அவளுக்கு இன்னிக்கு 'பர்த் டே'. போர்ஷோலாவில் சற்று நேரம் இருந்துவிட்டு 'லேக்'குக்கு நடந்து வந்துவிடுவ தென்றும், அங்கே ஷ்பென்ஸரில் ஒரு பரிசு வாங்கிக் கொடுக்கிறது என்றும் அப்புறம் அங்கேயே இந்தப் பஸ்ஸுக்காகக் காத்திருந்து, நிறுத்தி ஏறிக்கொள்கிறது என்றும் தீர்மானிச்சோம். ஆனால் போர்ஷோலாவின் அழகிலே மயங்கிட்டதாலும் பேச்சு சுவாரசியமாக நீண்டதாலும் இந்தத் திட்டம் மறந்தே போச்சு'' — பத்மநாபன் விளக்கினார்.

''உங்களுக்கென்ன வயசு இருபத்தைந்து, இருபத்தாறு இருக்குமா?'' என்று நடராஜன் கேட்டார்.

கலைக்கோ ஸாரநாதன்





கி. ராஜேந்திரன்

''சரிதான் போங்கோ'' என்றாள் அம்புஜம். முகம் 'குப்' பென்று சிவந்து போயிற்று. ''என் பெண்ணுக்கே வயசு பதினெட்டாகப் போகிறது!''

''பைசா செலவில்லாமல் சரியான பரிசு நீங்க கொடுத் தாச்சு ஸார்!'' என்றார் பத்மநாபன், டி. ஐ. ஜி.யை நோக்கி. ''முப்பத்தாறு வயசுக்காரியைப் பார்த்து, 'இருபத்தாறு வயசு இருக்குமா?' என்று கேட்பதை விடப் பெரிய பரிசு வேறு என்ன இருக்கப் போகிறது?''

சிரித்துப் பேசிக்கொண்டே ஹோட்டலை வந்தடைந்தார்கள். அப்போது மணி ஏழு. ''நல்ல பசி எனக்கு; சாப்பிட்டுவிட்டே ரூமுக்குப் போகலாமே?'' என்றார் நடராஜன். முகத்தில் களைப்பு தெரிந்தது. நிம்மதியை நாடி வந்த இடத்தில் ஓய்வு என்று ஒதுங்கிய

நேரத்தில் கடமை குறுக்கிட்டால் நியாயமாக ஏற்பட வேண்டியதை விடச் சோர்வு அதிகமாகவே இருக்கும் போலும்! ''என்ன மிஸ்டர் தனராஜ், சாப்பாட்டுக்கு நாங்க ரெடி!'' என்றார்.

''ஐந்து நிமிஷம் டயம் கொடுங்க, இலை போட்டுடச் சொல்றேன்'' என்றார் ஹோட்டல் முதலாளி. ''அது வரையில் ரிக்ரியேஷன் ரூமிலே பேப்பர் பார்க்கலாமே!''

''சாப்பாடு முதல் தரமாக இருக்கும்னு உத்தரவாதம் கொடுத்திங்கன்னு பத்து நிமிஷம் கூடக் காத்திருக்கத் தயார்.''

''நம்ம ஹோட்டலில் இரண்டாந் தரம்னு சொல்லும்படி என்னைக்கு இருந்துச்சு? எப்பவுமே ஏ.ஒன் மீல்ஸ்தான்!''

''அதை நாங்கல்ல சொல்லணும்'' என்றார் டி.ஐ.ஜி. ''எனக்குத் தெரிஞ்ச அமைச்சர் ஒருவர் எதிரே இருக்கிறவனுக்குப் போடச் சொல்லி மாலையைக் கொடுத்தப்போ தமக்குத் தாமே போட்டுக்கிட்டார். அப்புறம் தான் புரிஞ்சுது அவர் கொஞ்சம் மிதப்பிலே இருந்தார்னு. அதுமாதிரி உங்களை நீங்களே தட்டிக் கொடுத்துக்கிட்டா எப்படி?''

''என்னை நானே பாராட்டிக்கிட்டது உண்மைதான் ஸார்! ஆனால் தண்ணி போடற பழக்கம் எனக்குக் கிடையாது.''

''அப்படின்னு நீர் இந்தக் காலத்தில் அமைச்சர் ஆவதற்கே லாயக்கில்லாதவர்னு அர்த்தம்!''

''இந்தக் கடைசி ஸ்டேட்மெண்ட் பத்மநாபன் சொன்னது; நான் சொல்லலை! ஞாபகம் வைச்சுக்குங்க'' என்றார நடராஜன், சிரித்துக் கொண்டே. பின்னர், தனராஜின் தோள்களைப் பற்றி ''இப்படி வாங்க'' என்று தனியே அழைத்துப் போய்ச் சில விநாடிகள் பேசிவிட்டு வந்தார்.

அதற்குள் பத்மநாபன் குடும்பத்தினரும் ரங்கநாதனும் சாப்பாட்டு ஹாலைத் தாண்டி அப்பால் இருந்த பொழுதுபோக்குக்கான கூடத்தை அடைந்திருந்தனர். ரங்கனும் மீனுவும் பிங்பாங் ஆட ஆரம்பித்தார்கள். விகவும் அனசூயாவும் கேரம் போர்டை ஒரு கை பார்க்கத் தீர்மானித்தார்கள். பத்மநாபன் 'ஹிந்து'ப் பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டார். அம்புஜத்துக்கு ஆனந்த விகடனும் கடைசியாக வந்து சேர்ந்த நடராஜனுக்கு ஒரு பழைய கிழிந்துபோன இல்லஸ்ட்ரேடட் வீக்லியும் அகப்பட்டன.

கால் மணி நேரம் கழித்துத் தனராஜ் வந்து சாப்பிட அழைத்துப் போனார். எல்லாரும் அமர்ந்ததும் ஸர்வர் ஒருவன் தூக்கை எடுத்துக் கொண்டு வந்தான். ''இருடா! இருடா! அவசரப்படாதே, போயிட்டு அப்புறம் வா!'' என்று அவனை விரட்டி அடித்தார் முதலாளி தனராஜ். பின்னர் தாமே சமையலறைக்குப் போய் ஒரு பாத்திரத்துடன் வந்தார். ஆவி பறந்தது.

''அம்மாவுக்கு இன்னைக்குப் பிறந்த நாள்னு கேள்விப்பட்டேன். நம்ம ஹோட்டலுக்கு வந்து தங்கியிருக்கிற போது நீங்க 'பர்த் டே' கொண்டாடறதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்'' என்று கூறியபடியே சுடச் சுட ரவா கேஸரி பரிமாறினார். ''அவசரத்துக்கு இதைத்தான் செய்ய முடிந்தது'' என்று குறைப்பட்டுக் கொள்ளவும் தவறவில்லை அவர்.

இலையில் நெய் மணம் கமகமத்தது. குங்குமப்பூ இங்கொன்றும் அங்கொன்றுமாய் எட்டிப் பார்த்தது. முந்திரிப் பருப்புக்கள் தாராளமாகவே விழுந்திருந்தன.

''நீங்க பண்ணின வேலையா இது? என்னடா தனராஜைத் தனியா அழைச்சுண்டு போய் ரகசியம் பேசறேன்னு யோசிச்சேன்'' என்றாள் மீனு நடராஜனை நோக்கி.

அம்புஜத்துக்கு ரொம்பவும் வெட்கமாகப் போய் விட்டது. மனமும் நெகிழ்ந்து விட்டது. ''சாயந்திரம் கூட மைக்ரோ



வைப் பிடிக்காமல் வெறுங் கையோடு திரும்பியதாக உங்களைக் கேலி பண்ணிப் பேசினேன் நான்'' என்று மன்னிப்புக் கேளாமல் கேட்டுத் ததும்பிய கண்ணீரை உடனடியாகத் துடைத்துக் கொண்டு சமாளித்தாள் அவள்.

''சேச்சே, இதெல்லாம் ஒரு தமாஷ் தானுங்களே! சாப்பிடுங்க! ஹாப்பி பர்த் டே!'' என்றார் நடராஜன். மற்ற எல்லாரும் ஒரே குரலாக ''ஹாப்பி பர்த் டே'' கூறிவிட்டு 'ஸ்வீட்'டை ருசி பார்த்தார்கள். விசு, ''ஹாப்பி பர்த் டே டு யூ!'' என்று நீட்டி முழக்கிப் பாடவே ஆரம்பித்து விட்டான். அந்த மழலையைத் தடுத்து நிறுத்த யாருக்கும் மனம் வரவில்லை. அக்கம் பக்கத்து மேஜைகளில் அப்போதுதான் வந்து உட்கார்ந்தவர்கள் திரும்பித் திரும்பிப் பார்க்கிறதையும் பொருட்படுத்தாமல் அவனை உரக்கவே பாட அனுமதித்தனர். ஸர்வர் கடக் கடக் சப்பாத்தியும் ஸாகுவும் கொண்டு வந்தான். இதர அம்சங்களும் தொடர்ந்தன.

தனராஜ் இரண்டாவது தடவையாக ரவா கேசரிப் பாத்திரத்துடன் ஆஜரானார்.

''ஐயோ! இதுக்கு மேல் தாங்காது!'' என்றாள் அம்புஜம். ''ஏற்கனவே வெயிட் ஏறிண்டிருக்கு!''

''அட! இப்போ என்னங்க அதைப் பற்றிக் கவலை? மீனு விசாரப்பட்டாலும் அர்த்தம் உண்டு. அது வயசுப் பொண்ணு. உங்க எடை என்னவாயிருந்தாலும் பத்மநாபன் கண்களுக்கு நீங்க ரதிதானே! போடுங்க தனராஜ்! தைரியமாப் போடுங்க!''

''உங்களுடைய ஜீரண மாத்திரைகளுள் ஒன்றை விழுங்கிவைக்க வேண்



டிவதுதான்'' என்றாள் அம்புஜம் தன் கணவனைப் பார்த்து.

அச்சமயம் நடராஜ் பத்மநாபனுக்குக் கேசரி போட்டுக் கொண்டிருந்தார். ''சரிதான், இந்த ரேட்டில் போனால் ஜீரண மாத்திரைகூட ஜீரணம் பண்ணச் சக்தி இராது!'' என்றார் பத்மநாபன். ஆனால் கை நீட்டி மறுதளிக்கவில்லை அவர்.

'' 'மீனா வெய்ட் ஏறுவது பற்றிக் கவலைப்படுவது நியாயம்' என்று அப்பா சொன்னார். அதனால் அவள் பங்கையும் சேர்த்து எனக்கே போட்டுடுங்க'' என்றான் ரங்கன்.

''ஐயோ! உடம்புக்கு ஆகாது!'' என்றாள் மீனா.

''இது கரிசனமா? சுயநலமா?'' என்று ரங்கன் கேட்டதும் அவள் அடி உதட்டின் ஓர் ஓரத்தை உள்ளுக்கிழுத்துக் கடித்துக் கொண்டு வெட்கப்படாதிருக்கப் பெருமுயற்சி செய்து படுதோல்வி அடைந்தாள்.

''நீ ரங்கன் மாமா இல்லே! இனிமே நீ ஸ்வீட் மாமா!'' என்றாள் அனுசூயா. ''உனக்கு ஸ்வீட் பிடிக்கும்; நீ ஸ்வீட்டாவும் இருக்கே!''

''தாங்க்யூ அனு!'' என்று கூறி அவன் மீனாவைப் பார்த்தான். 'தெரிந்ததா நான் எப்படிப்பட்டவன் என்று?' என அவன் கண்கள் வினவின.

''ஊறுகாயைக் கொண்டு வாங்க; திகட்டறது!'' என்றாள் மீனா குறும்பாக.

இப்படி உல்லாசமாகப் பேசிச் சிரித்துக் கொண்டே அளவு தெரியாமல் சாப்பிட்டார்கள். பூஜை வேளையில் கரடி நுழைந்தாற்போல் ஓர் இன்ஸ்பெக்டர் அந்தச் சமயம் பார்த்து வந்து சேர்ந்தார். நேராக டி. ஐ. ஜி.யை நெருங்கி ஒரு சல்யூட் அடித்தார்.

நடராஜன் இங்கிதம் தெரிந்தவர். அவரை அந்த இடத்தில் பேசவிடவில்லை. ''எக்ஸ்கியூஸ் மீ'' என்று கேட்டுக் கொண்டு எழுந்து வாசலுக்குப் போய் விட்டார்.

பால் போல் பொங்கிய அவர்கள் மகிழ்ச்சி குறைந்து போய்விடக் கூடாது என்றுதான் அவர் அப்படி நடந்து கொண்டார். ஆனாலும்கூட நீரைத் தெளித்த மாதிரி அடங்கித்தான் விட்டார்கள். இன்ஸ்பெக்டர் வந்ததும், இருவருமாகச் சேர்ந்து அப்பால் சென்றதும் அவர்கள் குதூகலத்தைக் குலைத்து விட்டன.

தயிர் சாதத்தைப் பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது எழுந்து போன டி. ஐ. ஜி. இரவு பன்னிரண்டு மணி வரையில் திரும்பி வரவில்லை. ஆனால் அதற்கு நீண்ட நேரம் முன்பாகவே செய்தி வந்துவிட்டது. ஹோட்டலின் காரியாலய அறைக்குப் போய் விவரம் கேட்டறிந்துகொண்டு பத்மநாபன் தாம் தங்கியிருந்த அறைக்குத் திரும்பிய போது குழந்தைகள் அயர்ந்து தூங்கி விட்டிருந்தனர்.

''என்ன ஆச்சு?'' என்று பரபரப்புடன் கேட்டாள் அம்புஜம்.

'' ஏரியில் கரையோரமாகச் சவம் ஒன்று மிதந்ததாம். நீரில் பாதி நிலத்தில் பாதி என்று கிடந்ததாம்; இருள் கவிந்து சற்று நேரம் ஆகியிருக்கும் சமயம் யாரோ பார்த்துட்டுக் கூச்சல் போட்டார்களாம். அப்புறம்தான் டி. ஐ. ஜி.க்குத் தகவல் கிடைக்கப் போயிருக்கார்'' என்று ஏதோ கனவில் பேசுகிறவர்போல் கூறிக் கொண்டு போன பத்மநாபன் திடீரென்று விழித்துக்கொண்டவர் போல் சொன்னார். ''அம்புஜம்! உனக்கு யார் பிறந்த நாள் பரிசு கொடுத்தார்களோ இல்லையோ; — சைக்கோ ஸாரநாதன் கொடுத்துவிட்டான்!''

அம்புஜம் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்துவிட்டாள்.

''அம்புஜம்! அம்புஜம்! நான் தமாஷா சொன்னேன்! ஸீரியஸ்ஸா எடுத்துக்காதே, ப்ளீஸ்!'' என்று இறைஞ்சுவது போல் கேட்டுக் கொண்டார் பத்மநாபன். அடுத்து அவரது வழக்கமான கிண்டல் எட்டிப் பார்த்தது: ''நாளைக்கே ஸ்பென்ஸரில் உனக்கு ஒரு காப்பிக் கொட்டை அரைக்கிற மிஷின் வாங்கி ப்ரெஸெண்ட் பண்ணிடறேன்; எனக்கும் சௌகரியமாயிருக்கும்!''

''என்னைக் கேலி பண்ணினதுக்காக அழலை நான். எனக்கு அது பழகிப் போச்சு. ஆனா இப்போ எனக்குப் பயமா இருக்கு. உங்க வாயாலேயே இது சைக்கோ ஸாரநாதன் பண்ணின காரியம்னு சொல்லிட்டேள் இல்லேயா?''

பத்மநாபனும் அப்போதுதான் அதை உணர்ந்து அதிர்ச்சி அடைந்தார். இது காறும் அவர் டி. ஐ. ஜி.யின் கூற்றுத் தான் உண்மை என நம்பி இவையெல்லாம் சைக்கோ செய்த கொலைகள் அல்ல என்றே சாதித்து வந்தார். இப்போது அவரையும் அறியாமல் அவரே நடராஜ் கருத்தோடு ஒத்துப் போய்ப் பேசியிருக்கிறார்!

''நாம போயிடலாமே; நாளைக்கே போயிடலாமே!'' என்று தவிப்புடன் சொன்னாள் அம்புஜம்.

பத்மநாபன் அவளை அணைத்து ஆறுதல் கூறினார்: ''நம்ம ஒரிஜினல் ப்ளான்படியே இன்னும் மூணோ நாலோ நாள்தான் பாக்கி. ஃபர்ஸ்ட் க்ளாஸ்

ரிஸர்வேஷன் ரெடியா இருக்கு. இப்போ அதைக் கான்ஸல் பண்ணிட்டு மூணாம் கிளாஸிலே அவதிப்பட்டுண்டு போறதை விட முதலில் போட்ட திட்டத்தின் படியே திரும்பிடலாம். கொஞ்சம் பொறுத்துக்கோ.''

கணவனின் அன்பில் கரைந்த அம்புஜம் தலையாட்டிச் சம்மதம் தெரிவித்தாள். ஆனால் இரவு முழுவதும் அவள் தூங்கவே யில்லை!



26. பிரையண்ட் பார்க்

ஏரியைச் சுற்றி அதிகக் கூட்டம் இல்லை. கொடைக்கானலுக்கு அவர்கள் வந்த தினம் எப்படிக் கலகலவென்றிருந்தது அந்தச் சூழல்! அதில் பாதிப் பேர் கூட இருக்க மாட்டார்கள் இன்று. வெறிச்சோடிப் போய்விடவில்லை என்றாலும் சர்க்கஸ் முடிந்து டேரா தூக்கப்பட்ட இடம்போல்தான் காட்சி தந்தது.

கொடைக்கானலில் சீசன் சமயத்தில் இந்த மாதிரி அதுவரை இருந்ததே கிடையாது என்று உள்ளூர்வாசிகள் சிலர் பேசிக் கொண்டார்கள்.

அன்று காலை தனராஜும் ஒரு குரல் அழுதுவிட்டார் பத்மநாபனிடம்.

ஏரியில் நடந்த துர்மரணம் பற்றிய செய்தி காலையில் வேகமாய்ப் பரவியதும் மேலும் பத்து அறைகள் காலியாகி விட்டனவாம். 'நல்ல வேளை! நாமாவது திட்டத்தை மாற்றிக் கொண்டு முன்கூட்டியே கிளம்பாமல் இருக்கிறோமே' என்று நினைத்துக் கொண்டார் பத்மநாபன். அம்புஜம் சொன்னபடி செய்திருந்தால் தனராஜுக்கு ரொம்ப ஏமாற்றமாகியிருக்கும். அவர் தம் கஷ்டத்தைச் சொல்லி அழவாவது ஓர் ஆசாமி வேண்டாமா?

பத்மநாபனுக்கு அனுதாபத்துடன் எல்லாருடைய குறைகளையும் கேட்டுக் கொள்ளும் சுபாவமும் இரக்க சிந்தையும் உண்டு. இது பல சந்தர்ப்பங்களில் சோதனையாகவும் முடியும். மரியாதையாகத் தமது கடுகத்தனைத் துன்பங்களை வர்ணிப்பவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் திணறுவார்.

இப்போது சாலை ஓரத்தில் வேர்க்கடலை வாங்கி எல்லாருக்கும் விநியோகித்தவர், "ஏரிக் கரை என்ன? என் பர்ஸ்கூடத்தான் வெறிச்சென்றிருக்கிறது" என்றார் அம்புஜத்தைப் பார்த்து. மெய்யாலுமே மிகவும் மெலிந்துதான் விட்டிருக்கிறது அவருடைய மணிபர்ஸ் என்பதை அம்புஜமும் கவனித்தாள்.

"காப்பிக் கொட்டை மீதில் வேணுமா? ஸ்பென்சரில் விசாரித்துப் பார்க்கட்டுமா?" என்றார் அவர் சற்றுப் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். வீட்டில் இருப்பதையே நல்லபடியாக ரிப்பேர் பண்ணி வைக்கச் சொல்லிப் பக்கத்து வீட்டு மாமியிடம் சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்.-- விசுவுக்கு ஒரு பாப் போட்டுப் புது ஸ்டாக்காக ஒரு ரொட்டியும் அமுல் வெண்ணெயும் வாங்கிண்டு வாங்கோ, போதும்."

"சரி, நீங்க இப்படியே பிரையண்ட் பார்க்குக்கு நடந்து போயிண்டிருங்கோ. வந்து சேர்ந்துக்கறேன்."

"எல்லாரும் ஒண்ணாவே போகலாமே!"

"அடடே! என்ன பயம்? ரங்கன் பின்னோடு இருக்கான். டி. ஐ. ஜி. மகன் சிங்கக் குட்டி! யார் என்ன பண்ணிடுவார்கள் உன்னை?"

" எங்களுக்காகவா, சொல்றேன்? நீங்க தனியா போறேளே!"

"அது கெட்டுது போ! இன்னொரு தடவை சொல்லாதே. வெட்கமாயிருக்கு!" — இப்படிக் கூறிவிட்டுப் பத்மநாபன் திரும்பி நடந்தார் ஸ்பென்ஸரை நோக்கி. அதற்கு நேர் எதிர்த்திசையில் மற்றவர்கள் ப்ரையண்ட் பார்க்கைப் பார்க்க நடந்தார்கள்.

"ஊட்டியில் பொட்டானிகல் கார்டன் பார்த்திருக்கேளா? அது இந்த ப்ரையண்ட் பார்க்கைவிடப் பிரமாதமாக இருக்கும்!" என்றான் ரங்கன்.

"உம்.... எப்பவோ எங்களுக்குக் கல்யாணம் ஆன புதுசிலே ஒரு தரம் போயிருக்கோம். மீனுகூடப் பொறக்கலை அப்போ."

"ஓ! ஹனிமூனா! ஏம்மா! எங்கிட்டே சொல்லவே இல்லையே நீ?" என்று மீனு குறைப்பட்டுக் கொள்கிற தோரணையில்.

"ஆமாம்டி! ஹனிமூன் போயிட்டு வரேன்னு பொண்ணுகிட்டே சொல்லிண்டு கிளம்ப முடியுமாக்கும்! இது என்ன அமெரிக்காவா? [illegible]"



“சின்ன எஜமானிடம் பழக ஏதாச்சும் இருந்தா சொல்லுங்கன்னு கேட்டேன்.....நல்லா இருக்கா மக்கான் !”

“அமெரிக்காவில் மட்டும் அது எப்படிச் சாத்தியமாகக் கூடும், மாமி?”

“சரியான டியூப் லைட் !” என்ற மீனு. சிரித்துக் கொண்டே விளக்கினாள்: “அங்கே டைவர்ஸ் பண்ணிட்டுப் புது ஆம்படையானோடே தேன் நிலவு கிளம்புவா, குழந்தைகளுக்கு டாட்டா சொல்லிட்டு. மூத்தது மற்றது களைக் கவனிச்சுக்கணும்.”

“அது சரி என்னமோ 'டியூப் லைட்' டுன்னியே, அப்படின்னு?” — அம்புஜம் வினவினாள்.

இப்போது ரங்கன் சிரித்தான். “ஒரு ஜோக்கைப் பனிச்சுன்னு புரிஞ்சுக்காம என்ன ஏதுன்னு கேட்கிறவங்களை ட்யூப் லைட்டுன்னு சொல்றது. அது எரியலாமா வேண்டாமான்னு கொஞ்ச நேரம் மினுக்கு மினுக்குன்னு யோசிக்கும். பிறகுதான் ஒளி சிந்தும் இல்லேயா?”

“நீ விளக்கம் கேட்டதுக்காக உன்னை ட்யூப் லைட்டுன்னு சொல்றாளா இவள்! பொல்லாது! ரொம்பத் துளுத்துப் போயிடுத்து !”

“நீ டியூப் லைட்டுக்கே விளக்கம் கேட்டுட்டியே அம்மா !” என்றாள் மீனு, அடக்க மாட்டாமல் சிரித்துக் கொண்டு.

“ஆமாண்டி ! நானும் ரங்கனும் டியூப் லைட்டுகள்தான். நீதான் பெரிய மேதாவி, போ !”

“அவ கிடக்கிறு மாமி, விட்டுத் தள்ளுங்க. நம்மைக் கேலி பண்ணினதுக்குத் தண்டனையா அவளுக்கு டெலஸ் கோபிக் லென்ஸ் பொருத்தின காமிராவைக் காட்டறதில்லே இன்னிக்கு !” ஒரு குழந்தையைச் சமாதானப்படுத்துவது போல் இப்படி அம்புஜத்திடம் வேடிக்கையாக அவன் கூறினானே ஒழிய ப்ரையண்ட் பார்க்கைச் சென்றடைந்து, ஒரு மர நிழலில் போட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து, ஆஷாஹி பென்டாக்ஸ் காமிராவில் இருந்த லென்ஸைக் கழற்றி விட்டு டெலி லென்ஸைப் பொருத்தியதும் காமிராவை முதலில் அவன் மீனுவிடம்தான் தந்தான். அதற்கு முன்பாக அம்புஜத்தின் கவனத்தைத் திருப்ப கோக்கர்ஸ் வாக்கில் தான் அவர்களை எடுத்திருந்த புகைப்படங்களை அவளிடம் கொடுத்தான். “அனுரூபாவுக்கு இங்கேதானே ஒரு கண்டம் வந்து தெய்வாதீனமாகத் தப்பிச்சாள்? இந்தப் போட்டோக்களைப் பத்திரமா வைச்சிருந்து அவள் பெரியவளானப்புறம் காட்டணும்” என்றாள் அம்புஜம்.

“நீங்க வைச்சுக்கிடுங்க, நான் வேறே பிரிண்ட் போட்டுக்கறேன்” என்றான் ரங்கன்.

“அதோ அனுவும் விகவும் குதிரை மேலே வராளே. எவ்வளவு கிட்டத்தில் தெரிகிறது!” என்றாள் மீனு. டெலி லென்ஸ் பொருத்தப்பட்ட காமிராவில் தொலைவில் வந்து கொண்டிருந்த அனுவும் விகவும் பக்கத்தில் இருப்பதுபோல் தோன்றினார்கள்.

“எங்கே, நான் பார்க்கிறேன்” என்று அம்புஜம் சொன்னாள். காமிராவும் புகைப்படங்களும் கை மாறின.

குழந்தைகள் இருவரையும் குதிரை ஏறி அனுப்பவே அம்புஜத்துக்குத் தயக்கம் தான். ரங்கன் தைரியம் சொல்லி அனுப்பினான். குதிரைக்காரனையும் பத்திரமாக இருக்கும்படி எச்சரித்தான். “ரொம்ப தூரம் போக வேண்டாம்” என்றாள் அம்புஜம்.

ப்ரையண்ட் பார்க் எதிரே மட்டக் குதிரைகளை வைத்துக் கொண்டு, “பாப்பா! ஹார்ஸ் ரைட்! ஜாலி ரைட்” என்று கூறி ஆசை காட்டிக் கொண்டிருந்தனர் சிலர். ரங்கன் விகவையும் அனுவையும் குதிரையின் மீது உட்கார வைத்து ஃபோட்டோ எடுக்க எண்ணினான். அதற்கென்று பத்து காசோ பதினைந்து காசோ கொடுத்து விடலாம் என்று தீர்மானித்து அவர்களை ஏறிக் கொள்ளச் செய்தான். படம் எடுத்தானதும் குழந்தைகள் இறங்க மறுத்தார்கள். “ஃபுல் ரவுண்ட் வேண்டாம், ஹாஃப் ரவுண்ட் போதும், ப்ளீஸ்!” என்றாள் அனு. விகவும் பிடிவாதம் செய்தான்.

“அப்பா வரட்டும், அப்புறம் போகலாம்” என்று அம்புஜம் சொல்லிப் பார்த்தாள். அவளுக்குக் கலக்கமாயிருந்தது. நேற்று இரவு முதலே அவன் எதற்கெடுத்தாலும் பயந்து செத்துக் கொண்டிருந்தாள். ரங்கன் அவள்

ஜயங்களைப் போக்கும்விதமாகப் பேசிய பின்னர், அரை மனத்தோடு சம்மதித்தான்.

இப்போது டெலிலென்ஸ் பொருத்தப்பட்ட காமிரா மூலம் குழந்தைகள் திரும்பி வந்து கொண்டிருப்பதைப் பார்த்த போது அவனுக்கு நிம்மதி பிறந்தது.

"உன் அப்பா வருகிறாரோ பார்க்கிறேன்" என்று காமிராவை இப்படியும் அப்படியுமாய் நகர்த்திச் சாலையைச் சலித்தெடுத்தான். பத்மநாபனைக் காணோம். "சீக்கிரம் வந்துட்டால் தேவலை. நாழியாறதே!" என்றாள் அம்புஜம்.

"நாழியுமாகலை, ஒண்ணுமாகலை, இப்போதானே வந்தோம்?" என்றாள் மீனு. "பார்க்கைச் சுற்றிப் பார்க்கக்கூட ஆரம்பிக்கலை இன்னும்."

ரங்கன் எழுந்தான். நீண்ட டெலிலென்ஸ் பொருத்தப்பட்ட காமிரா எதன் மீதும் இடித்து விடாமல் ஜாக்கிரதையாகப் பிடித்துக் கொண்டு, ரோஜாச் செடிகள் ஏராளமாகப் பயிராகியிருந்த இடத்தை நோக்கி நடந்தான். அம்புஜமும் மீனுவும் பின் தொடர்ந்தார்கள்.

அந்த ரோஜாக்களில்தான், எத்தனை ரகங்கள்! எத்தனை நிறங்கள்; எத்தனை அளவுகள் : அவற்றுக்கு எத்தனை பெயர்கள் !

கரேல் என்று ஒன்று, காப்பிக் கொட்டை நிறத்தில் ஒன்று ; செக்கச் செவேல் என்று ஒன்று ; வெள்ளை வெளேர் என்று ஒன்று; மஞ்சளாக ஒன்று, மங்கிய ஊதா நிறத்தில் ஒன்று— இப்படித் தினுசு தினுசாகப் பூத்துக் குலுங்கின.

"பலவித ஜாதிகளாயிருந்தாலும் எல்லாமே ரோஜாக்கள்தான் மாமி!" என்றான் ரங்கன்.

ட்ரூப் லேட்டாக இருந்து புரிந்து கொள்ளச் சிரமப்படவில்லை அம்புஜம். பளிச்சென்று பதில் சொன்னாள்: "எல்லாமே ரோஜாதான். ஆனால் எல்லாவற்றையும் எதற்கு வேணுமானாலும் பயன்படுத்துகிறோமா? தலையில் சூடிக் கொள்ளலாம். இந்த வெள்ளை ரோஜாவை, மணமாலை கட்டவா செய்கிறோம் ?"

அம்புஜத்தின் சாமர்த்தியம் ரங்கனை அயர வைத்துத் துயரமும் தந்தது. அதை மறைத்துக் கொண்டு அப்பால் சென்றான். க்னாக்ஸ் மலர்கள் கண்ணைப் பறிக்கும் பலவித நிறங்களில் காணப்பட்டதோடன்றிப் பலப் பல நிறங்களைத் தன்னகத்தே தாங்கி நின்ற தனித் தனிப் பூக்களும் இருந்தன.


"ஒட்டுப் போட்டு ஒட்டுப் போட்டுத்தான் இப்படி ஒரு பூவிலேயே பல நிறங்களைத் தோற்றுவிக்கிறார்கள். அழகாயில்லையா, என்ன?" என்றான் ரங்கன்.

"பேஷா இருக்கு" என்றாள், அம்புஜம். "ஆனால் எதுவும் ஓர் அளவோடு நிற்கணும். முந்தாநாள் பேப்பரில் ஒரு செய்தி வந்தது பார்த்தாயா ? திருச்சூர் மிருகக்காட்சிச் சாலையிலே ஓர் அப்பா சிங்கத்துக்கும் அம்மா புலிக்கும் 'லைகர்' குட்டி பிறந்ததாம் ! லயனுக்கும் டைகருக்கும் பிறந்ததால் அதை 'லைகர்' என்கிறார்கள். எவ்வளவோ நாகரிக முன்னேற்றம் அடைந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் இயற்கைக்கு விரோதமான இத்தகைய சிருஷ்டிகளை அநாகரிகத்தின் எல்லை என்றுதான் கருதுகிறேன். மனிதன் எதற்காக இப்படிப்பட்ட அசுரத்தனங்களில் ஈடுபட வேண்டும்?"

அம்புஜத்தை அத்தனை சுலபமாகத் தன் வழிக்குக் கொண்டு வர முடியாது என்று உணர்ந்தான் ரங்கன்.

பிறந்தநாள் நன்கொடை

ராஜாஜி அவர்கள் நிறுவிய திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் குஷ்டரோக நிவாரணப் பணிக்குத் திரு காமராஜ் அவர்கள் தமது 70வது பிறந்த தினத்தன்று ரூபாய் இருபதாயிரத்தை நன்கொடையாக அளித்தார். இந்த நன்கொடையை ஆசிரமத் தலைவர் திரு வி. ஆர். நரசிம்மன் பெற்றுக் கொள்கிறார்.



அறிவுக்குச் சோதனை!

ஒரு சாமியாருக்கு இரு சீடர்கள் இருந்தனர்.

சிறிது காலத்துக்குப் பிறகு, ஒரு நாள் சாமியார் சீடர்களை அழைத்து, "உங்களுக்குப் பல விஷயங்கள் இப்போது தெரியும். எனவே உங்கள் அறிவைச் சோதிக்க விரும்புகிறேன்" என்று கூறி இரு காகிதத் துண்டுகளைக் கொடுத்தார். "இவற்றைப் பூர்த்தி செய்து வாருங்கள்" என்று கூறினார்.

ஒரு சீடர் காகித நடுவில் ஒரு சிறு வெள்ளைப் புள்ளியிட்டு, மீதிப் பாகத்தைக் கரு நிறத்தால் நிரப்பி விட்டார். மற்றவரோ, காகித நடுவில் கரும்புள்ளி சிறிதாக அமைத்து, மீதம் வெள்ளை நிறம் பூசி இருந்தார்.

சாமியார் முதல்வரைப் பார்த்து, "இதென்ன?" என்று கேட்டார். "சுவாமி, தேவரீரிடம் நான் கற்றது சிறு வெள்ளைப் புள்ளி அளவே! இன்னும் கற்க வேண்டியது எவ்வளவோ உள்ளது" என்று அடக்கமாய்ச் சொன்னார். மற்றவரோ, செருக்குடன் "நான் எல்லாம் அறிந்திருக்கிறேன். உங்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியது ஏதுவுமிருந்தால் அது இந்தச் சிறு கரும்புள்ளி அளவே" என்று அகம்பாவமாய்ப் பதிலிறுத்தார்.

"காகிதங்கள் கைமாறி விட்டன" என்று நிதானமாய்ச் சொன்னார் சாமியார்.

சேநாவி. பாரதி

சற்று அழுத்திவிட்டால் வாய் திறந்து மூடும் ஸ்நாப் டிராகன் மலர்கள், தாம்பாளம் போல் பெரிது பெரிதாகப் பல நிறங்களில் பூத்திருந்த தாலியாக்கள் ஆகியவற்றுக்கு அப்பால் மஞ்சள் பாப்பி செடிகள் தங்கத்தாலான சிறு மதுக் கிண்ணங்கள்போல் காட்சி அளித்தன. ஆனால் இவை இலேசானதால் பூங்காற்றில் மெல்ல அசைந்தன. "காகிதப்பூ போன்றிருந்தாலும் எத்தனை அழகு!" என்றாள் மீனா. "அதோ சிவப்பு நிறத்திலும் இருக்கின்றன!"

"அழகாயிருப்பவை பல ஆபத்தானவையும் கூட" என்றான் ரங்கன். "இந்தப் பாப்பியிலிருந்துதான் போதைப் பொருளான ஓபியம் எடுக்கிறார்கள். தெரியுமில்லையா? அதோ ஃபாக்ஸ் க்ளவ் மலர்களைப் பார்! வீட்டில் ஃபோக்ஸ் க்ளவ் (Little Folk's glove) என்பதுதான் ஃபாக்ஸ் க்ளவ் (Fox's glove) என்று மருவிவிட்டதாம். சின்னச் சின்ன வனதேவதைகள் அணியும் கையுறைகள் போலத்தானே அவை தோன்றுகின்றன. மனோரம்யமாய் இல்லையா காண்பதற்கு? ஆனால் அதிலிருந்துதான் டிஜிடாலிஸ் என்கிற விஷம் இறக்குகிறார்கள். இவையே சிறிய அளவில் மருந்துப் பொருளாகவும் பயன்படுகின்றன."

"ஆச்சரியம்தான்" என்ற அம்புஜம், "ரங்கா! குழந்தைகள் என்ன பண்ணுகிறார்கள், பார்!" என்றாள்.

குதிரையை விட்டு இறங்கி வந்த அவர்கள் சற்று முன்னால்தான் அம்மூவருக்கும் 'டாட்டா' சொல்லிவிட்டு, எழில் மயமான தாமரைக் குளத்தைத் தாண்டி அப்பால் ஊஞ்சலும் சறுக்கு மரமும் இருந்த பசும்புல் வெளிக்குச் சென்றிருந்தார்கள். ரங்கன் காமிராவைத் தன் முகத்துக்கு எதிரே உயர்த்திப் பார்த்தான். "சமர்த்தாக விளையாடுகிறார்கள் மாமி! கவலைப்பட வேண்டாம்" என்றான். சட்டென்று அவனுக்கு இன்னொரு விஷயமும் காமிராவில் புலனாயிற்று.

நேற்றையதினம் அனுசூயாவின் காமிராவை உடைத்துப் போட்டு அவள் கோபத்தையும் வருத்தத்தையும் சம்பாதித்துக் கொண்டிருந்த அபிப்பி அமிர்தலிங்கம், இப்பொழுது கணப் பொழுதில் அவளுக்குச் சிநேகமாகி அவளுடன் விளையாடிக் கொண்டிருந்தான். நடந்து போனதை மறப்பது குழந்தைகளுக்குச் சிரமமில்லையே! அவன் எப்போது அந்தப் பூங்காவுக்குள் நுழைந்தானோ தெரியாது; இப்போது அனுவுக்கு ஊஞ்சல் ஆட்டி உதவியது நன்றாகத் தெரிந்தது.

இதை மற்ற இருவருக்கும் உணர்த்திய ரங்கன் தொடர்ந்தான்: "அவளை அவள் ஃபோட்டோ எடுத்தாள் என்று கோபித்துக் கொண்டுதானே அவள் காமிராவை உடைத்தெறிந்தான்? இப்போ டெலி லென்ஸ் பொருத்திய இந்தக் காமிராவால் அவன் அறியாமலேயே அவனைப் படமெடுக்கிறேன்! என்ன செய்வான்? நீங்கள் யாரும் அவனிடம் விஷயத்தைச் சொல்லாதீர்கள். ரகசியமாகவே இருக்கட்டும். 'என்லார்ஜ்மெண்ட்' போட்டு அவனுக்குக் காட்டித் திகைக்க வைக்கப் போகிறேன்!"

ரங்கன் காமிராவை 'ஃபோகஸ்' செய்து 'டைம் அட்ஜஸ்ட்' பண்ணி 'கிளிக்' பண்ணினான். சில விநாடிகளுக்குப் பிறகு அமிர்தலிங்கம் தன் முகம் நன்றாகத் தெரிவதுபோல் சற்று நகர்ந்ததும் மற்றொரு கிளிக். ஐந்து நிமிஷங்களுக்குள் பத்துப் பன்னிரண்டு படங்கள் எடுத்து விட்டான் ரங்கன்.

'ஒன்றிரண்டு படங்கள் போதாவா? அந்த அபிப்பியைப் போய் எதற்கு இத்தனை படங்கள் எடுக்க வேண்டும்?' என்று எண்ணிக் கொண்டாள் மீனா.

(தொடரும்)

இளைஞர் சமுதாயம்

16. அமைதியின் ஆற்றல்

சத்தியம், அஹிம்சை ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், காந்தி அடிகள் விரும்பிய சமுதாயப் புரட்சியை உருவாக்கவும் பணியாற்றி வரும் டில்லி, காந்தி அமைதி நிறுவனத்துக்கு (Gandhi Peace Foundation) நம் நாட்டில் பல மாநிலங்களில், பல கிளைகள் உள்ளன. அவற்றுள் சிதம்பரம் காந்தி அமைதி நிலையமும் ஒன்றாகும்.

சிதம்பரம், காந்தி அமைதி நிலையம் அமைதியான சூழ்நிலையில், அமைந்திருக்கிறது. எளிய தோற்றம் கொண்ட பண்டைக்காலக் கட்டடம்; ஆனால் பழுதடைந்து பாழ்பட்ட கட்டடமல்ல. மிகவும் துப்புரவாக வைத்துக் கொண்டிருக்கின்றனர். கூடம், தாழ்வாரங்கள், முற்றம், பின்புறத்தில் பெரிய பிரார்த்தனை மேடை, தோட்டம், கிணறு ஆகிய வசதிகளைத்தும் கொண்ட பெரிய வீடு அது.

சிதம்பரம், காந்தி அமைதி நிலையத்தில் முப்பது ஆண் அங்கத்தினர்களும், பதினைந்து பெண் அங்கத்தினர்களும் இருக்கின்றனர். அனைவரும் பட்டதாரி மாணவர்கள். ஆண் அங்கத்தினர்கள் ஆற்றும் எல்லாப் பொதுப் பணிகளிலும் பெண் அங்கத்தினர்களும் பங்கு பெறுகின்றனர். இதைக் கண்டதும் எனக்கு, "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்ற பாரதியின் வாக்கு நினைவுக்கு வந்தது.

நிலைய அங்கத்தினர்கள் என்னை அன்போடு வரவேற்று நிலையம் ஆற்றும் தொண்டுகளையெல்லாம் எடுத்துரைத்தார்கள்:

சமூக, தேசிய, சர்வ தேசிய அளவில் தோன்றும் பிரச்னைகளை அஹிம்சை முறையில் தீர்வு காணுவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்;

பொது மக்களிடையே, அஹிம்சைக் கொள்கைக்கு ஆதரவான கருத்தை உருவாக்குதல்;

நமது அன்றாட வாழ்வில் தோன்றும் சிக்கல்களையும், பிணக்குகளையும் தீர்ப்பதற்கு அண்ணல் காந்தியடிகள் காட்டிய வழி சிறந்தது என்பதை வலியுறுத்திக் காட்டுதல்;

இத்துறையில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களுடன் தேவைக்கேற்பத் தொடர்பு கொண்டு உதவுதல்—

இவைதாம் நிலையத்தின் பொதுவான கொள்கைகள்.

நிலையத்தில், நல்லதொரு நூலகமும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஹிந்தி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இரவுப் பள்ளி (உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இலவச வகுப்புகள்) சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வகுப்புக்கள்மாணவர்களாலேயே சிறந்த முறையில் நடத்தப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. இவை நாள் தோறும் நடைபெறும் பணிகள்.

சர்வ சமய வழிபாடு, மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லி அவர்கள் தேவைகளைக் கவனித்தல், சிறுவர் மன்றம் ஆகியவை வாராந்தரப் பணிகளாகும்.

சிறுவர் மன்றத்தின் நோக்கம்,—ஒழுக்கம், அன்பு, நட்புறவுபோன்ற சிறந்த பண்பாடுகள், சுகாதாரம், காந்தியடிகளின் போதனைகள், வாழ்க்கை வரலாறு, அவர் காட்டிய நல்வழிகள், கூறிய போதனைகள் ஆகியவற்றைச் சிறுவர்களுக்குக் கதை, பாட்டு, சொற்பொழிவுகள் மூலம் எடுத்துக் கூறி அவர்களுடைய பொது அறிவையும் பண்பையும் வளர்த்தல்.

சிறுவர் மன்றத்தின் அங்கத்தினர்களுக்காக ஒரு தனிப் பகுதி (Children's Forum) இயங்கி வருகிறது. மன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அவற்றை மேற்பார்வை விட இதில் ஆர்வம் கொண்ட ஒருசில இளைஞர்கள் அடங்கிய தனிக் குழுவையும், ஒரு பொறுப்பாளரையும் அமர்த்தியிருக்கிறார்கள். சிறுவர்கள் விளையாடவும், கதை சொல்லுதல், எழுதுதல், படித்தல், ஓவியம் வரைதல், பாட்டு, நடிப்பு, பொது அறிவு ஆகிய எண்ணற்ற துறைகளில் பயிற்சி பெறவும் வாய்ப்புகள் உண்டு.

மாணவர் சேவைக் குழு, மாணவர் அமைதிக் குழு, சிறப்புக் கூட்

காந்திஜியின் நூற்றாண்டு விழாவில் அவர் கொள்கைகளை மக்களுக்கு நினைவுறுத்தும் வகையில் வாக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டன. வாக்குப்பதிவு நடக்கிறது. அவற்றை ஏற்றுக் கொள்பவர்கள் வாக்குப் பதிவு செய்யக் கூட்டமாக வந்தனர்.



காந்தி நூற்றாண்டு விழாவின்போது "அமைதி ஊர்வலம்"



கதைக்கதையாம்!



கதைக்குள் ஒரு புதிராம்!

மாலை மணி ஆறு இருக்கும்! கொட்டோ கொட்டென்று பெய்த மழை சற்று விட்டு வானம் வெளுத்துக் கொண்டு வந்த நேரம்! ''என்னங்க? விடிஞ்சா வெள்ளிக் கிழமை! மறந்தே போய்விட்டது எனக்கும்! தெருக் கோடியிலே இருக்கிற பெட்டிக் கடைக்குப் போய்க் கொஞ்சம் பழம் வெத்திலே வாங்கி வருகிறீர்களா...?''

லலிதா வந்து எடுத்துக் கொடுத்த முக்கால் ரூபாயைச் சட்டைப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டு கிளம்பினான் அவன்! இரண்டு வீடுகள் தள்ளி நடந்திருப்பான். போதாதவேளை! வழியிலே பழந்தோல் ஒன்று இருந்து அவன் நடையை இடறி விட்டது!

நல்ல வேளை! யாரும் பார்க்கவில்லை! இடது கையிலே நல்ல சிராய்ப்பு, காயம்! எரிச்சலாக எரிந்தது. தூசுகளைத் தட்டிவிட்டுக் கொண்டே நடையைத் தொடர்ந்தான்! சடாரென்று அவன் பான்ட் பாக்கெட்டைத் துழாவினான். லலிதா கொடுத்த ரூபாய் நோட்டு அவன் விழுந்த இடத்திலேயே போய் விட்டதோ! ஆமாம், லலிதா தேங்காய் வேண்டுமென்று சொல்லக் காணோமே! தேங்காய் வேண்டுமென்றால் ஒரு நடை இந்தப் படைபதைக்கிற வெய்யிலில் போய் வாங்கி வரவேண்டுமே! தேங்காயையும் சேர்த்தே வாங்கிக் கொண்டு, கடைக்கு நாளைக்குப் பணம் தருவதாகச் சொல்லிக் கொள்ளலாம் என்ற தீர்மானத்துடன் வந்தவனைப் பூட்டியிருந்த கடைதான் வரவேற்றது. சே சே! என்ன நினைவு மறதி! செவ்வாய்க்கிழமை தோறும் அந்தக் கடை லீவு என்பது கூட மறந்து போய்விட்டதே!

வெறும் கையுடன் திரும்பியதுமல்லாமல் காயம் வேறு பட்டுக் கொண்டு வந்தவனைப் பார்த்துப் பதறிப்போனாள் லலிதா! டிஞ்சரைத் தேடி எடுத்துக் கையில் தடவி விட்டாள். அந்த நேரம்—

''லலிதா! திருப்பதி போய் வந்தோமல்லவா? இந்தா, பிரசாதம்!'' — எதிர்வீட்டு ராஜி கொடுத்துச் சென்ற லட்டு வடையைத் தன் கணவனிடம் நீட்டி, ''உங்களுக்கு லட்டுன்னு உசிராச்சே! எடுத்துக்குங்க!'' என்றாள்.

''உனக்கு மூளை இருக்கா? கையிலேயும் காயம். டிஞ்சரை வேறே கொட்டி மெழுகி ஒரேயடியா நாறுது... எப்படி எடுத்துக்கிறது? இடக் கையாலே பிரசாதம் எடுக்கக்கூடாது! நீயே வாயில் போட்டு விடு!'' என்று அவன் கூற, லலிதாவோ—

முன்பு ஒரு சமயம் இம்மாதிரி அவனது வாயில் எதையோ ஊட்டிவிடப் போக அவளது விரல் அவனது வாய்க்குள் சிக்கிக் கொண்டு பட்ட இன்ப வேதனையை நினைத்துச் சிரித்தாள்.

இந்தக் கதையில் என்ன இருக்கிறது என்று முகத்தைச் சுளிக்காதீர்கள். மறதி அதிகமுள்ள ஒருவர் எழுதிய இந்தக் கதையில் எத்தனை தவறுகள் பின்னியிருக்கின்றன? ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் படித்தும் பார்த்தும் பிழைகளைக் கண்டு பிடியுங்கள்!

(விடை 70ம் பக்கம் பார்க்க)

டங்கள், தேசிய விழாக்கள், கருத்தரங்கு, பட்டிமன்றம், கவியரங்கு, கோடை முகாம், ஒரு நாள் முகாம், கட்டுரை, நாவன்மைப் போட்டிகள், கண்காட்சி, திரைப்பட நிகழ்ச்சிகள், அமைதிப் பணி, நிவாரணப் பணி, புத்தக விற்பனை, கதர்ப் பிரசாரம் — என்று நிலையத்தின் சிறப்புப் பணிகளின் நீளம் அனுமான் வால் மாதிரி நீண்டு கொண்டே போகிறது!


(தலையைச் சுற்றுகிறதா? நன்றாய்ச் சுற்றட்டும். நிலைய அங்கத்தினர்கள் தங்கள் சாதனைகளை மூச்சு விடாமல் சொன்னபோது பொறுமையாகக் கேட்டுக் கை வலிக்க எழுதிக் கொண்டேனே! எனக்கு எப்படி இருக்கும்? நீங்களும் அந்தச் சிரமத்தை அனுபவிக்க வேண்டாமா? மன்னிக்க வேண்டும். இதை ஒரு சிரமமாகச் சொன்னது தவறு. இன்பமாகத் தான் சொல்ல வேண்டும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!)

அவர்கள் சொல்லிக் கொண்டே போனபோது நான் சிலவற்றை எழுதிக் கொள்ளாமல் தலையை மட்டும் ஆட்டினேன். அவர்கள் என்னை விடவில்லை. ''தயவுசெய்து எங்கள் அமைதிப் பணியை விவரமாக எழுதிக் கொள்ளுங்கள், ஸார்!'' என்று வற்புறுத்தினர். வேறு வழியின்றி எழுதிக் கொண்டேன்!

நிலையத்துக்கு, சொந்தக் கட்டடம் கட்ட வெகு நாட்களாக எண்ணம் இருந்து வருகிறது. இப்பொழுது அதற்கான மனை வாங்கப்பட்டு விட்டது. இனி, கட்டடம் எழும்ப வேண்டும். அதற்கு நிதி திரட்ட உத்தேசித்திருக்கிறார்கள். பொதுமக்கள் வாரி வழங்க வேண்டும். நல்ல பணி நடப்பதற்குக் கேட்பானேன்!

கடைசியாக, பாராட்டுக்குரிய ஒரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும்! அமைதி நிலையத்தின் தொண்டாற்றும் இளைஞர்களில் பெரும்பான்மையோர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள். அமைதியின்மைக்கு நீண்ட நெடுங்காலமாகப் பிரசித்திபெற்ற அந்தப் பல்கலைக் கழகத்துக்கே அமைதியான முறையில் இம்மாணவர்கள் நல்ல பெயர் தேடித் தந்துவிட்டனர். முன்னொரு காலத்தில், பேராசிரியர் கல்கி அவர்கள் 'அண்ணாமலை சர்வகலா(ட்டா)சாலை!' என்று எழுதினார். அமைதி நிலையத் தொண்டர்களின் அரும் பணியினால் அப்பெயர் மாறி வருகிறது.

— சோமாஸ்



தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி இஞ்சினியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஸ்ரீ கே. சௌந்தரராஜன். அவர்கள் குமாரர் சிரஞ்சீவி எஸ். வி ராகவனுக்கும், ஸ்ரீ டி. ராமசாமி ஐயங்கார் பேத்தியும், காலஞ்சென்ற ஸ்ரீ டி. ஆர். பார்த்தசாரதி ஐயங்கார் அவர்களின் குமாரியுமான சௌ. கல்யாணிக்கும் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

சிறப்புச் சிறு கதை

அவன் வருவானா மாட்டானா என்கிற தன் சந்தேகத்தை மாலினியிடம் வெளியிட வாயெடுத்த போது, கதவைத் திறந்து கொண்டு அவன் வந்தான். இருவரும் உடனே எழுந்து அவனோடு வெளியே இறங்கினார்கள். 'ரொம்பத் தாமதம் செய்துவிட்டேனா?' என்று அவன் கேட்டபோது, 'இல்லையில்லை, அரை மணி நேரம்தான்!' என்று சிரித்துக் கொண்டே சந்திரா பதில் சொன்னாள். மாலினியும் சிரித்தாள். அவன் அப்போதுதான் மாலினியைக் கவனித்தான் என்பது அவனுடைய முக மாற்றத்திலிருந்து தெரிந்தது. மாலினியின் வருகையை அவன் இரசிக்கவில்லையோ என்ற சந்தேகம் சந்திராவுக்கு முழுமையாவதற்கு முன்பே அவன் தன்னுடைய முகத்தை சகஜ பாவத்துக்கு மாற்றிக் கொண்டு விட்டான்.

மாலினியும் சந்திராவும் எப்போதும் சேர்ந்தே இருப்பதைக் கவனித்திருந்த அவன், மாலினியையும் அந்தச் சந்திப்பில் எதிர்பார்த்திருந்த போதிலும் ஒரு வேளை சந்திரா தனியாகத் தனக்காகக் காத்திருக்கக்கூடுமோ என்றும் நினைத்துப் பார்த்திருந்தான். அவள் மாலினியை அழைத்துக் கொண்டு வந்தது ருசித்து அவளைக் கெட்டிக்காரி என்றும் பாராட்டிக் கொண்டு அவளைத் தன்னுடைய மதிப்பில் உயர்த்திக் கொண்டான்.

'எங்கே போவது?' என்று அவன் கேட்டபோது, அவள் தனக்கு எந்த விதமான பிளானும் இல்லை என்று பதில் சொன்னாள். குளிர் சாதனம் அமைக்கப்பட்டு, இரவு நடன வகைகளைக் கொண்ட நகரத்தின் பிரபலமான ஒரு ஹோட்டலின் பெயரை அவளே சொன்னபோது, இவளுக்கு முன்பே இது போன்ற அநுபவங்கள் உண்டு போலும் என்று அவனுள் ஓர் எண்ணப் பொறி தட்டிப் பறந்தது. அடுத்தாற்போல், எப்படிப் போவது என்ற பிரச்னை எழுந்தபோது, அவள் என்ன செய்கிறாள் என்பதை அவன் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தான். 'நாங்கள் இருவரும் ஓர் ஆட்டோ ரிக்ஷாவில் போகிறோம்; நீங்கள் இன்னொரு ஆட்டோவில் வாருங்கள்' என்று அவள் சொன்னதும், அவனுக்கு அந்தக் கணத்தில் சிறு ஏமாற்றம் ஏற்பட்ட போதிலும், அவளிடம் இருந்த அவளைப் பற்றிய மதிப்பு இன்னும் உயர்ந்தது.



ஹோட்டலில் காப்பிக்கு ஆர்டர் கொடுத்தான். 'உங்கள் தாய்மொழியில் பேச முடியாததற்கு வருந்துகிறேன்' என்று சந்திரகாந்த் சொன்ன போது, 'எந்த மொழியானால் என்ன? நாம் ஒருவரையொருவர் தெரிந்து கொள்ள வந்திருக்கிறோம். புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்' என்றாள்.

பிறகு தன்னைப் பற்றிச் சொன்னான். தான் பிறப்பதற்குச் சில மாதங்கள் முன்பே தன்னுடைய தந்தை இறந்துவிட்டதையும், தாய் நோய்ப் படுக்கையில் விழுந்துவிட்டதையும் சொன்னான். தான் அம்மாவின் தங்கையிடம் வளர்ந்ததையும், சொந்த முயற்சியில் பி. ஏ. படித்து, ஜெர்மன் மொழியில் தேர்ச்சி பெற்றதையும் விவரித்தான்.

சந்திரகாந்த் மிகவும் வெளிப்படையாகப் பேசியது அவளுக்குப் பிடித்திருந்தது. இந்த மாதிரி பேசுகிற ஓர் இளைஞனை அவள் இதற்கு முன்பு சந்தித்ததில்லை. இந்த மொழிபெயர்ப்பாளர்


சந்தர்ப்பங்கள்

ம. இராஜாராம்

வேலை கிடைப்பதற்கு முன்பு தில்லியில் மூன்று வருஷங்கள் இருந்தபோது நிறைய வாலிபர்களுடன் பழகுகிற சந்தர்ப்பங்கள் அவளுக்குக் கிடைத்தன. 'டேட்டிங்' என்கிற நாகரிகத்துக்குக்கூட அவள் வயப்பட்டிருக் கிறாள். ஆனால் எவனும் அவளிடம் இத்தனை இயல்பாக, தர்க்கரீதியாக, உணர்ச்சிவசப் படாமல் மனம் விட்டுப் பேசினதில்லை.

'இந்தச் சந்திப்புக்குப் பிறகு நாம் என்ன முடிவு எடுத்தாலும் அந்த முடிவு சரியானது என்ற பூரணமான நம்பிக்கை நமக்குள் உண்டாகும்படி, இப்போதே எல்லா விஷயங்களையும் பேசி விடுவோம்' என்று அவன் சொன்னதை அவளும் ஆமோதித்தாள். மாலினி இருப்பதை ஒரு தடையாகக் கருத வேண்டாம் என்று அவனிடம் சொன்னாள் சந்திரா.

''நான் வீட்டில் பதின்மூன்றாவது குழந்தை. என் பெற்றோரின் தலைமுறைக்கும் என் தலைமுறைக்கும் நிறைய இடைவெளி'' என்று அவன் தன்னைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். நான் செய்வது எதுவும் அவர்களுக்குப் பிடிக்காததையும், அவர்கள் செய்வது எதுவும் தனக்குப் பிடிக்காததையும் விவரித்தான். எஸ். எஸ். எல். ஸி. முடித்ததும், தனக்குள்ளிருந்த மனிதன் தலை தூக்கியதும், இடைவெளி விசுவரூபமெடுத்து விட்டதையும், தான் ஊரைவிட்டே — ஆந்திராவில் ஒரு சிறிய ஊர் அவனுடையது — வந்துவிட்டதையும் விளக்கினான். பிறகு பத்து வருஷங்கள் என்னென்னவோ வேலை செய்தது — மாலை வகுப்பில் பி. ஏ. வரை படித்தது — இலக்கிய



ஆர்வத்தில் நிறையப் படித்ததோடு, ஜெர்மனிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க ஆரம்பித்து, ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் துணையாசிரியராகச் சேர்ந்து இந்த நகரத்துக்கு வந்தது வரையில் விஸ்தாரமாகச் சொன்னான்.

அவர்களை அருகே கொண்டு வந்தது இலக்கிய ஆர்வம்தான். அவன் ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் செய்த மொழிபெயர்ப்புக்கள் அவ்வப்போது அவளுடைய பத்திரிகையில் பிரசுரமாயின. இருவரும் இலக்கியக் கூட்டங்களில் ஒருவரை ஒருவர் யாரென்று தெரியாமலேயே பார்த்துக் கொண்டார்கள். அப்போதுதான், அவன் தன்னுடைய திருமணத்தைப் பற்றி நினைக்க ஆரம்பித்திருந்தான். தன் பெற்றோர் தேர்ந்தெடுத்த எந்தப் பெண்ணும் திருப்தியில்லாதுபோது, டாக்டர் காந்தம்மாளிடம் ஒரு நாள் தமாஷாகச் சொன்னான்.

டாக்டரும் முதலில், "என் பெண்ணுக்கு இப்போதுதான் ஏழு வயதாகிறது. நீ இன்னும் ஒரு பன்னிரண்டு வருஷங்கள் காத்திருந்தால் அவளையே உனக்குக் கல்யாணம் செய்து வைத்து விடுகிறேன்" என்று தமாஷ் செய்தாள். பிற்பாடு அவன் தன்னுடைய நிபந்தனையைச் சொன்னபோது மறுபடியும் சிரித்தாள். "நம்முடைய ஜாதியில் இலக்கியத்தில் ஊறிய பெண் உனக்கு எங்கே கிடைப்பாள்?" என்று கேட்டாள். "டால்ஸ்டாயையும், ஜேம்ஸ் ஜாய்ஸையும் பற்றி உன்னோடு பேசிக் கொண்டிருக்க ஒரு பெண் கிடைப்பாள் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டாள். அவன் தனக்கு ஜாதியைப் பற்றிக் கவலை இல்லையென்று சொன்னபோது டாக்டர் அவனுடைய பெற்றோர்களைப் பற்றி அவனுக்கு நினைவூட்டினாள். அவன் சிரித்துவிட்டு, கல்யாணம் செய்து கொள்ளப் போவது தான்தான் என்று சொன்னான். ஆனால் அவள் அதை அத்தனை சீரியஸாக எடுத்துக் கொண்டு மறுநாளே அவர்களுடைய சந்திப்புக்கு ஏற்பாடு செய்வாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

டாக்டர் காந்தம்மா சந்திராவின் காரியாலயத்துக்குச் சென்று அவளைத் தேடிக் கண்டாள். தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். நேரடியாக விஷயத்தைச் சொல்லி விட்டாள். சந்திராவுக்கு ஆச்சரியமாயும், உள்ளூற படபடப்பாயும் இருந்தது. டாக்டர் அவளைத் தன்னுடைய வீட்டுக்கு அழைத்தாள். வேறு பேரிடம் விசாரித்துச் சந்திராவைப் பற்றி எல்லாருக்குமே நல்ல அபிப்பிராயம் இருப்பதைத் தெரிந்து கொண்டாள். மறு நாள் சந்திராவும் மாலினியும் தன் வீட்டுக்கு வந்தவுடன் சந்திரகாந்துக்கு போன் செய்து அவனை அழைத்தாள். அவனுக்கு முதலில் இதைக் கேட்டதும் முதுகுத் தண்டோடு சிலிர்த்தது. படபடப்பை அடக்கிக் கொண்டு டாக்டர் வீட்டுக்குப் போனான். முதலில் கொஞ்ச நேரம் அறிமுகம் செய்து கொள்வதிலும், ஊர் நிலவரம், சினிமாவின் நிலை இவைகளைப் பற்றிய தொடர்பற்ற சம்பாஷணையிலும் நேரத்தைக் கடத்திய பின்னர் தயங்கித் தயங்கி இருவருமே வேறு எங்காவது ஒரு நாள் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். யோசித்து, அந்த வாரம் வியாழக்கிழமை மாலை ஐந்தரை மணிக்கு அவனுடைய காரியாலயத்தில் சந்திப்பதாக ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

அப் பேச்சில் சந்திரா உற்சாகம் கொண்டாள். அவனும் பெரும்பாலும் தன்னுடைய அபிப்பிராயங்களையே கொண்டிருப்பதை அறிந்தாள். எல்லாக் கலைத் துறைகளிலும் உருவாகிவரும் புதிய அலைகளை அவர்கள் இருவரும் புரிந்து கொண்டிருந்தார்கள். இருவரும் தம்மை அதில் ஈடுபடுத்த முயன்று கொண்டிருந்தார்கள்.

பேச்சுவாக்கில் அவன் சொன்ன ஒரு விஷயம் அவளைக் கூர்மையாகத் தாக்கியது. அவள் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லையே தவிர அவளை அந்த விஷயம் மிகவும் பாதித்துவிட்டது. மனிதர்களில் யாருக்கும் யாரும் சொந்தமில்லை என்று அவன் சொன்னான். தன்னை யாரிடமும் பந்தப்பட முடியவில்லை என்றும், திடீரென்று ஒருநாள் எல்லாவற்றையும், எல்லாரையும் துறந்துவிட்டு, தான் எங்கேயோ பெயர் தெரியாத இடத்துக்குப் போய்விடுவோம் என்று தனக்குத் தோன்றிக் கொண்டே இருப்பதாகவும் தெரிவித்தான். அவன் தப்பித்தலைப் பற்றி உயர்வாகப் பேசியதை அவளால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.


அவ்வளவு நேரம் அவனோடு ஒன்றிப் போய்க் கொண்டேயிருந்தவள் திடீரென்று ஏதோ வித்தியாசமாக உணர்ந்தாள். பில் வந்தபோது அவளை மறுத்துத் தானே பணம் கொடுத்தான். மூவரும் வெளியே வந்து அகலமான அந்தச் சாலையின் ஓரத்தில் மரங்களை ஒட்டி நடந்தார்கள். அவன் திடீரென்று பேசினான்: "எனக்குப் பணம் பெரிதில்லை. நான் அதை மதிப்பதேயில்லை" என்றான். மாலினி சொன்னாள்: "சந்திராவும் அப்படித்தான். தனக்கு எவ்வளவு சம்பளம் வருகிறதென்றுகூட அவளுக்குத் தெரியாது. யாராவது கடன் கேட்டால் உடனே கொடுத்து விடுவாள். கையில் இல்லாவிட்டால்கூட வேறு யாரிடமாவது வாங்கியோ, ஆபீஸிலிருந்து முன் பணம் வாங்கியோ கொடுத்து விடுவாள். அவர்களாகக் கொடுக்கிற வரையில் அதை நினைவில்கூட வைத்துக் கொள்ள மாட்டாள்."

"அது கொஞ்சம் ஆபத்தாயிற்றே !" என்றான் அவன் சிரித்துக் கொண்டே...

"எனக்கு நிறைய சிநேகிதிகள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அவ்வப்போது அழைத்து விருந்து வைத்து உபசாரம் செய்ய வேண்டும் என்று எனக்கு ஆசை. அடிக்கடி அவர்களை வீட்டுக்கு அழைத்துச் சந்தோஷப் படுத்த வேண்டுமென்று எனக்கு எப்போதும் தோன்றும்" என்று கூறி நிறுத்திய சந்திரா, சிறு இடைவெளிக்குப்பின் "அதற்கு எனக்குச் சொந்தமாக ஒரு பெரிய வீடு வேண்டும். என் புருஷன், என் குழந்தைகள்.... இதுவெல்லாம் எப்போதோ தெரியவில்லை. எனக்கு வயது ஆகிக் கொண்டே போகிறது. இனி மேலும் நான் பொறுப்பில்லாமல் ஊதாரித்தனமாக இருக்காமல் பணம் சேர்க்க ஆரம்பிக்க வேண்டியதுதான்"

என்று சொல்லி மெதுவாகச் சிரித்தாள். ஆனால் அந்தச் சிரிப்புக்குப் பின்னால் மறைந்திருந்த உணர்ச்சியின் அவனும் இனம் கண்டு கொள்ள முடிந்தது. மாலினி சந்திராவின் கையைப் பிடித்துக் கொள்வதையும் அவன் கவனித்தான்.

திடீரென்று அர்த்தமற்ற ஒரு வேகத்துடன் சந்திரா சொன்னாள்: "ஆனால், என்னை ஆதரவில்லாதவள் என்று நினைத்து என்மேல் இரக்கப்பட்டு என்னை யாரும் திருமணம் செய்து கொள்ள வேண்டாம்." அவன் அவளை ஒரு முறை கூர்ந்து நோக்கி விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.



மூவரும் சற்று நேரம் மௌனமாக நடந்தார்கள். நகரத்தில் ஓடிக் கொண்டிருந்த ஒரு பிரபலமான படத்தைப் பற்றி அவன் ஏதோ கேட்க ஆரம்பித்தபோது அவள், "நீங்கள் என் மேல் ஆர்வம் காட்டுவதாக டாக்டர் காந்திமா சொன்னார்கள். நாம் எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசி விடுவது நல்லது. என்னுடைய ஒரு கண்டிஷன் என்னைத் திருமணம் செய்துகொள்கிறவர் என்னுடைய இலக்கியப் பித்தை மதித்து நடக்கிறவராக இருக்க வேண்டும். அவர் எழுத்தாளராக இருந்தால் ரொம்ப நல்லது" என்றாள். அவள் இத்தனை வெளிப்படையாகப் பேசியதைக் கேட்டு அவன் ஆச்சரியப்பட்டான். கூடவே அது அவனுக்குத் திருப்தியாகவும் இருந்தது. ஆனால், 'நீதான் என் மேல் ஆர்வம் கொண்டாய்; நான் ஒன்றும் உன்னைத் தேடி வரவில்லை' என்கிற தொனியில் அவள் பேசியது அவனைக் கசப்பாகக் குத்திக் கொண்டிருந்தது.

சந்திராவே தொடர்ந்து சொன்னாள்: "தேடித் தேடிப் பார்த்தால் நமக்குள் முக்கியமாக இரண்டு குணங்கள் இருக்கின்றன. ஒன்று மொழி: இன்னொன்று — நீங்கள் என்னைவிடச் சிறியவர் என்று எனக்குத் தோன்றுகிறது."

இதைக் கேட்டதும் அவனுடைய இதயம் ஒரு முறை பொங்கிச் சுருண்டது. அவனே மேலும் சொன்னான்: "எதற்கும் நன்றாக யோசித்துப் பாருங்கள். டாக்டரையும் கலந்து கொள்ளுங்கள். நானும் யோசிக்கிறேன். நாம் இன்னொரு முறை சந்திக்கிறோமா இல்லையா என்பதை இப்போது சொல்ல முடியவில்லை."

"நம் முடிவு எப்படியிருந்தாலும் நாம் நண்பர்களாகச் சந்தித்துக் கொள்வதற்கு என்ன தடை?" என்று அவள் கேட்டபோது, அவன் மெதுவாகச் சிரித்தான். பிறகு அவனும் மாலினியும் அவனிடம் விடைபெற்றுக் கொண்டார்கள்.

வீடு திரும்பும் போகிற வழியில் சந்திரா, மாலினியிடம் அவனைப் பற்றி அவளுக்கு என்ன தோன்றுகிறது என்று கேட்டாள். அவள், "பரவாயில்லை. நீ இதுவரையில் நாம் தேடியவர்களில் இவன் எவ்வளவோ தேவலை" என்றாள். "இவன் நிஜமாகவே மற்றவர்களின்றும் வித்தியாசமாயிருக்கிறான். நான் விரும்புகிற மாதிரியே இலக்கியப் பைத்தியமாயிருக்கிறான்" என்று தனக்குள் சொல்வதுபோல் சொல்லிக் கொண்டாள் சந்திரா. பிறகு, "ஆனால் திடீரென்று எங்கா வந்ததையும் விட்டு விட்டு ஓடிப் போய் விடுவேன் என்கிறானே இவன்!" என்றாள்.

"என்ன இருந்தாலும் அது கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம்தான். பொறுப்பில்லாத வாழ்க்கை என்றும் அவனுக்குக் கவர்ச்சி இருக்கிறது. பிறகு கல்யாணம் ஒரு சுமையாகப் போய் விட்டால் என்ன செய்வது?" என்றாள்.

இருவரும் சற்று நேரம் மௌனமாக நடந்தார்கள். பிறகு சந்திராவே ஆரம்பித்தாள்: "அப்புறம் இந்த வயசு விஷயம். அவன் சொல்கிற கணக்குப்படி பார்த்தால் அவனுக்கு இருபத்தாறு. இருபத்தேழு வயசுதான் ஆகியிருக்கும்!"

"நீ ஏன் அவசரப்பட்டுக் கொண்டு அவனிடம் சின்னவன், பெரியவன் என்கிறதைச் சொன்னாய்? உன்னைப் பார்த்தால் யாருக்காவது முப்பது வயது என்று மதிக்கத் தோன்றுமா?" என்று மாலினி சிறிது கடுப்புடன் கேட்டாள்.

சந்திரா சிரித்துக் கொண்டு, "அவனிடமிருந்து அதை மறைத்து விட்டாலும் எனக்கே அதில் சம்மதமா இல்லையா என்று சந்தேகமாக இருக்கிறது!" என்றாள். அவள் மனம் குழம்பிப் போயிருந்தது.

மாலினி அவளை மெதுவாக அணைத்துக் கொண்டு, "பாரு சந்திரா! நீ இப்படியே ஏதாவது தொண்டு நொண்டிச் சொல்லிக் கொண்டேயிருந்தால் என்ன செய்வது? சீக்கிரம் நீ உனக்கு ஒரு பாதுகாப்பைத் தேடிக் கொண்டு விடுவது நல்லது" என்றாள்.

சந்திரா யோசனையுடன், "பாதுகாப்பைக் கூடச் சரி பண்ணிக் கொண்டுவிடலாம். ஆனால் அவன் ஆந்திரனாடு. பழக்க வழக்கங்கள் கொஞ்சமே வித்தியாசமாயிருக்கும். அவனுக்குக் காரம் ரொம்பப் பிடிக்குமாயிருக்கும்...." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். மாலினி சிரித்துக் கொண்டே, "பார்த்தாயா, பார்த்தாயா? வேண்டாம் என்பதற்குக் காரணங்கள் தேட ஆரம்பித்துவிட்டாய் நீ!" என்றாள்.

சில கண மௌனத்துக்குப் பின் "பாரு, சந்திராக் கண்ணு! இவன் நல்லவனாக இருக்கிறான். நீ விரும்பும் தகுதிகளை யெல்லாம் பெற்றிருக்கிறான். அசட்டுப் பிடிவாதம் பிடிக்காதே!" என்றாள்.

சந்திரா யோசனையுடன் சற்று நடந்தபின், "பார்க்கலாம்! அவன் என்ன முடிவு செய்கிறான் என்று!" என்றாள்.

மாலினி, ''நீ முயன்றால் அவனை உனக்குச் சாதகமான முடிவுக்குக் கொண்டு வரலாம்!'' என்றாள். சந்திரா, ''உனக்கு என்னைத் தெரியும். அவன்தான் என்னைப் பார்த்து வர வேண்டும். நான் போகமாட்டேன்!'' என்றாள். மாலினி 'ம்'மென்று ஏதோ முனகிவிட்டுப் பல்லைக் கடித்துக் கொண்டாள். பிறகு விடுதி வரையிலும் இருவரும் பேசாமலேயே நடந்தார்கள். சந்திராவை விட்டுவிட்டு மாலினி ஒரு ரிக்ஷா பிடித்துக் கொண்டு வீட்டுக்குப் போனாள்.

பிறகு சந்திரா இரண்டு நாட்கள் காத்திருந்தாள். அவனிடமிருந்து எந்தவிதமான தகவலும் இல்லை. அவளுடைய மனத்தில் சூனியம் சூழ்ந்து கொண்டது. மாலினி சொன்னது போல் தான் அவசரப்பட்டுக் கொண்டு அவனிடம் தன் வயதைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டாமோ என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் மறுபடியும் யோசித்துப் பார்க்கையில் அவளுக்கே அது சரியில்லை என்று தோன்றியது. அவன் சின்னப் பையன் — தான் ஏங்கிக் கொண்டிருக்கிற மனப் பாதுகாப்பை அவனால் தனக்குக் கொடுக்க முடியுமா என்று அவள் சந்தேகப்பட்டாள். ஆனால் அவன் பார்ப்பதற்கு நன்றாயிருக்கிறான். கெட்டிக்காரனாயிருக்கிறான். நிறைய விஷயங்கள் தெரிந்து வைத்திருக்கிறான். தான் ஜான் டிக்கின்ஸ் பற்றியோ ஹைன்ரிச் புல் பற்றியோ பேசினால் முகம் சுளிக்க மாட்டான்.

அவள் எத்தனை வருஷங்களாக ஆதரவுக்கு ஏங்கிக் கொண்டிருக்கிறாள். அம்மாவுக்கு நோயின் உபாதையில் முனகிக் கொண்டிருக்கத்தான் நேரம் இருந்ததே தவிர இவளை அன்பாக ஒரு வார்த்தை சொல்லி அழைக்க முடிந்ததில்லை. அம்மாவின் பக்கத்தில் படுத்துக் கொண்ட நினைவேயில்லை அவளுக்கு. நினைவு தெரியும் வரையில் அம்மாவின் தங்கை தான் 'என் தலையெழுத்து, என் தலையெழுத்து' என்று முனகிக் கொண்டே இவளுக்கு எல்லாம் செய்தாள். இந்த முனகல் மனத்தைக் குத்த ஆரம்பித்தவுடன் இவள் தனக்கு வேண்டியனவெல்லாம் தானாகவே செய்து கொள்ள ஆரம்பித்தாள். அம்மாவின் யோசனைப்படி ஹாஸ்டலிலேயே தங்கிப் படித்தாள். பி. ஏ. இரண்டாவது வருடம் படித்துக் கொண்டிருந்தபோது அம்மா திடீரென்று ஒரு நாள் இறந்துபோனது கூட... அவள் மனத்தில் பாதிக்கும்படி பதியவில்லை.

தான் பி.ஏ. படித்துக் கொண்டிருக்கும் போதே, தன்னுடைய எஸ். எஸ். எல். சி. தோழியர் பலருக்கும் திருமணமாயிற்று. அப்போது அது அவளுக்கு விளையாட்டாக இருந்தது. பாட்டி மட்டும் எப்போதாவது இவளுடைய திருமணத்தைப் பற்றி நினைவுபடுத்திக் கொள்வாள். தாத்தா குதிரைப் பந்தயத்தில் இவளுடைய அம்மாவின் சொத்தை எல்லாம் விளையாடுவதிலேயே நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தார். திடீரென்று வீட்டிலிருந்து ஒரு நாள் காணாமல் போனார். இந்த விஷயம் எதுவுமே அவளை வெளிப்படையாகப் பாதிக்கவில்லை. ஆனால் பி.ஏ.க்குப் பின் என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தபோது அவள் மலைத்துப் போனாள்.

தோழிகள் பலரும் கல்யாணம் செய்து கொண்டார்கள். எல்லாவற்றுக்கும் எல்லை இதுதானா என்று அவளுக்குப் பிரமிப்பாயிருந்தது. கல்யாணம் செய்து கொண்டு தன் அம்மாவோ பாட்டியோ எந்த சுகமும் அனுபவிக்கவில்லை என்று அவள் மனத்துக்குள் பதிந்திருந்தது. பி. ஏ.யில் ஆங்கில இலக்கியம் படித்துக் கொண்டிருந்தபோது அவள் தமிழ் இலக்கியத்தில் மேலும் மேலும் ஆர்வம் செலுத்தினாள். நூலகங்களை முற்றுகையிட்டாள். இன்னுமொரு ஐரோப்பிய மொழி கற்க வேண்டும் என்று விரும்பி ஜெர்மன் மொழி படிக்க ஆரம்பித்தாள்.

சிகரெட்டை ஊதிக் கொண்டு, ஆங்கிலக் கொச்சை வார்த்தைகளை உபயோகித்துப் பேசிக் கொண்டு, சினிமாவைப் பற்றியோ, நடிகைகளைப் பற்றியோ விவாதித்துக் கொண்டு திரிகிற வாலிபர்கள் நிறையப் பேரை அவள் வாழ்க்கையில் சந்தித்தாள். அவர்களுக்கு ஏற்றாற்போல் தானும் நடந்து கொள்ளக் கொஞ்ச காலம் முயன்றாள். ஆனால் அவள் தன்னை அறிந்து கொண்டபோது, இந்தக் கால விரயம் அவளைச் சோகத்தில் ஆழ்த்தியது. அவளுக்குப் பிடித்தாற்போல, அவளைக் கவருகிற மாதிரி பேசிய எந்த இளைஞனையும் அவள் காணவில்லை. பிற்பாடு டெல்லியில் இருந்த நாட்களில், நாகரிகத்தின் மேல் தட்டில் உலவிய சில வாலிபர்களுடன் பழக நேரிட்ட காலத்திலும் அவள் தேடியவன் அவளுக்குக் கிடைக்கவில்லை.

அவளுடைய திருமணத்தைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. ஒருவேளை வீட்டிலேயே யாராவது அவளுக்காக ஒருவனைப் பிடித்துக் கல்யாணத்தையும் முடித்து வைத்திருந்தால் அவள் அந்த விதியின் போக்கை ஒப்புக் கொண்டு சமாதானம் அடைந்திருப்பாளோ!

வர வர நாட்கள் பயங்கரமாகிக் கொண்டு வந்தன. இனிமேல் முழுக்க முழுக்கத் தான் தனிதான் என்று அவளுக்கு அவ்வப்போது தோன்ற ஆரம்பித்து விட்டாலும் அவளுக்கு அதை நிராகரிக்கத் திராணியில்லை. அவள் தன்னை இவ்வெண்ணங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள இலக்கியத்தில் முழுமூச்சுடன் ஈடுபட ஆரம்பித்தாள். அப்போதுதான் அவளுக்கு இந்த மொழிபெயர்ப்பாளர் வேலை கிடைத்தது. பெரிய நிறுவனம். ஜெர்மனியில் உற்பத்தியாகும் பெரிய இயந்திரங்கள் சிலவற்றுக்கான விற்பனை நிலையம். நிறையப் பேரைச் சந்தித்தாள். கைநிறையச் சம்பாதித்தாள். ஆனால் அவள் தன்னையறியாமல் தேடிக் கொண்டேயிருந்தவன் கிடைக்கவேயில்லை.

அந்த நிறுவனத்தில் டெலிஃபோன் ஆப்பரேட்டராயிருந்த மாலினி இவளுடைய சிநேகிதியானாள். பிரிட்டிஷ் கவுன்சிலுக்கும், மாவட்ட நூலகத்துக்கும் ஃபோன் செய்து ஆங்கில நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவைகளைப் பற்றி ஏதேனும் அவ்வப்போது இவள் கேட்பதைக் கவனித்த மாலினி தனக்கிருந்த இயல்பான இலக்கிய ஆர்வத்தில் இவளுக்கு நெருங்கியவ

னாவள். நாட்டின் சேவையும், காதலின் ஆன் போராட்டமாயும் வித்தியாசப்படுத்த மாலினி தெரிந்து வைத்திருந்ததைக் கவனித்துச் சந்திரா முகத்தில் ஆச்சரியப்பட்டாள். பிறகு சந்தோஷப்பட்டாள். இத்தனை நாட்களும் இல்லாத ஓர் ஆறுதல் அவளுக்குக் கிடைக்க ஆரம்பித்தது. தன்னைப் போலவே சிந்திக்கிற இன்னொரு ஆத்மாவைக் கண்டு பிடித்து விட்ட திருப்தி அவளுக்கு உண்டாயிற்று.

கண் தெரியாத மாணவர்கள் பிறர் படிக்கக் கேட்டுப் பயிலுகிறார்கள். ஆகவே கண் தெரியாதவர்களுக்குப் படித்துக் காட்ட என்று பம்பாயில் ஒரு சங்கம் இருக்கிறது. அதை குமாரி அம்ரித் லஹேஜா என்ற ஒரு பெண் நடத்துகிறார். கண் தெரியாதவர்களுக்கு உதவி செய்ய நினைப்பவர்கள் இதில் உறுப்பினர்களாகச் சேருகிறார்கள்.
ஃபெமினா—பாலி

இரண்டு நாட்களுக்குப் பின் மாலினியிடம் சந்திரகாந்துக்கு ஃபோன் செய்து பார்க்கச் சொன்னாள். அவன் பத்திரிகை விஷயமாக வெளியூர் போயிருப்பதாகவும் திரும்பி வர இரண்டு மூன்று நாட்களாகும் என்றும் செய்தி கிடைத்தது. நான்கு நாட்களுக்குப் பிறகு ஃபோன் செய்து பார்த்தபோது அவன் தன் இருக்கையில் இல்லை என்றார்கள். அடுத்த நாள் சந்திரா சொல்லாமலே மாலினி ஃபோன் செய்த போதும் அவன் கிடைக்கவில்லை. இதை அவள் சந்திராவிடம் சொன்ன போது, "உன்னை யார் ஃபோன் செய்யச் சொன்னது?" என்று அவள் எரிந்து விழுந்தாள். மாலினிக்கு ஆச்சரியமாக இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பிறகு சந்திரா அவளிடம், "அவனுக்கு ஃபோன் செய்து பார்த்தாயோ?" என்று கேட்டாள். மாலினி குழப்பத்துடன் பேசாமல் இருந்தாள்.

சந்திராவுக்கு எதைக் கண்டாலும் வெறுப்பாயிருந்தது. திடீரென்று ஒரு நாள் மாலினியிடம், "இன்றைக்குச் சாயங்காலம் டாக்டர் காந்தம்மா வீட்டுக்குப் போகலாம்!" என்றாள். மாலினியின் டாக்டர் வீட்டுக்குக் கிளம்புகையில், "வருவதானால் அவனாக வரட்டும் என்றாயே, இப்போது ஏன் இப்படிப் பறக்கிறாய்?" என்று மாலினி கேட்டாள். சந்திரா கடுப்புடன், "நான் அவனுக்காக ஒன்றும் போகவில்லை. சும்மா டாக்டரைப் பார்க்கத்தான் போகிறேன்!" என்றாள். சில கண இடைவெளிக்குப் பின், "நீ வருவதானால் வா, இல்லாவிட்டால் வேண்டாம்!" என்றாள்.

மாலினி ஆச்சரியத்துடன் சற்றுத் தடுமாறி விட்டு, "நான் வரணுமா, வேண்டாமா?" என்றாள். சந்திரா குரலில் எரிச்சலுடன், "இது என்ன புதுக் கேள்வி?" என்றாள். மாலினி மெதுவாக, "நீதானே புதுசாய்க் கேட்டாய்?" என்றதும் சந்திரா சலிப்புடன், "என்னவோ தெரியலை! நீ தான் இப்ப மாறி விட்டாய்!" என்று முனகினாள். பிறகு இருவரும் பேசாமலேயே டாக்டர் வீட்டை நோக்கி நடந்தனர்.

அங்கே அவனும் வந்திருப்பானோ என்று இருவருமே தத்தம் போக்கில் எதிர்பார்த்தார்கள். அவன் இல்லை. டாக்டர் அவர்களை வரவேற்றாள். கொஞ்ச நேரம் வேறு ஏதோ பேசிக் கொண்டிருந்துவிட்டு, "அவனுக்கு இருபத்தேழு வயசுதான் ஆகிறது. நீ அவனை விடப் பெரியவள் என்று சொன்னாயாமே?" என்று கேட்டாள். சந்திரா சற்றுக் கரகரத்த குரலில், "எனக்கு முப்பது" என்றாள்.

டாக்டர் சிறிது யோசனைக்குப்பின் மெல்லிய குரலில், "மேல்நாட்டில் எல்லாம் இது நடக்கிறது. ஆனால் இங்கே எல்லா விஷயங்களையும் யோசித்துப் பார்க்கையில் இது நமக்கு ஒத்துக் கொள்ளாதென்று எனக்குப் படுகிறது" என்றாள். சந்திரா மெதுவாகச் சிரித்து, "யாரைக் கேட்டாலும் அப்படித்தான் சொல்லுவார்கள்! யார் இங்கே இதற்கு ஒத்துக் கொள்வார்கள்?" என்றாள். டாக்டர் அவளைக் கூர்ந்து கவனித்தாள்.

பிறகு, "உங்களுக்கு ஒருவரையொருவர் ரொம்பவும் பிடித்துப் போய்விட்டதா?" என்றாள்.

சந்திரா அவளை நேராகப் பார்க்காமல், "அப்படி ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது. இதுவும் ஒரு சந்திப்பு. எங்கள் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி. அவ்வளவுதான். ஒருவரையொருவர் எந்தவிதப் பட்சமும் இல்லாமல் தெரிந்து கொள்ள முயற்சி செய்தோம்" என்றாள். தொடர்ந்து, "அவர் என்ன சொன்னார்?" என்று கேட்டாள்.

"அவனும் இறுதியாக ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் பேசியதையெல்லாம் அப்படியே சொன்னான். அவனுடைய முடிவு என்னவென்று கண்டு பிடிக்க முடியவில்லை" என்று கூறிய டாக்டர், புன்முறுவலுடன், "வேடிக்கை சுவாரஸ்யமாக இருந்தது!" என்றாள். மாலினி சிரித்துக் கொண்டு, "இரண்டு அறிவாளிகளின் இடையில் மாட்டிக் கொண்டு நான்தான் விழித்தேன்" என்றாள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு சந்திரா அவனை போனில் பிடித்து விட்டாள். "நீங்கள் ஃபோன் செய்யக் கூடாதா?" என்று அவள் கேட்டதற்கு சந்திரகாந்த், "நேரமேயில்லை" என்றான். "சௌக்கியம்தானே?" என்றதோடு பேச்சு முடிந்து விடுமோ என்று அவள் பயந்தாள். "என்ன விசேஷம், என்ன விசேஷம்?" என்று இரண்டு மூன்று முறைகள் கேட்டாள். அவன், "ஒன்றுமில்லை!" என்று பதில் சொன்னான். அவள் வார்த்தைகளைத் தேடி, "புதிதாக ஏதேனும் புத்தகம் படித்தீர்களா?" என்று கேட்டாள். அவன், "ஹெமிங்வேயின் எழுத்து முழுவதிலுமிருந்து கொஞ்சம் கொஞ்சம் மாதிரி சேர்த்து ஒரு புத்தகம் வந்திருக்கிறது. அதைப் படித்தேன்" என்றான். அவள், "புத்தகம் எப்படி?" என்று கேட்டதற்கு, "அதைப் பற்றி நான் எழுதிய விமரிசனம் இந்த

ஹாரம் வெளியாகிறது!'' என்றான். ''எனக்கு அந்தப் புத்தகம் வேண்டுமே!'' என்று அவள் கூறியதும், அவன், ''அடுத்த முறை பார்க்கையில் தருகிறேன்!'' என்றான். அவள், ''அடுத்த முறை எப்போது, எங்கே?'' என்று கேட்டாள். குரலில் படபடப்பைக் காட்டி விட்டோமோ என்று சந்தேகப்பட்டாள். அவன், ''அதைப் பற்றி நானே உங்களுக்கு ஃபோன் பண்ணுகிறேன்!'' என்றான். மேலே என்ன பேசுவதென்று தெரியாமல் இருவரும் தயங்கி ஒருவருக்கொருவர் வந்தனம் கூறிக் கொண்டு சம்பாஷணையை முடித்துக் கொண்டார்கள்.

அப்புறம் இரண்டொரு இலக்கியக் கூட்டங்களில் சந்தித்தபோது, 'ஹலோ, ஹலோ' வுடன் பேச்சு முடிந்தது. அவனுடன் எப்போதும் யாராவது இருந்தார்கள். சில கூட்டங்களில் அவனைக் காணாமல் அவள் தேடினாள்.

அந்தச் சமயத்தில் ஒரு நாள் மாலினி தன் பெற்றோர் தனக்குத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைக் கூறியதும் சந்திரா ரொம்பச் சந்தோஷத்துடன் அவளைத் தழுவிக் கொண்டு, 'வெரி குட், வெரி குட்' என்றாள். பையன் மின்சார வாரியத்தில் வேலை பார்ப்பதையும் அடுத்த ஞாயிற்றுக் கிழமை அவனைப் பொது நண்பர் ஒருவர் வீட்டில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதையும் மாலினி சொன்னாள். சந்திரா உவகை பொங்க, 'கிரேட் நியூஸ்' என்று கத்தி அவளை ஹோட்டலுக்கு அழைத்துப் போய் ஸ்வீட் வாங்கித் தன் வாயில் போடச் சொல்லி அமர்க்களப்படுத்தினாள்.

ஞாயிற்றுக்கிழமை மாலினியின் கட்டாயத்துக்குக் கட்டுப்பட்டுச் சந்திராவும் அவளுடன் போனாள். அவளுக்கும் உள்ளூற ஆசைதான். மாலினியாகக் கூப்பிடுகிறாளோ என்று பார்த்துக் கொண்டிருந்தாள். கூப்பிடாமலிருந்து விடுவாளோ என்று இலேசான சந்தேகம்கூட அவளுக்கு ஓரிரு கணங்கள் உண்டாயிற்று. மாலினியின் வீட்டாரோடு ஒருத்தியாக அவளும் போனாள். ஜெயராமன் பார்க்க நல்ல கம்பீரமாக, சிவப்பாக இருந்தான். கொஞ்சம் கூச்சப்படுகிறவனாகக் காணப்பட்டான். புத்திசாலித்தனமாக ஒன்றும் பேசிவிடவில்லை. ஆனால் மாலினிக்குத் தன்னைப் போல் நடவாத ஆசைகள் எதுவுமில்லை என்று நினைத்துப் பார்த்துக் கொண்டாள் சந்திரா. ஜெயராமன் மிருதுவான குரலில் பேசினான். நல்ல நளினமான குணமுடையவன் என்று தோன்றியது.

பிறகு தனிமையில் மாலினி சந்திராவின் அபிப்பிராயத்தைக் கேட்டாள். சந்திரா ''என்னுடைய அபிப்பிராயம் எதற்கு?'' என்று கேட்டுச் சிரித்தாள். ''இல்லை, உன்னுடைய இம்ப்ரெஷனைச் சொல்லேன்!'' என்று வற்புறுத்தினாள் மாலினி. சந்திரா ஆழமான குரலில் சொன்னாள்: ''பாரு! உனக்கு அவனைப் பிடித்திருந்து, நானும் நல்ல அபிப்பிராயம் சொன்னால் உனக்குச் சந்தோஷம், பெருமை. உனக்கு அவனைப் பிடித்திருந்து, நான் நல்ல அபிப்பிராயம் சொல்லா விட்டால் உனக்குக் குழப்பம், வருத்தம். உனக்கு அவனைப் பிடிக்காமல் நான் நல்ல அபிப்பிராயம் சொன்னால் உனக்குச் சந்தேகம், பரிதவிப்பு. உனக்கு அவனைப் பிடிக்காமல், நானும் நல்ல அபிப்பிராயம் சொல்ல விட்டால் உனக்குத் திருப்தி, துணை. ஆனால் எப்படிப் பார்த்தாலும் உன்னுடைய அபிப்பிராயம்தான் முடிவு, முக்கியம். நான் என்னத்தைச் சொல்ல?''

மாலினி, ''உன்னைக் கேட்டது தப்பு!'' என்று கூறிவிட்டுக் கன்னத்தில் போட்டுக் கொண்டாள். சந்திரா மெதுவாகச் சிரித்துக் கொண்டாள்.

''உனக்கு அவனை ரொம்பப் பிடித்து விட்டது என்று தெரிகிறது... இல்லையா? நானும் உன் அபிப்பிராயத்தை உறுதி செய்ய வேண்டும் என்று நீ உள்ளூற விரும்புகிறாய், அப்படித்தானே?'' என்று இளநகையுடன் கேட்டாள் சந்திரா. மாலினி இனந் தெரியாத கடுகடுப்புடன், ''நான்தான் உன்னிடம் கேட்டது தப்பு என்று சொல்லியாயிற்றே, இன்னும் எதற்கு?'' என்றாள். சந்திரா மெதுவாக அவளை அணைத்துக் கொண்டு, ''கோ அஹெட்! விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்!'' என்றாள்.

நாட்கள் நகரநகரச் சந்திரா சந்திரகாந்திடமிருந்து எந்த விதமான செய்தியையும் எதிர்பார்ப்பதை நிறுத்தினாள். ஹெமிங்வேயின் தொகுப்பைப் பற்றியும் மறந்து போனாள். ஒய். எம். சி. ஏ.யில் நடந்த ஒரு கூட்டத்தில் சந்தித்தபோது அவன், ''என்ன, உங்கள் கம்பெனி ஃபோன் விடாமல் என் கேஜ்டு ஆகவே இருக்கிறதே!'' என்றான். அவள் சற்றுப் படபடப்புடன், ''என்ன விஷயம்?'' என்றாள். அவன், ''ஒன்றுமில்லை. திடீரென்று ஒரு நாள் தோன்றிற்று. ஃபோன் செய்து பார்த்தேன். கிடைக்கவில்லை. தொடர்ந்து ஒரு மணி நேரம் முயற்சி செய்து பார்த்தேன். கிடைக்கவேயில்லை!'' என்றான். அவள் வெறுமனைச் சிரித்தாள். அவன் நிஜம் சொல்கிறானா, பொய் சொல்கிறானா என்பதை அவளால் நிர்ணயிக்க முடியவில்லை. 'அதைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?' என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

மாலினியின் திருமணம் நிச்சயமாகிற தருவாயில் இருந்தது. ''நீ இன்னும் எத்தனை நாட்கள் இப்படியே இருக்கப் போகிறாய்?'' என்று அவள் சந்திராவைக் கேட்டாள். சந்திரா சிரித்துக்கொண்டே, ''ஆயிற்று. இந்திய மனிதனின் சராசரி வயதில் பாதிக்கு மேல் ஆயிற்றே. இன்னும் கொஞ்சம் வருஷங்கள் தான்!'' என்றாள். மாலினி கலக்கத்துடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். சந்திரா தலையைக் குனிந்தவாறே, ''சரிதான் போடி. கல்யாணம் செய்து கொள்ளாமல் ஒரு பெண் பிள்ளையால் வாழ முடியாதோ? அதையும்தான் பார்த்து விடுவோமே!'' என்றாள்.

மாலினி மெதுவான குரலில் சொன்னாள்: ''அவர்கூடக் கேட்டார்.'' இதை அவள் சொன்னதும் சந்திரா வெட்டுண்டாற்போல் அவளை நிமிர்ந்து பார்த்தாள். சந்தேகமான நிலையில் ஊகித்து விட்டிருந்தாலும், அவள்

பார்வையில், 'யார்?' என்ற கேள்வி வழிந்தது. மாலினி மெல்ல, ''மிஸ்டர் ஜெயராமன்'' என்றாள். சந்திரா சற்று வெறித்துவிட்டு, உணர்ச்சியற்ற குரலில் ''என்னிடம் சொல்லவேயில்லையே?'' என்றாள்.

பிறகு மாலினியை ஊடுருவி நோக்கியவாறு, கனமான குரலில், ''அடிக்கடி தனியாகச் சந்தித்துக் கொள்ள ஆரம்பித்தாயிற்றா?'' என்றாள். மாலினி குனிந்த தலையுடன், ''அதெல்லாமில்லை. பிற்பாடு ஒரு தடவை பார்த்தேன். உன்னிடம் சொல்லச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. உன்னைப் பற்றி ரொம்பக் கேட்டார்!'' என்றாள்.

சந்திரா பொருத்தமில்லாமல் பெரிதாகச் சிரித்தாள். பிறகு சிரிப்பை நிறுத்திவிட்டு, ''அந்தக் கிழவி யாரென்றுகேட்டாராக்கும்?'' என்றாள். மறுபடியும் சிரித்தாள். மாலினி அவளை ஒரு கணம் கூர்ந்து நோக்கி விட்டு ''என்ன இது: பைத்தியம் மாதிரி?'' என்றாள். சந்திரா திடீரென்று மிகவும் சீரியஸானாள். சில கணங்களுக்குப் பின் முகத்தைத் தளர்த்திக்கொண்டு சுவாரசியமாக ''ம், சொல்லு! என்னவெல்லாம் பேசினீர்கள்?'' என்று கேட்டாள். மாலினி, சிதறிய குரலில், ''ஒன்றுமில்லை. அவர்தான் திடீரென்று ஒரு நாள் ஃபோன் பண்ணி, 'சந்திக்க முடியுமா?' என்று கேட்டார். 'சரி' என்று போனேன். பீச்சுக்குப் போனோம். அவரைப் பற்றி நிறையச் சொன்னார்'' என்று கூறி நிறுத்தி விட்டு, சற்றுத் தயக்கத்துடன், ''ப்ளெஸன்ட் பெர்ஸனாலிடி'' என்றாள். சந்திரா அவளையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, கனமான குரலில், ''தீனபன்'' என்றாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அவளே எதிர்பாராமல் ஒரு ஹோட்டலில் ஜெயராமனைப் பார்த்தாள் சந்திரா. அவன் தனியாக ஒரு மூலையில் பேப்பர் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். முதலில் வேறு எங்கேயாவது போய் உட்காரலாமா என்று நினைத்தாள். பிறகு அவனை நோக்கிப் போனாள். அவள் அவனருகே போய் நின்றதும் அவன் நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய முகத்தில் பரிச்சயத்தின் புன்னகை அரும்பிற்று. அவள், ''ஹலோ!'' என்று கூறி, ''உங்களை நான் தொந்தரவு செய்கிறேனா?'' என்று கேட்டவாறே ஒரு நாற்காலியை இழுத்துக் கொண்டு அமர்ந்தாள். அவன் பேப்பரை மடித்துக்கொண்டே, ''சே! சே! அதெல்லாம் ஒன்றுமில்லை!'' என்றான்.

சந்திரா தன்னுடைய கைப் பையிலிருந்து பவுடர் அப்பியிருந்த கர்சீஃபை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டே, ''இங்கே நீங்கள் அடிக்கடி வருவதுண்டா? நான் பார்த்ததேயில்லையே!'' என்றாள். அவன், ''அதெல்லாம் இல்லை! இங்கே இன்றைக்கு ஆறரை மணிக்கு ஒரு பார்ட்டி இருக்கிறது. வீட்டுக்குப் போய் விட்டு வருவதற்குப் பதிலாக ஆஃபீஸிலிருந்து நேரடியாக வந்து விட்டேன்! இப்போதே ஆறு மணியாகிவிட்டதே!'' என்றான்.

சர்வர் வந்து ஆர்டருக்காகக் காத்து நின்றான். ஜெயராமன் சந்திராவிடம், ''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டான். அவள்

பூட்டோவின் மகள் பெனசிர் அமெரிக்காவில் படித்தாலும், தம் சொந்த ஊரான லர்க்கானாவில் வெளியே செல்லும்போது பர்தா அணிந்துதான் செல்லுவாராம்!

ஃபெமீனா—பாமி

''காப்பி மட்டும் போதும் எனக்கு! நீங்கள் ஏதேனும் சாப்பிடுங்கள்!'' என்றதும், அவன் சர்வரிடம், ''இரண்டு காப்பி!'' என்றான். பிறகு கொஞ்ச நேரம் இருவரும் பேசாமல் இருந்தார்கள்.

அவள் ஏதோ கேட்க வாயெடுத்த அதே சமயத்தில் அவனும், ''மாலினி சதா உங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாள்!'' என்று இளஞ் சிரிப்புடன் சொன்னான். அவள் எதுவும் பேசாமல் உதடுகள் இலேசாகப் பிரியச் சிரித்தாள். சர்வர் கொண்டு வந்து வைத்த காப்பியை இருவரும் எடுத்துக்கொண்டார்கள். ஒரு வாய் குடித்து விட்டு, சந்திரா மெல்லிய குரலில், ''நீங்கள் ரொம்ப அதிருஷ்டசாலி!'' என்றாள். அவன் பேசாமல் இருந்தான்.

சந்திரா அவனை ஒரு முறை நிட்சண்யத்துடன் நோக்கிவிட்டு, ''மாலினி ரொம்ப அப்பாவி. குழந்தை மாதிரி. ரொம்ப இளகின சுபாவம்'' என்றாள். பிறகு ''எதையும் அவளுக்கு மூடி மறைக்கவே தெரியாது!'' என்று கூறி நிறுத்தினாள். சிறிது தயக்கத்துக்குப் பின், அவனைக் கூர்ந்து நோக்கியவாறு, ''அந்தச் சந்திரகாந்தைப் பற்றிக்கூடச் சொல்லியிருப்பாளே!'' என்றாள். அவன், ''எந்த சந்திரகாந்த்?'' என்று கேட்டான்.

அவள் கசந்த குரலில், ''அதுதான், 'மாடர்ன் லிட்டரேச்ச'ரில் துணை ஆசிரியராக இருக்கிறாரே!'' என்றாள். ஜெயராமன் யோசிப்பதைக் கவனியாத மாதிரி சந்திரா தொடர்ந்து சொன்னாள்: ''பாவம், அவருடைய கஷ்டங்களைக் கேட்டு மாலினி ரொம்பக் கலங்கிப் போய்விட்டாள். அவளுக்கு இன்னொருவர் கஷ்டம் கேட்கக் கூடப் பொறுக்காது!''

ஜெயராமன் காப்பியைக் குடித்தவாறே அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் ஒரு முறை தொண்டையைச் செருமிக் கொண்டாள். பிறகு சொன்னாள்:

''மாலினி அந்தச் சந்திரகாந்தைக் கல்யாணம் செய்து கொண்டு அவருடைய மனக் கஷ்டங்களையெல்லாம் தீர்க்க வேண்டும் என்று ரொம்ப ஆசைப்பட்டாள். ஆனாலும், அப்பா, அம்மாவின் விருப்பத்துக்கு எதிராக நடக்க அவளுக்கு இஷ்டமில்லை. உங்களைப் பார்க்கச் சம்மதித்தாள்.''

ஜெயராமன் பாதி குடித்திருந்த காப்பிக் கோப்பையை மேஜையின் மீது வைத்துவிட்டு அவளைக் கூர்ந்து நோக்கினான். சந்திரா நிதானமாகக் காப்பி குடித்துக் கொண்டிருந்தாள்.

இனி இந்த மில்கள் மட்டுமே 'டெரீன்' கொண்ட தனிப்பட்ட துணிவகைகளை உங்களுக்கு வழங்கும்.

தரத்தைப் பற்றிய கே.:பியின் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும், தமது துறையில் முன்னோடிகளாகவும்; புதுப்பாணிகளைப் புகுத்துபவைகளாகவும் திகழும் இந்த மில்கள், கெமிகல்ஸ் அண்ட் :.பைபர்ஸ் ஆ:.ப் இந்தியா (கே.:பி) லிமிடெட்டினால் அங்கீகரிக்கப் பெற்ற துணிவகைகளில் ''டெரீன்'' என்னும் வியாபாரச் சின்னத்தை உபயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

'டெரீன்'—எதிலும் முதன்மையானது.

நாகரிகத்தில் முதன்மையானது—

'டெரீன்' பாணிகளைப் பின்பற்றுவதில்லை. 'டெரீன்' புதுப்பாணிகளைப் புகுத்துகிறது. எனவே வண்ணச்சிறப்பிலும், டிசைன்களிலும் அதிநவீனமானவை வேண்டுமென்றால் அவற்றை நீங்கள் 'டெரீனில்' காணலாம்.

தரத்தில் முதன்மையானது

'டெரீன்' விஷயத்தில் தரத்தைப் பற்றிய சந்தேகத்திற்கே இடமில்லை. 'டெரீன்' வாங்கும் ஒவ்வொரு முறையும் நீங்கள் பெறுவது தலைசிறந்த துணிவகையே. 'டெரீன்' நீடித்து உழைக்கிறது. மடிப்பு விழாத் தன்மை உடையது. எப்பொழுதும் எடுப்பாகத் திகழ்கிறது. இப்பண்புகளையெல்லாம் உறுதி செய்வதற்கென 'டெரீன்' பரிசீலிக்கப்படுகிறது.

'டெரீன்' எப்பொழுதும் முன்னணியில்!

'டெரீன்' எப்பொழுதும் முன்னணியிலேயே இருக்கிறது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அதிநவீன துணிவகை ஆராய்ச்சி மற்றும் துணித்தயாரிப்பில் புதுமைகளின் பயன்களை ''டெரீன்'' உங்களுக்கு வழங்குகிறது. 100% 'டெரீன்' புடவை போன்ற 'முதன்மையான' துணிவகைகளை நினைத்துப் பாருங்கள்.

முதன்மையானவர்களோடு இணைந்து முன்னேறுங்கள்

தமது துறையில் முதன்மையானவர்களாகவும், முன்னோடிகளாகவும் திகழும், 'டெரீன்' தயாரிப்பாளர்களான (கே.:பி) கெமிகல்ஸ் அண்ட் :.பைபர்ஸ் ஆ:.ப் இந்தியா லிமிடெட், இந்த முதன்மையான மில்களோடு இணைந்து அதிநவீனமான, தலைசிறந்த துணிவகைகளை உங்களுக்கு வழங்குகின்றனர். தமது இணைந்த அனுபவம், தரத்தைப் பற்றிய ஆணித்தரமான கருத்துக்கள் மற்றும் துணித் தயாரிப்புத்துறையிலும் நாகரிகத்திலும் முதன்மையானவர்களாகத் திகழக் காரணமான புரட்சிகரமான புதுக் கருத்துக்கள் ஆகியவற்றின் பயன்களை உங்களுக்கு அளிக்கின்றனர்.

குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த மில்கள் மட்டுமே 'டெரீன்' டிரேட் மார்க்கை உபயோகிக்க அனுமதிக்கப் பட்டுள்ளன.

TERENE

'டெரீன்' சிறந்த மில்களுடன்— சிறந்த துணிவகைகள் மீது.

'டெரீன்' என்பது இந்த இழையின் உற்பத்தியாளர்களான கெமிகல்ஸ் அண்ட் :.பைபர்ஸ் ஆ:.ப் இந்தியா லிமிடெட்டின் ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க் ஆகும்.



சாகத் துணிந்தவளுக்குச் சாகத் தெரியாதவர்களின் அசைவு.

எதற்காகச் சாக வேண்டும் என்று கேட்டீர் கேட்பீர்கள். எதற்காக வாழ வேண்டும் என்று திருப்பிக் கேட்டு விடுவேன். உங்களால் பதில் சொல்ல முடியாது.

நான் சாகத் துணிந்து விட்டேன். அதற்கான காரணத்தை வெளியே சொல்லாமல் போய் விடுவதில் தான் என் சாமர்த்தியமே அடங்கியிருக்கிறது. என்னை அமைதியாகப் போக விடுங்கள். தூக்கம் வராமல் நான் அவதிப்பட்ட நாட்களில் எல்லாம் எனக்குத் துணை வராத தூக்க மாத்திரைகள் இன்று நான் எனக்குத் தொண்டு செய்யக் காத்திருக்கின்றன.

என் மரணத்தைக் கைக்குள் அடக்கி வைத்திருக்கிறேன்.

இன்னும் சில நிமிஷங்களில் உலகத்தோடு எனக்குள்ள பந்தம் பட்டென்று அறுந்துவிடும்.

"டிரிங்.... டிரிங்...."

அந்தச் சனியனை யாராவது எடுங்களேன்.

"டிரிங்... டிரிங்...."

என்னைத் தவிர யாருமே இல்லையோ இந்த வீட்டில். நான் தனி நபர் என்ற பயங்கரம் எந்த நோக்கில் என்னைத் தாக்குகிறது....!

"டிரிங்... டிரிங்..."

போனே... அலறுதே... வருகிறேன்.... சாவின் நேரத்தில்கூட எனக்கேன் இந்த விட்டுப் போகுமா....?

"டிரிங்.... டிர் —"

"ஹலோ !"

"— ராதாவா ?"

டெலிபோனில் கிணைப்பு. என் இதயம் அதிர்கிறது. எவன் காரணமாக நான் மரணத்தைத் தழுவத் துணிந்தேனோ, அவனே என்னை அழைக்கிறான்...... மரணத்திலிருந்து என்னை மீட்கவோ.... நோ... நோ.... கூடாது....

போகாதே... அவனோடு போகாதே... உன் வாழ்க்கையைச் சூறையாடிய உன் மைத்துனன் அவனே.... உன் நிம்மதியைக் கொன்றவன். இன்னும் சற்று நேரத்தில் உன்னையே கொல்லக் காத்திருப்பவன். அவனுக்குக் குரலிலே கூட விஷம் இருக்கும்! எமனோடு பேசு. நீ அவனோடு பேசாதே...

ராதா.....! ஒரே ஒரு தடவை அவன் பேச்சை நீ மறுக்கத் தயங்கியதால், அவன் கூற்றை ஆமோதிக்கும்படியாக மௌனம்



மூன்றாவது டெலிபோன் கால்

எம்.எஸ். பெருமாள்

தாக்குதல் தன் நிம்மதி யைக் காவு கொடுக்கிறக் கிறாய். மேல் உச்சியிலிருந்து சரோஜினைச் சரிந்து கட வாரக்கில் ஏற்றிக் கொண் டிருக்கிறாய்.....அவன் நினைவே வேண்டாம் என்னும்போது அவன் தொடர்பு மட்டும் ஏன்.....! பேசாதே.....

"ஹலோ.... ஹலோ.... மன்னி....."

"மன்னி! எங்கேயிருந்தப்பா அந்த மரியாதையைக் கற்றுக் கொண்டாய்?"

"என்னை மன்னித்துவிடு. மன்னி..... நான் முக்கியமான விஷயமாக—"

"எனக்கு எதுவுமே முக்கிய மில்லே. என் மரணத்தைத் தவிர......"

டக்—

ரிசீவரை நான் வைத்துவிட்டேன். அவன் அலறிக் கொண்டேதான் இருக்க வேண்டும். இருக்கட்டும்.

போதும்......

நிலைதடுமாறிக் கிடந்தவனைத் தெளிவிக்க நடத்திய நாடகத்துக்கு நான்தானே பலி யாகிக் கிடக்கிறேன்.....

கணேஷ்! என்னைப் பார்க்க வராதே.... என்னோடு பேச வராதே.... என்னை நினைக் கவே நினைக்காதே......

நீ நினைத்தால்கூட என் மீது நெருப்பாகப் படர்கிறது.... உன் நினைவோ என் நெஞ்சை எரிக்கிறது....

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை யைக் கேட்டிருக்கிறேன். என் கதையில் புறப் பட்ட பூதம் நான் வெட்டிய கிணற்றுக்குள் ளேயே என்னைத் தள்ளிவிட்டு என் கணவ ருடன் கைகுலுக்கிக் கொண்டு நிற்கிறது....

போன வருடம் —

தஞ்சாவூரில் என் தம்பிக்குக் கல்யாணம்.

எல்லோரும் திரும்பியபோது என் கணவ ருடன் நான் புறப்படவில்லை.

"ஒரு வாரம் கழித்து வருகிறேன்."

"தனியாகவா வருவாய்?"

"கல்யாண சீசன். ரயிலில் கூட்டத்துக்குப் பஞ்சமில்லே. நான் ஒன்றும் 'தனி' இல்லே!"

"உன் இஷ்டம்."

அவர் மட்டும் புறப்பட்டுப் போனார்.

ஒரு வாரத்தில் நான் புறப்படும் நேரம்.

கணேஷ் — என் முரட்டுக் காளை மைத்து னன் — சொல்லி வைத்தாற்போல் வந்து சேர்ந்தான்.

"ஆபீஸ் வேலையாக வந்தேன். போக லாமா?"

புறப்பட்டோம்.

மைத்துனன் மகனைப் போல்! எனக்கு மகன் இல்லே. இதுவரை எனக்கில்லே. இனி என்றுமே இல்லே என்பதும் தெரியும். எனக்கு மைத்துனனே மகன்.

வயது பேதம்?

தாய்மைக்கு அந்தப் பேதமில்லே.

ரயிலில் —

மூன்றாம் வகுப்பு.... லேடீஸ் கம்பார்ட் மெண்ட்......

நீல விளக்கு எரியத் தொடங்கிய நேரம்.

" நாராய்!"

குரலினிமை என்னைக் கவர்ந்தது. திரும்பிப் பார்த்தேன். கணேஷ்? நிலை மீறித் தவன் போல் திகைக்கிறான். சலிப்பை.... தவிப்பை நான் உணர்ந்துவிடுவேனோ என்பதற்காக மூடி ம றை க் க த் துடிக்கும் சாமர்த்திய நாடகம்.

விடை: ஆறு தவறுகள்!

1. இடுப்பு வெட்டி வைத்த ஒளிந்து கொண்ட கதவிற்குப் பின்னால் நின்றவன் தடுக்கி விழுந்தவன் அப்படி எப்படி இருக்கும்? மழை பெய்த தரையாயிற்றே?

2. பணத்தைப் போட்டதோ சட்டைப் பையில். துழாவியதோ பாண்ட் பாக்கெட்டை!

3. லலிதா கொடுத்ததோ முக்கால் ரூபாய். அவன் விழுந்த இடத்தில் ரூபாய் நோட்டு போயிருக்குமோ என்று கவலைப்படுகிறானே?

4. தேங்காய் வாங்க மறுபடியும் பதை பதைக்கிற வெய்யிலில் போவது கஷ்டம் என்று நினைக்கிறானே? கதையின்படி மாலை மணி ஆறு அடித்து விட்டதே!

5. நாளை வெள்ளி என்றும் இன்று வியாழக் கிழமைதானே? செவ்வாய் விடுமுறை என்று நினைக்கிறானும்.

6. காயம் பட்டதோ இடது கையில். பிரசாதம் வாங்கிச் சாப்பிட இயலாமல் கலங்குகிறானும்! வலது கைக்கு என்ன வந்தது?

- ரமணி ரங்கநாதன்

அறிமுகப்படுத்தி வைக்கக் கூடிய அளவுக்கு அவன் அப்படி ஒன்றும் கௌரவமானவன் அல்ல போலும்.

அவன் விடவில்லை.

உரிமையோடு கணேஷின் பக்கத்தில் வந்து உட்கார கணேஷ் துள்ளி எழுந்து என் அருகே வந்து நிற்க —

"துஷ்யந்தரே !"

சொல்லில் சாட்டைச் சொடுக்கு. "மறந்து விட்டீர்களா?" என்பதைக் கேட்கிற இலக்கிய நயம்.

கணேஷின் குணமும் தெரியும். அதைவிட வயதைப் பற்றி நன்றாகவே தெரியும்..... 'இந்த ஊருக்கு இவள்' என்ற உரிமையோ, என்னவோ....... !

"நிம்மி, மீட் மை....."

".....ஒய்ஃப் !"

— நிம்மியின் வார்த்தையில் கேள்வி–கேலி இரண்டும். ஒரு கணத்தில் கணேஷின் முகத்தில் பளிச்சென்ற தெளிவு.

"யெஸ்... மை ஒய்ஃப் ராதா.....!"

"மிஸஸ் ராதா கணேஷ்" என்று அழுத்தமாகக் கூறிவிட்டு என்னோடு கைகுலுக்கினள் நிம்மி.

"ஆழ்ந்த அனுதாபங்கள்."

தோளைக் குலுக்கிக் கொண்டு புறப்பட்டு விட்டாள் நிம்மி.

கணேஷின் கண்கள் பனிக்கின்றன.

அவன் பார்வை என் பாதங்களில் பதிகின்றதை நானும் உணர்கிறேன். இந்தப் பாவ மன்னிப்பில் அவன் செயல்களின் பாவங்கள் கரைந்து மறைந்து விடுகின்றன....

அவனை நான் புரிந்து கொண்டுவிட்டேன்.

ஆத்திரமில்லை; அனுதாபப்படுகிறேன்,

"கல்யாணமானவன் என்று தெரிந்ததும் அவள் விலகிச் சென்று விட்டாளே!"

"விலகுவாள் என்று தெரியும். என்றுமே முதல் நபராக இருக்கத் தான் அவளுக்குப் பிடிக்கும்! அதைத் தெரிந்துதான் ஒரு பொய்யை...."

பொய்யினால் விளைந்த நன்மையைச் சொல்லிப் போராடிக்கவில்லை. பொய்யினால் எழுந்த பூகம்பம்?

என் போதாத நேரம். நிம்மிக்குச் சென்னையில் என் கணவரின் கம்பெனியில் பர்ஸனல் அஸிஸ்டெண்ட் வேலை !

அறிமுகம்.

இரண்டாவது முறையாக !

"மீட் நிம்மி.... மிட்—"

"மிஸஸ் ராதா கணேஷ்!"

அதன் பிறகு நடந்தவை உங்கள் ஊகத்துக்கும் கற்பனைக்கும் ஒத்துவரக் கூடியவைதான். அந்தக் கணம் முதல் எரிமலையின் அடிவாரம் என் குடியிருப்பு.

நிம்மி....! நீ யாரைப் பழி வாங்குவதாக நினைத்து யாரைப் பாழடித்து விட்டாய்....

கணேஷின் கதறல்கள்.... காரண விளக்கங்கள் எதுவும் அவர் காதில் ஏறவில்லை. காது இரண்டும் கற்கள். இதயம் இரும்புக் கோட்டை.

என் ஒவ்வோர் அசைவுக்கும் கணேஷின் ஒவ்வொரு பரிவுக்கும் ஓராயிரம் அர்த்தங்கள். காரணம் பின்னல்கள். கணேஷின் இளமை என்னுடைய இயல்பான பேச்சு இரண்டையும் ஊடும் பாவுமாக்கி என் கணவர் நெய்து வைத்திருக்கும் சந்தேகச் சரிகை !

"பத்து நாட்கள் கழித்து வருகிறேன் என்று என்னை அனுப்பிவிட்டு என் தம்பியுடன் உல்லாசப் பயணம் வந்தவள்தானே?"

"முதல் வகுப்பில் 'கூப்பே' கிடைக்கவில்லையோ?"

இந்தக் கேள்விக்குள் எத்தனையோ அடக்கம்.

"மைத்துனன் மகனுக்குச் சமம். அவனோடு....? சீசீ !"

"இந்தத் துரோக புத்தி உனக்கு இருப்பதால்தான் உனக்கு வயிறு திறக்க வழியே இல்லை......"

அடுத்த வார்த்தை என் காதில் விழவில்லை. நான் மூர்ச்சையுற்றுக் கிடந்தேனும்:

கணேஷ் அன்று போனவன்தான்.

என் மானம், என் கௌரவம், என் நிம்மதி எல்லாம் அவன் காலில் தூசுகளாக ஒட்டிக் கொண்டு போய்விட்டன.

மனைவியின் கற்பு கணவனின் நெஞ்சுக்குத் தான் தெரிய வேண்டும். கண்ணைக் கட்டிக் கொண்டிருக்க முடியாது. அவரோ நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு கண்களை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கிறார். வழக்கு மன்றம் ஏறி வாதாடி நெருப்பாய்ச் சீறித்தான் என் கற்பை நிலைநாட்ட முடியுமா ? நிம்மதியான சாவினால்கூட நிலைநாட்ட முடியும்.

களங்கத்தை மறைக்கத்தான் இறந்தாள் என்ற கதை பிறக்கும். ஆனால் காலம் அவருக்கு உண்மையை உணர்த்தும். அவரைப் பற்றி எனக்குத் தெரியும். அவர் தனிமையைத் தாங்க மாட்டார். தனிமையில் — முதுமைத் தவத்தில் — அந்த வதைப்பில் அவர் நெஞ்சிலே எரியும் நெருப்புக்குள் நான் நிற்பேன். அந்த அக்கினிப் பிரவேசத்துக்குப் பிறகு என் தாய்மை அவர் கண்களுக்குத் துல்லியமாகத் தெரியும். அதனாலேயே நான் சீக்கிரம் சாகத் துணிந்துவிட்டேன்.

ஓ! என் சாவின் காரணம் வெளியே தெரியக் கூடாது என்று நினைத்திருந்தேனே... கணேஷ்.... நீ சொல்லத் தூண்டிவிட்டாய்... சொல்ல வைத்து விட்டாய்....

"ட்ரிங்.... ட்ரிங்...."

"ட்ரிங்.... ட்ரிங்...."

பிசாசே.... ஓலமிடாதே!

"ட்ரிங்.... ட்ரிங்....!"

இந்த ஆறு மாதங்களாக அவருக்குத்தான் டெலிபோன் கால்கள் ஆபீஸிலிருந்தோ அல்லது பழைய நண்பர்களிடமிருந்தோ —

"ட்ரிங்... ட்ரிங்...."

நாலு நாட்களாக அவரை 'கிளப்'பில் பார்க்கவில்லையே........

எல்லா லீவையும் 'என்காஷ்' பண்ணி விட்டாராமே....

"ட்ரிங்.... ட்ரிங்...."

எப்போ வருவார் தெரியுமா?

சீமைக்குப் போயிருக்கிறாரோ... நீங்கள் ஏன் போகவில்லை.....?

ஆறு மாதங்களாகப் பதில் சொல்லிச் சொல்லி அலுத்தே போய்விட்டது. இந்தக் 'கா'லும் அவருக்குத்தான் இருக்கும்.....

"ட்ரிங்... ட்ரிங்...."

டெலிபோன் பிசாசு என்னைத் தின்னாமல் விடாதோ? டெலிபோன் எமனின் அவதாரமோ?

"ட்ரிங் —"

"ஹலோ!"

"கணேஷ்தான் பேசுகிறேன் மன்னி...."

"அப்பா, உனக்குக் கோடிப் புண்ணியம். என்னை நிம்மதியாக வாழத்தான் விடவில்லை. நிம்மதியாகச் சாகவாவது விடேன்."

"நான் திருந்திவிட்டேன், மன்னி...."

"நான் திரும்பி வராத உலகத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்."

"உன் உதவி எனக்கு வேண்டும்."

"நான் ஏசுகிறிஸ்து இல்லை, மறு ஜன்மத்தைக் காட்ட."

"மன்னி! — உன்னால்தான் என்னைக் காப்பாற்ற முடியும்."

"இப்போது என்னையே யாராலும் காப்பாற்ற முடியாது."

"ஒரே ஒரு முறை உன்னைப் பார்க்க வேண்டும்."



அதிசய ஒற்றுமை விடை:

அவர்கள் எல்லோரும் இடது கைக்காரர்கள். விக்டோரியா காலத்தில் இடது கையால் எழுதும் பையனையோ, சிறுமியையோ பேயின் ஆசாமியாகப் பார்த்தார்கள். இதற்குரிய தண்டனைகளும் அப்பொழுது வழங்கப்பட்டன. இடது கையைப் பின்னால் கட்டி வைத்து விட்டு வலது கையினால் வலுக்கட்டாயமாக எழுத வைத்ததும் உண்டு. இடது கையைப் பயன்படுத்துவதற்காகப் பிரம்படி பட்டவர்களும் உண்டு. வெந்நீரில் முக்கி இதைத் தடுக்க முயன்றார்கள்!

பலாத்காரமாக இடது கைக் குழந்தைகளை வலது கைப் பக்கம் திருப்ப முயன்றால் பயங்கர விளைவு ஏற்படும்.

லண்டனில் இரு கையையும் பயன்படுத்தும் கழகம் (Ambidextral Society) இந்தத் திறமையை வளர்க்க ஏற்படுத்தப்பட்டது. சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்த பேடன் பவல் 'இரு கை' வித்தகர். அவர் தம் கையெழுத்தை இரு கைகளாலும் போடக் கூடிய சாமர்த்தியம் படைத்தவர்.

சாரணர் இயக்கத்தில் இடது கை குலுக்குவதை பேடன் பவல் ஆரம்பித்து வைத்தார்.

'எழுத்து மறதி' வியாதி (dyslexia) இடது கைக்காரர்களுக்கே வருகிறதாம்.

ஆதாரம்: மைக்கேல் பார்லே கட்டுரை

பி. எஸ். எம்.



"என் பிணம்கூட உன்னுடைய முகத்தில் விழிக்காது."

"நான் நல்லவன். என்னை நம்பு மன்னி."

"நான் நல்லவன் என்பதை நம்ப வைக்க முடியவில்லையே......!"

"மன்னி!"

"என்னைப் பார்க்க வராதே..... என்னுடன் பேச நினைக்காதே..... என்னை நினைக்கவே நினைக்காதே..... நான் நிம்மதியாகச் சாக வேண்டும்."

"மன் —"

"— டக்!"

பதினைந்து வருடக் குடித்தனத்தில் பழியை மட்டும் சுமந்தபடி மடிய வேண்டியதுதான் என் தலையெழுத்து.

எனக்கு ஒரு குழந்தை இருந்தால் அவர் மனத்தில் அதன் பொருட்டு என்றாவது ஈரம் பிறக்குமே.....! என்னை மன்னிக்க அல்லது என் மீது மனதார நம்பிக்கை வைக்க என் குழந்தை ஒரு பாலமாக இருந்திருக்கும்.

இணைப்பதற்குப் பாலமில்லை. இரு கரையும் தொட வழியுமில்லை. இனிமேலும் எந்த நம்பிக்கையோடு நான் வாழ்ந்துவிடப் போகிறேன் ?

நான் சாகத் துணிந்து விட்டேன்.

மரணம் சமீபிக்கும்போது மனம் நிம்மதியாக இருக்க வேண்டும். இல்லையென்றால் மீண்டும் இந்த மனிதப் பிறவிக்கு ஆசைப்பட்டு அலைமோதி மடிய வேண்டும். மரணத்தைத் தவிர வேறு எதையும் யாரையும் நினைக்கப் போவதில்லை.

என் மரணத்தால் வருந்தப் போகிற கணவரையும் நினைக்க மாட்டேன்.

என் மரணத்துக்குக் காரணமான கணேஷையும் நினைக்கமாட் —

''கிர்ரிங்... கிர்ரிங்....''

ஆவேசத்துடன் டெலிபோனை எடுக்கிறேன்.

''கணேஷ் ! உனக்கு எத்தனை தடவை ?''

இதயம் அதிர்கிறது. டெலிபோனில் கணேஷ் இல்லை, என் கணவர். பெங்களூரிலிருந்து 'ட்ரங்க்கால்' !

''ஹலோ... நான்.... சத்தியமாக..... ஆமாம்.... என்னை நம்புங்கள்.... அவனிடம் சொன்னேன்..... என்னைப் பார்க்காதே... என்று..... இல்லை... சத்தியமாக நாடகமில்லை.... ஐயோ, சதா அவன் நினைவாகவே இருக்கிறேனா? ஆண்டவனே.... ஐயோ ! என்னை நம்புங்கள்.... என்னோடு பேசாதே என்று எச்சரித் — ஹலோ.... ஹலோ....?''

துண்டிக்கப்பட்டு விட்டது.

டெலிபோன் மட்டுமல்ல; என் நம்பிக்கையுந்தான் !

என் மரணத்துக்குப்பின் அவருக்கு வரவிருந்த தனிமைத் தவம் இந்தப் பிரிவுக் காலத்திலேயே வந்திருக்க வேண்டும். தனிமை கசந்து அவராகவே மனம் மாறி வர இருந்தாராம். அவர் கேட்ட முதல் வார்த்தையே—

''கணேஷ் !''

என் விதிக்கு நானே வேலியை அகற்றி வழி வைத்திருக்கிறேன்.... என் அழிவுக்கு நானே ஆரத்தி கரைத்து வைத்துக் காத்திருக்கிறேன்.

இருந்த ஒரே நம்பிக்கையும் முறிந்து போய் விட்டது. இனிமேல் ஒருகணம்கூடத் தாமதிக்க வேண்டாம்.

நான் விழுங்கும் தூக்க மாத்திரைகள் இன்னும் சற்று நேரத்தில் என்னையே விழுங்கி விடும்.....

'' ஆண்டவனே ! எனக்கு விடுதலை கொடு !''

''க்வா....க்வா....''

குழந்தையின் அழுகுரல் !

என் வீட்டிலா ! இருக்காது. பிரமைதான்..... சாவைத் தழுவும் மலடியைப் பார்த்து ஆண்டவன் எழுப்பும் பரிகாசக் குரல்..... மலடியின் வீட்டில் மழலையின் நாதமா ? என்னால் நம்ப முடியவில்லை.

''க்வா.... க்வா....''

சுவரைத் தடம் பிடித்து வாசலுக்கு வருகிறேன்.

குழந்தை !

பஞ்சுப் பொதி போல் கம்பளியில் சுற்றிப் பொதிந்து வைக்கப் பட்டிருக்கும் பூப்பந்து... பிஞ்சு விரல்கள் காற்றில் துடிதுடிக்கின்றன... பிறந்து பத்து நாட்கள்கூட இருக்காது...

யார் குழந்தை...? அனாதைக் குழந்தையா? அல்லது அனாதைக்கு ஆதரவாக வந்துவிட்ட ஆண்டவனின் குழந்தையா?...

குழந்தையை வாரி எடுக்கிறேன்.

பிஞ்சு விரல்களிலிருந்து பிரிந்து விழுகிறது கடிதம். கணேசன் எழுதியிருக்கிறான்.

'அம்மா!

மன்னி என்ற என் அழைப்பில் நீ பொய்யான உறவைத்தான் உணர்ந்தாய். அம்மா என்ற இந்த அழைப்பில் உன்னால் போலி வேஷத்தையோ பொய்யான உறவையோ காண முடியாது. அந்த அழைப்புக்காக ஏங்கி நிற்பவள் நீ என்பது என் நெஞ்சுக்குத் தெரியுமே!...

நிர்மலையை நான் வெறுத்தேன். அந்த வெறுப்பே உன் நிம்மதியை நிர்மூலமாக்கியது என்பதால் வேதனைப்பட்டேன். உன் வேதனைக்கு விடிவு வரவேண்டும் என்பதற்காக நிர்மலையை மணந்தேன். அவள் மேல் எனக்குக் காதல் பிறக்கவில்லை. உன் மேல் உள்ள கறை நீங்குமோ என்ற காரணத்துக்காக...

அவளும் நானும் வாழ்ந்த வாழ்க்கைக்கு இந்த அறியாக் குழந்தைதான் அடையாளச் சின்னம். உனக்குச் செய்த துரோகத்துக்குத் தண்டனை — பிரசவத்தில் இந்தக் குழந்தை மட்டும்தான் மிச்சம். நிம்மி போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து நானும் போய் விடுவேன். என் குழந்தைக்கு நீ இருக்கிறாய் என்ற நம்பிக்கையில்தான் வந்தேன்.

டெலிபோனிலும் பேசவில்லை.

என் முகத்தைப் பார்த்தால்கூட இந்தக் குழந்தையை வெறுத்துவிடப் போகிறாயோ என்பதால் என் கண்ணீரைக் கடிதமாக்கி இந்தக் குழந்தையின் கையில் கொடுத்துவிட்டுப் போகிறேன். என்னை வளர்த்த நீதான் என் குழந்தைக்கும் அன்னை. — கணேஷ்'

'கணேஷ்!'

என் இதயம் விம்முகிறது.

வாழத் துடிக்கும் குழந்தை வாஞ்சை தேடி அழுகிறது. வாழ்க்கையை முடித்துக்கொள்ளத் துடித்தவள் குழந்தைக்கு வாழ்வு தர வேண்டிய பொறுப்பை உணர்கிறேன்.

'ராதா' என்ற மனைவி மீது விழுந்த கறையைப் பற்றி 'ராதா' என்ற அன்னை கவலைப்படப் போவதில்லை.

அண்ணியாக வாழ்ந்த கதை அப்போதே முடிந்து விட்டது. அன்னையாக வாழவேண்டிய கடமை இந்தக் கணம் முதல் தொடங்குகிறது.


பொங்கி வரும் கண்ணீரைப் பிஞ்சு விரல்கள் துடைக்கின்றன.

நான் வாழத் துணிந்து விட்டேன்.

'எதற்காக வாழ வேண்டும்' என்று மட்டும் கேட்காதீர்கள். 'எதற்காகச் சாக வேண்டும்' என்று திருப்பிக் கேட்டு விடுவேன்.

உங்களால் பதில் சொல்ல முடியாது!

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31.
Managing Editor: T. Sadasivam



ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)